...கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

...ர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 19 ஞாயிற்றுக்கிழமை (01.06.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 187

## வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு

# கூடுதல் அதிகாரம் வழங்கும் அரசின் திட்டம் புலிகளால் நிராகரிப்பு

### ...ரசியல்துறைப் பொறுப்பாளர் செவ்வி

கொழும்பு, ஜூன் 1

...டக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கும் ...சாங்கத்தின் உத்தேச அதிகாரப் பரவல் திட்டத்தை விடுதலைப் புலிகள் ...கரித்துள்ளனர்.

...மிழர்களின் இறைமை, சுயநிர்ணயம் ஆகியவற்றை அங்கீகரித்தால் ...மே பேச்சுவார்த்தை மூலமான தீர்வைக் காண்பதற்கான சூழ்நிலையை ...க்க முடியும் என்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் ...டேசன் வழங்கிய செவ்வி ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

...னர் விடுதலைப் புலிகளின் கட்டுப் ...ல் இருந்த பகுதிகளில் உள்ளூராட்சி ...ளுக்கு அரசாங்கம் தேர்தல் நடத்திய முறை, தீர்வுக்கான எந்த அடிப்படை யையும் கொண்டிருக்கவில்லை என்றும் அவர் சாடினார்.



சமாதானத்துக்கான அனுசரணையாள ரான நோர்வே, விடுதலைப் புலிகளின் தலை

(16ஆம் பக்கம் பார்க்க)

### அரிசியும் சீனியும் இன்று துறைமுகத்துக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 1

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அரிசி, சீனி தட்டுப்பாட்டை அடுத்து 'டப்லின்' கப்பல் மூலம் இன்று அந்தப் பொருள்கள் எடுத்து வரப்படுகின்றன.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் இத்தக வலைத் தெரிவித்தார்.

500மெற்றிக் தொன் அரிசி, 500மெற் றிக் தொன் சீனி ஆகியன இக்கப்பல் மூலம் இன்று காங்கேசன்துறைக்கு வந்து சேரும் என்று தெரிவிக்கப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

### ...வள்ளவத்தையில் கிரனேட்தாக்குதல் ...் தமிழ் இளைஞர் பலி; எண்மர் காயம்

கொழும்பு, ஜூன் 1

...வெள்ளவத்தையில் காலி வீதியில் 'ஆர்ப் ...கா' காட்சியறைக்கு முன்பாக நேற் ...! 8.45 மணியளவில் இடம்பெற்ற கிர ...ட தாக்குதலில் இரு தமிழ் இளைஞர் ... பலியானார்கள்; எட்டுத் தமிழர்கள் காய மடைந்தனர்.

அந்தப் பகுதியில் உள்ள பஸ் தரிப்பு நிலை யத்திலேயே இந்த கிரனேட் தாக் குதல் இடம் பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இத்

(16ஆம் பக்கம் பார்க்க)

### கர்ப்பப்பைக்கு வெளியே வளர்ந்த முதலாவது அதிசயக் குழந்தை தூர்க்கா!

டார்வின், ஜூன் 1

முழுக் கர்ப்பக்காலத்திலும் கருப்பைக்கு வெளியே வளர்ந்த அதிசயக் குழந்தையை ஆஸ்திரேலியாவில் வசிக்கும் இலங்கைத் தமிழ்ப் பெண் ஒருவர் பெற்றெடுத்துள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த மீரா தங்கராஜா (வயது 34) என்ற தமிழ்ப் பெண் ஆஸ்திரே லியாவின் டார்வின் நகரில் உள்ள ஒரு தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டார். அங்கு அவருக்கு அறுவைச் சிகிச்சை "சிசேரியன்" மூலம் குழந்தை பிரசவிக்கப்பட்

(16ஆம் பக்கம் பார்க்க)

# மாகாண சபைகளுக்கு அதிகாரப் பரவல் செய்வதே இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரே வழி

### ...ழக்கின் முதலமைச்சர் சந்திரகாந்தன்

பதுளை, ஜூன் 1

...ந்திய அரசாங்கத்திடம் குவிந்துள்ள அதி ...களை மாகாண சபைகளுக்கு பரவல் ...வதே இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற் கான ஒரே வழி. அதனைச் செய்வதற்கு அர சாங்கம் துரிதமாகச் செயற்படவேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தி உள்ளார் கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சிவநேச துரை சந்திரகாந்தன்.

பதுளையில் நேற்று நடைபெற்ற மாகாண சபைகளின் முதலமைச்சர்களின் 24 ஆவது மாநாட்டில் பேசுகையில் அவர் அதிகாரப் பரவல் குறித்துத் தெரிவித்தார்.

நேற்றைய மாநாட்டில் முதலமைச்சர் மாநாட் டின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பின் னர் சந்திரகாந்தன் அங்கு உரையாற்றினார்.

அவர் தமது உரையில் -

இப்போதுள்ள மாகாண சபைகள் முறை வெறும் பெயரளவிலேயே மட்டுப்படுத்தப்

(16ஆம் பக்கம் பார்க்க)

### ...கிராண்ட்பாஸ் ...ின் நிலையத்தில் ...ண்டு வெடிப்பு

கொழும்பு, ஜூன் 1

...காழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் மின் ...யோக நிலையம் ஒன்றில் நேற்றிரவு ...மணியளவில் குண்டு ஒன்று வெடித்தது.

இதன் காரணமாக அந்த நிலையத்தில் ...ன்சாரம் பெறும் பகுதிகளுக்கான விநி ...ம் பாதிக்கப்பட்டது. (அ-01)

# முல்லை., மன்னார், வவுனியா மாவட்ட மக்கள் ஷெல் வீச்சினால் கிளிநொச்சிக்கு இடம்பெயர்வு

வவுனியா, ஜூன் 1

மன்னார், வவுனியா மற்றும் முல்லைத் தீவு மாவட்டங்களின் எல்லைப் புறங்க ளில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் தற்போது தொடர்ச் சியாக எறிகணை வீச்சு, மோதல்கள் இடம் பெற்று வருகின்றன. அதனால் அந்தப் பகு திகளைச் சேர்ந்த மக்கள் பாதுகாப்புத் தேடி நாளாந்தம் கிளிநொச்சிக்கு இடம்பெயர்ந்து சென்றுகொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்து கொண்டிருக் கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள் கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இவர்களுக்கான நிவாரண உதவிகளை

(16ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அரச ஊழியர்களுக்கு தற்போது சம்பளம் அதிகரிக்கப்படமாட்டாது

கொழும்பு, ஜூன் 1

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் அரசின் வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பிக் கப்படும் வரை அரச ஊழியர்களுக்கு சம் பள உயர்வேதும் வழங்கப்பட மாட்டாதென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில் சம்பள அதிகரிப்பு வழங்குவதை விட வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் விதத்தில் பொது மக்களது பாவனைப் பொருள்களது விலையைக் குறைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்வதே பொருத்தமானதாக அமையும் எனவும், அதற்கான அவசிய நடவடிக்கைகள் சில எதிர்வரும் நாள்களில் மேற்கொள்ளப்பட விருப்பதாகவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாள்களின் முன்னர் செய்திப் பத்திரிகைகளின் ஆசிரியர் களுடனான சந்திப்பொன்றின்போதே ஜனாதிபதி மேற்குறித்த தகவலை வெளியிட்டிருந்தார். (1-03)


உள்நாட்டு வெளிநாட்டுகளிற்கான!
துரித தபால்கள் பொதிகள் சேவை
FedEx Express
வாடிக்கையாளரின் நலன்கருதி லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 750/= ரூபா வீதமும். கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 850/= ரூபா வரையான விசேட சலுகை.
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
நீங்கள் குறிப்பிடும் எந்த முகவரியிலும் ஒப்படைக்கப்படும்
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள
WESTERN UNION
குறிப்பு:-நீங்கள் அனுப்பப்படும் பொதிகளிற்கு காப்புறுதி உண்டு.
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியையும் முன்னாள் ஆசிரியர் சூ.பாலயோகனின் அன்புத் துணைவியாருமான

### திருமதி சீதாலட்சுமி பாலயோகன்

25.05.2008 ஞாயிறு அன்று லண்டனில் காலமான செய்திகேட்டு ஆழ்ந்ததுயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

(சி/553072)

### கட்டுரையாளர் செல்லப்பா நடராசா

இன்றை உதயனின் 3ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள, '60 வருடங்களுக்கு முன்னர் தெற்கில் தனிச் சிங்களச் சட்டத்தால் மூட்டப்பட்ட இனவாதத் தீ இன்னமும் கொழுந்துவிட்டவாறே...' என்ற கட்டுரையை எழுதியவர் மூத்த பத்திரிகையாளர் செல்லப்பா நடராசா ஆவார். தொழில்நுட்பத் தவறு காரணமாக படத்தின் கீழ் அவரது பெயர் பதிவாகவில்லை.

## கம்பஹா மாவட்ட எம்.பி. றெஜி ரணதுங்கா காலமானார்

கொழும்பு,ஜூன் 1

நாடாளுமன்ற உறுப்பினர் றெஜி ரணதுங்க நேற்றுக் காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது(71). சபரகமுவ மாகாண சபையின் ஆளுநராகவும் இருந்துள்ள இவர் கம்பஹா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி நாடா ளுமன்றத்துக்கு பல தடவைகள் தெரி வானார்.

றெஜி ரணதுங்க இலங்கை கிரிக்கட் அணியின் முன்னாள் அணித் தலைவரும் நாடாளுமன்ற உறுப் பினருமான அர்ஜூன் ரணதுங்காவின் தந்தையுமாவார்.

ஐக்கிய மக்கள் முன்னணி உறுப்பினர் நெல் ரூபசிங்க அவரது இடத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. (அ-05)

## வீதி புனரமைப்பு நிதி ஒதுக்கீடு

நல்லூர், ஜூன் 1

வேலணை திருவள்ளுவர் வீதி, புனரமைப்புக்கென ரூபா 15 லட்சமும் காரியாலய தளபாடக் கொள்வனவுக்காக ரூபா 5 லட்சமும் வேலணை பிரதேசசபைக்கு மாகாண சபை நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக பிரதேச சபை செயலாளர் தெரிவித்தார். (1-111)

## பெண் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

பேருந்தில் மிதி பலகையில் பயணித்த பெண் தவறி வீழ்ந்து காயமடைந்தார். இச்சம்பவம் நேற்று கொடிகாமத்தில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ஜெயமரி (வயது 32) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.


படிவம்
2009 ஆம் ஆண்டில் அரசாங்கப் பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை அனுமதிப்பதற்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.
முடிவுதிகதி 30.06.2008
Bharathy Pathippakam,



இதோ உங்களுக்காக...!
MP3 PEN DRIVE Orange • 1 GB (Data) • FM Radio • MP3 • Voice Recording • USB Cable • Head Phone 6,250/-
• 1 GB • FM Radio • MP3 • USB Cable • Head Phone 4,750/-
MP4 PLAYERS Orange 10,500/-

PROCESSOR
Intel 1.8Ghz Celeron - 4900/=
Intel Pentium 3.0Ghz - 7800/=
Intel Pentium 1.6Ghz 1M Dual Core - 7750/=
Intel Pentium 1.8Ghz 1M Dual Core - 7900/=
Intel Pentium 2.0Ghz 1M Dual Core - 8400/=
Intel Pentium 3.4Ghz 2M - 8900/=
Intel Pentium 2.4Ghz 2M Core 2 Duo - 14500/=
Intel Pentium 2.4Ghz 8M Core 2 Quad - 29500/=

RAM
256MB SD Ram - 2400/=
1GB Kingston DDR-11 - 2800/=
512MB Kingston DDR-1 - 3200/=
1GB Kingston DDR-11 (lap top Ram) - 4500/=

PRINTERS
HP D1460 Deskjet (color) - 4750/=
Printer/Fax/Copy 3 in 1 - 14800/=
Samsung ML2010 Laser jet - 15000/=
Epson LQ300+11 Dotmatic - 20800/=
Epson C90 (color) - 6750/=
HP 2600N Laser jet (color) - 56000/=

WOOFERS
Logic tec 2.1 - 3500/=
Creative 2.1 (SBS380) - 3750/=
Micro Lap 2.1 - 3800/=
Micro Lap 5.1 - 6900/=
Creative 5.1 (SBS580) - 8400/=
Mini Woofers 2.1 - 2500/=
Multimedia Speakers - 750/=

DVD WRITER
BenQ CD R/W - 2900/=
Samsung DVD R/W 20x - 3750/=
Samsung DVD R/W 22x - 3900/=
Sony DVD R/W - 4250/=
Asus DVD R/WLight scribe - 4300/=
HP DVD R/WLight scribe - 4300/=
Combo - 3250/=

MP3/FM Radio Player for Vehicles 3,800/-

HP Note Book (Lap Top)
Processor Intel Core 2 Duo 2.16Ghz : Screen 15"4' WXGATFT Display : HDD 120GB : RAM 1GB DDR11 : CD/DVD R/W Double Layer : Video GMA950 224MB : WIFI 802.11A-G :
One Year International Warranty

ACCESSORIES
Internal TV Cards - 3250/=
External TV Combo Box - 3400/=
External TV Combo Box for LCD - 4900/=
All in one Lap top Charger - 3250/=
Wireless Key Boards & Mouse set - 4750/=
8 GB Kingston USB - 4900/=
Internal Modem - 900/=
PS2 Key boards - 500/=
Speakers - 750/=
Handle Casing - 4750/=
USB Hub - 450/=
Cartridge Refill Ink - 1200/=

MONITORS
Samsung 15" Black CRT - 11250/=
Samsung 17" Black CRT - 13900/=
View Sonic 17" Wide Screen LCD - 23000/=

MOTHER BOARDS
MSI DDR11 - 4750/=
ESC Intel 945 1333Mhz - 5400/=
Asrock 1333-D667 - 5600/=
Foxconn DDR11 Intel - 6000/=
Biostar 478 DDR11 - 6900/=
Intel Original 945CGNL - 8450/=
Giga Byte 945 GCM - 6300/=
Energy 478 DDR1 - 6400/=

TONER
HP 12A - 5250/=
HP 15A - 5300/=
HP 49A - 5300/=

JOY STEAK
String with Gear Box - 6750/=

HARD DISK
40GB IDE - 3500/=
80GB Sata - 4900/=
160GB Sata - 5900/=
250GB Sata - 7900/=

SCANNER
Cannon LIDE25 - 6400/=
HP Scanner - 9500/=
Negitive Scanner - 12500/=
Warranty Valid for 1-3 years

UPS
Mercury Elite 600pro - 5750/=
Prolink 650W - 6000/=
Power Tree 650W Original - 6000/=
Personal 650W - 6350/=
Power Tree 1.2KV (1250W) - 12900/=

MUSIC WORLD & COMPUTERS
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. 021 222 6554.
(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)


# மரண அறிவித்தல்கள்

## செல்வி புஷ்பரட்ணவதி இராசரெத்தினம்



வேலணையைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி புஷ்பரட்ணவதி இராசரெத்தினம் நேற்று (31.05.2008) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலணை வைத்தியரும் அதிபருமான சிதம்பரப்பிள்ளை இராசரெத்தினம் - காலஞ்சென்ற ஆசிரியை திருமதி உருக்குமணி தம்பதியரின் அருமை மகளும் பேராசிரியர் இரா. சிவசந்திரன் (தலைவர், சமூகவியற்றுறை - யாழ். பல்கலைக்கழகம்), திருமதி புஷ்பா கணேசலிங்கம் (முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்- தென்மராட்சி), திருமதி பு. சின்னையா (விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவகம்), திருமதி இராசமலர் சற்குணநாதன் (ஆஸ்திரேலியா), திருமதி சிவமலர் செகராசா (இளைப்பா றிய உபஅதிபர்), காலஞ்சென்ற இரா. பாலசந்திரன் (உதவி முகாமையாளர், மக்கள் வங்கி), இரா. ஜெயசந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி சரோஜா சிவசந்திரன் (இயக்குநர், மகளிர் அபிவிருத்தி நிறுவனம்), சோ. கணேசலிங்கம் (இளைப்பாறிய கொத்தணி அதிபர்), காலஞ்சென்ற த. சின்னையா, க. சற்குணநாதன் (பரிஸ்ரர், ஆஸ்திரேலியா), மாலினி ஜெயசந்திரன் (ஜேர்மனி), திருமதி சிவபாக்கியம் பாலசந்திரன், க. செகராசா (மலேரியா தடுப்பு நிறுவனம்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் திருமதி வளர்மதி விவேகானந்தன் (கனடா), க. அருள் (விரிவுரையாளர் - சட்டப்பீடம் கொழும்பு பல்கலைக்கழகம்), கலாநிதி சிவமதி சிவசந்திரன் (பீடாதிபதி - விவசாயபீடம், யாழ். பல்கலைக்கழகம்), வைத்திய கலாநிதி க. அருள்மொழி (குழந்தை வைத்திய நிபுணர், யாழ். போதனா வைத்தியசாலை), கலாநிதி க. அருள்ராஜ் (லண்டன்), திருமதி அனுஷா ரவிக்குமார் (கனடா), வைத்திய கலாநிதி கவிதா சூரியகுமார் (லண்டன்), கலாநிதி நர்மதா குருபரன், செல்வி. ச. விஜிதா (ஆஸ்திரேலியா), செல்வி செ.அகல்யா (விவசாயபீடம் -யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புச் சித்தியும் வைத்திய கலாநிதி யாழினி அரவிந்தன் (கனடா), சி.பாரதி, திருமதி சர்மிளா சிவநாதன், கிருஷ்ணா, ஜெ. ராஜ்குமார், ஜெ.கிரிதரன் ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2008) ஞாயிற்றுக்கிழமை இல. 07, இரத்தினம் ஒழுங்கை, வண்ணார்பண்ணை இல்லத்தில் முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*07, இரத்தினம் ஒழுங்கை,*
*வண்ணார்பண்ணை.*
(74974)

தகவல்:
பேராசிரியர்
இரா. சிவசந்திரன் (சகோதரன்)
தொலைபேசி:
021 2222454/021 2223274.

## இராசா கந்தவனம்



ஏழாலை தெற்கு, களவாவோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசா கந்தவனம் நேற்று (31.05.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பாக்கியத்தின் அன்புக் கணவரும் இம்மனுவேல் (கனடா), லோறன்ஸ், பத்மாவதி, காலஞ்சென்ற அல்பிறேட் மற்றும் மரியதிரேசா (கனடா), போல் ஆனந்தம் (கனடா), மரியஅன்ரன் (கனடா), மரியலோறற்ரா (கனடா), யூட் விஜயன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜோண்பிள்ளை (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்- இ.போ.ச.), சசிகலா, பிறேமா, அற்புதராணி, துரைசிங்கம், றஞ்சி, சுசி, சுரேஸ், பூவாசினி ஆகியோரின் பாசமிகு மாமனும் பொன்னுதுரை, நவரத்தினம், தங்கம்மா காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (02.06.2008) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் புனித இசிதோர் ஆலயத் தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் ஏழாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏழாலை தெற்கு,*
*ஏழாலை.*
(74975)

தகவல்:
ஜோன் பத்மா (மகள்).

## திருமதி சுப்பிரமணியம் புவனேஸ்வரி



அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் புவனேஸ்வரி நேற்று (31.05.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், அமரர் கதிர் காமு சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், அமரர் வை.சரஸ்வதி, அமரர் வல்லிபுரம் தர்மலிங்கம், அமரர் சின்னத்தம்பி மகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சு.மகேஸ்வரன் (மதுரன் கிறாபிக்ஸ் அன் ஒவ்செற் பிறின்ரேர்ஸ், அல்வாய்), சு.புவனேஸ்வரன் (சுவிஸ்), சு.வாகீஸ்வரன் (சுவிஸ்), திருமதி ஜெயவீரசிங்கம் சத்தியவாணி ஆகியோரின் அன்புத் தாயும், திருமதி ம.வாசுகி, திருமதி பு.பத்மாவதி, திருமதி வா.புஸ்பராணி, பா.ஜெயவீரசிங்கம் ஆகியோரின் பாசமிகு மாமியும், அமரர் கா.க.கிருஷ்ணபிள்ளை (அதிபர்), திருமதி இராசையா பரமபதி, திருமதி சி.தனாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும், திருமதி சொரூபி மயூரன், செல்வி ம.அபிராமி, திருமதி மாருதி கோபிநாத், செல்வி ம.கீர்த்தனா, செல்வன் ம.மதுரன், செல்வன் பு.நவீனன், செல்வன் வா.எழிலன், செல்வன் வா. கீர்த்தனன், ஜெ.கோவர்த்தனன் (மலேசியா), செல்வி ஜெசாருகேசி, செல்வன் ஜெ.பரணீதரன், செல்வி ஜெ.சாதுர்யா, செல்வி ஜெ.சரண்யா, ம.மயூரன், ம.கோபிநாத் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் செல்வி ம. இலக்கியாவின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2008) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*மதுரா,*
*அல்வாய் வடமேற்கு,*
*அல்வாய்.*
(சி/553676)

தகவல்:
சு.மகேஸ்வரன் (மகன்).
(உரிமையாளர், மதுரன் கிறாபிக்ஸ் அன் ஒவ்செற் பிறின்ரேர்ஸ், அல்வாய்).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 60வருடங்களுக்கு முன்னர் தெற்கில்

# தனிச் சிங்களச் சட்டத்தால் மூட்டப்பட்ட இனவாதத் தீ இன்னமும் கொழுந்துவிட்டவாறே...

ஜூன் மாதம் 5ஆம் திகதியை இலங்கைத் தமிழ் இனம் தனது சரித்திரத்தில் என்றுமே மறக்கமாட்டாது; மறக்கவும்முடியாது. காரணம் 1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் திகதி தான் இலங்கை நாடாளுமன்றத்தில் சிங்களம் மட்டும் மசோதா கொண்டு வரப்பட்டது. மேலும் இத்தினம் இன்னொரு வகையிலும் தமிழ் பேசும் மக்களால் நினைவு கூரப்பட்டு வருகிறது. சிங்

*60 வருடங்களுக்கு முன்னர் - 1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் திகதி சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப் பட்டு காலிமுகத்திடலில் தமிழர்கள் சத்தி யாக்கிரகம் செய்த காலத்திலேயே பத்திரி கையாளராக பணிபுரிந்தவர் கட்டுரையாளர். அன்றைய அரசியல் பின்னணியையும் சம்பவங்களையும் பின்நோக்கிப் பார்க்கிறார்.*

களம் மட்டும் என்ற அரசின் நிலைப்பாட்டிற்கு எதிராக அகில இலங்கை தமிழரசுக் கட்சியினரால் கொழும்பு காலி முகத்திடலில் மாபெரும் சத்தியாக் கிரகப் போராட்டம் ஒன்று மிக வெற்றிகரமாக நடத்தப்பட்டதும் இதே தினத்தில்தான்.

சிங்களம் மட்டும் என்பது இந்த நாடு முழுக்க முழுக்கச் சிங்களத்திற்கு மட்டும் தான் என்றும் பொருள்படும். சிங்களம் மட்டும் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு இன்று ஐம்பது வருடங்கள்-ஐந்து தசாப்தங்கள்-கடந்துவிட்டன. அன்று கொழுந்து விட்டெரியத் தொடங்கிய இனப்பூசல் எனும் நெருப்பு இன்றுவரை தொடர்ந்து எரிந்துகொண்டே இருக்கிறது.

### சிங்களமொழி நிர்ப்பந்தங்கள்

சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப் பட்டபொழுது தமிழுக்கு நியாயமான அளவு உபயோகம் வழங்கப்படும் என்ற வாக்குறுதியை அன்றைய பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர். டி.பண்டார நாயக்காவின் அரசு அடிக்கடி கூறி வந்தது. ஆனால் நடைமுறையில் எதுவுமே செய்யப்பட வில்லை. மாறாகத் தமிழ் அரச ஊழியர்கள் சிங்களத்தில் தேர்ச்சி பெறவேண்டும் என நிர்ப் பந்திக்கப்பட்டனர். சிங்களத் தில் தேர்ச்சி பெற மறுத்த தமிழ் ஊழியர்களின் சம்பள உயர்வுகள் மறுக்கப்பட்டன. அவர்களது பதவி உயர்வுகள் நிறுத்தப்பட்டன. வாகன இலக்கத் தகடுகளில் சிங்கள "ஸ்ரீ" புகுத்தப்பட்டது. இவையெல்லாம் பழைய வரலாற்றுடன் ஒன்றாகிவிட்ட கதைகள்.

### குன்றக்குடி அடிகளார் கூறியது

ஒருசமயம் 1950களின் நடுப்பகுதியில் கொழும்புக்கு வருகை தந்திருந்த தவத்திரு குன்றகுடி அடிகளார், கொழும்பு தமிழ்ச்சங்கத் தில் உரை நிகழ்த்தினார். ஓர் இனத்தின் உயி ரோட்டம் அதன் மொழியே என்று அடிகளார் குறிப்பிட்டது இன்றும் எனது மனதில் ஆழப் பதிந்திருக்கிறது. மொழி ஒன்று தனது உயி ரோட்டத்துடன் இருந்தால்தான் அதற்குரிய இனமும் உயிரோட்டத்துடன் நிலைத்து நிற் கும் என்பதும் குன்றக்குடி அடிகளின் கருத்தாக இருந்தது. இதைத் தான் தந்தை செல்வாவும் தமது வாழ் நாளில் என்றும் மிகமிக நிதானமாக வற்புறுத்தி வந்தார்.

### தந்தை செல்வா சொன்னது

அப்பொழுது 'தினகரன்' நாளிதழில் நான் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். 1957ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி தந்தை அவர்கள் எனக்களித்த சிறப்புச் செவ்வி ஒன்றில் -

*தமிழ்மக்களாகிய நாம் சலுகைகளில் தங்கி எங்கள் வாழ்வை நடத்துவது வெட் கமும் துக்கமுமான காரியம். நாம் கோரி நிற்பது, நாம் எல்லோரும் இலங்கையில் சுதந்திர மக்களாக*



*வாழவேண்டும் என்பதே. எங்களது பிறப்புரிமைகளில் ஒன்றான மொழி உரிமை பூரணமாகக் கிடைக்கும் வரைக்கும் அரசாங்கம் கையாண்டு வரும் தனிச்சிங்கள மொழிக்கொள்கையை முற்றாகத் தமிழ் மக்கள் எதிர்க்கவேண்டும்.*

*நாம் அழியவேண்டிய விதி இருந்தால் அழிந்து போவதற்கு ஆயத்தம். ஆனால் எங்கள் நடைமுறையால் அடிமைகள் ஆவதற்கு நாம் ஒருபோதும் சம்மதிக்கமாட்டோம்" என்று குறிப்பிட்டார்.*

### சபையில் பிரதமர் கூறியது

தந்தை செல்வா இவ்வாறு என்னிடம் கூறுவதற்கு இரண்டொரு தினங்களுக்கு முன்னர், பிரதமர் எஸ். டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க, அன்றைய சனப்பிரதிநிதிகள் சபையில் தமிழ்

**எங்கள் நடைமுறையால் அடிமைகள் ஆவதற்கு நாம் ஒருபோதும் சம்மதியோம்**
**- தந்தை செல்வா**

மொழிக்குச் சலுகைகள் அளிப்பது பற்றி விடுத்த அறிக்கை ஒன்றுக்கு பதில் கொடுக்கும் முகமாகவே தந்தை அவ்வேளையில் தமது கருத்தை வெளியிட்டார். இவை சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப் பட்டதற்குப் பின்னர் பண்டா-செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு முன்னர் உள்ள செய்திகளாகும்.

### சிங்களக் கட்சிகளின் பாசாங்குகள்

நான் அறிந்த வரையில் 1960ஆம் ஆண்டு ஜூலை மாதப் பொதுத் தேர்தல் 1965, 1970, 1977 ஆண்டுப் பொதுத்தேர் தல்களின்போது எதிர்க்கட்சி ஆசனங்களை அலங்கரித்த சிங்களத் தலைமைகள் எல்லாம் தமிழ் பேசும் மக்களுக் காக மிகமிகப் பரிந்து பேசியது ஞாபகம்.

1960ஆம் ஆண்டு ஜூலை மாதப் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் தமிழரசுக்கட்சியினருடன் இணங்கிப்போவது போன்று பாசாங்கு செய்துகொண்டு வெற்றியும் பெற்றனர். ஆனால் பின்னரோ, தமிழரசுக் கட்சியினருடன் அவர்கள் இணங்கிப் போகவில்லை; பிணங்கியே போனார்கள்! தமிழ் மாணவர்களுக்கான தரப்படுத்தல் விவகாரம் பூதாகாரமாக வெடித்தது இவர்கள் காலத்தில் தான். 1965ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் தமிழ் பேசும் மக்களுடைய அனுதாப அலையுடன் சேர்ந்தே டட்லி சேனா நாயக்காவும் பிரதமரானார். அவரும் தந்தை செல்வாவுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்தார். அந்த ஒப்பந்தம் வரலாற்றில் டட்லி - செல்வா ஒப் பந்தம் என அழைக்கப்பட்டது. பண்டா - செல்வா ஒப்பந்தத்திற்கு நேர்ந்த கதியே டட்லி - செல்வா ஒப்பந்தத்திற்கும் ஏற்பட்டது.

### சமாதான புறாவாகச் சந்திரிகா

பதினேழு வருட கால ஐ.தே.க. அரசின் கொடுங்கோலாட்சியில் நிறைவேற்றப்படாத வெறும் வாக்குறுதிகளில் சிக்கித் தவித்த தமிழ் மக்களுக்கு குறிப்பாக அனைத்துச் சிறுபான்மை இனங்களுக்கும் பச்சைக்கொடி காட்டி நான் உங்களை இரட்சிப்பேன் எனக் கூறி 1994ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் பெரும் வெற்றி வாகை சூடியவர் சந்திரிகா. தன்னை ஒரு சமாதானப் புறாவாகக் காட்டிக்கொண்ட அதிபர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா, இறுதியில் அவரும் தன்னை ஒரு பேரினவாதி என்றே நிரூபித்தார்.

தேர்தல் காலத்தில் உள்நாட்டுப்போரை நிறுத்துவேன்; சமாதானத்தை மலரச்செய் வேன் என கோடை இடிபோல அவர் முழங் கிய முழக்கமென்ன? எல்லாம் வெற்று வேட்டுகளாகிவிட்டன. தேர்தல் காலங்களில் ஆற்றைக் கடக்கும் மட்டும் தான் அண்ணன் தம்பி உறவு முறை. ஆற்றைக் கடந்த பின் நீ யாரோ நான் யாரோ என்ற கதைதான் தமிழ் பேசும் மக்களுடைய கதையாக இன்று வரை தொடர்கிறது.

### இன்றைய ஜனாதிபதி

இன்றைய ஜனாதிபதிகூட கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலங்களில் பேச்சுவார்த்தைகள் மூலம் மிகக்குறுகிய காலத்தில் போரை முடிவுக்குக் கொண்டு வருவேன் என்றார். தமிழ் மக்கள் மறைமுகமாக ஒரு வியூகம் அமைத்து அவரைப் பதவியிலமர்த்த வழி சமைத்தனர். அவரை மாபெரும் சோசலிசவாதி என நம்பினர். பலனோ பூஜ்ஜியம் தான். இவையெல்லாம் எவற்றைக் குறித்து நிற்கின்றன என்றால் 1956ஆம் ஆண்டு ஜூன் 5ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்மொழியப்பட்ட சிங்களம் மட்டும் சிந்தனையிலிருந்து சிங்களம் - சிங்கள ஆட்சிமுறை ஒரு சிறு துளியேனும் மாற்றமடையவில்லை என்பதைத்தான்! 1956ஆம் ஆண்டு ஜூன் 5ஆம் திகதிய சரித்திரம் ஐம்பது ஆண்டுகள் கழிந்தும் எதுவித மாற்றத்தையும் அடைய வில்லையே என்பது தான் சிறுபான்மை மக்களது இன்றைய துன்பம் எல்லாம்; வேதனை விரக்திகளும் கூட.



(14ஆம் பக்கம் பார்க்க...)


---

# குடாநாட்டு மக்களின் அறிவுப் பெட்டகம் திட்டமிட்டுத் தீக்கிரையாக்கப்பட்ட கொடுமை!

*குடாநாட்டு மக்களின் அரும் பொக்கிசமாக கருதப்படும் யாழ். பொதுசன நூலகம் தீக்கிரையாக்கப்பட்டு இன்றுடன் 27 வருடங்கள் பூர்த்தியடைகின்றன. பொதுசன நூலகத்தின் வரலாற்றுச் சிறப்பு மற்றும் அதன் இன்றைய நிலை குறித்து விளக்குகின்றது இந்தக் கட்டுரை.*

இற்றைக்குகால்நூற்றாண்டு காலத்திற்கு முன்பு ஈழத்தமிழ் மக்களின் அறிவாலயமாத் திகழ்ந்த யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் (01-06-1981)இல் தீக்கிரையாக்கப்பட்டது. அன்றைய நாட்டை நிர்வகித்த அரசின் அமைச்சர்கள் பச்சைக்கொடி காட்டப் படையினர் நூலகத்திற்கு தீ வைத்தார்கள். அனுமானின் வாலில் மூட்டிய தீ இலங்காபுரியை அழித்த வரலாற்றினை இராமாயணம் கூறுகிறது. அரசின் அமைச்சர்களின் ஆசிர்வாதத்துடன் கலைமகள் வீற்றிருக்கும் பொதுசன நூலகத்திற்கு வைத்த தீ இன்றுவரை இலங்கையை எரித்துக்கொண்டே இருக்கிறது.

தென்கிழக்காசியாவிலே சிறந்ததொரு நூலகமாக யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் மிளிர்ந்தது. வித்தூன்றி முளை கண்டு உர



மிட்டு நீரூற்றி விருட்சமாகக் கனியும்வேளை இந்நூலகம் எரியூட்டி அழிக்கப்பட்டது. அறிவுத்தாகத்தையும் ஞான வேட்கையையும் தீர்ப்பதற்காக நன்கு திட்டமிட்டு அமைக்கப்பட்டதே யாழ்ப்பாண நூலகமாகும்.

1934ஆம் ஆண்டு ஆனி மாதம் 9ஆம் திகதி கலாநிதி ஐசக் தம்பையா தலைமையில் நடைபெற்ற கூட்டம் பொதுநூலகத்தின் தோற்றத்திற்கு அடி கோலியது. யாழ்.மாவட்ட நீதி மன்றத்தின் செயலாளராக இருந்த செல்லப்பா அவர்கள் இந்நூலகத்தின் உருவாக்கத்தில் பெரும் பங்காற்றினார். செல்லப்பா சேகரித்த பணம் ரூபா 1184.22 நூலகத்ததிற்கான மூலதனமாக அமைந்தது. 01-08-1934இல் நூலகம் ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாண மாநகர சபையின் மேயராக சாம் ஏ.சபாபதி இருந்த காலத்தில் நவீன நூல் நிலையம் அமைப்பதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டன. 14-06-1952இல் சாம் ஏ.சபாபதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நவீன வசதிகள் கொண்டதாக யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் அமைப்பது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 29-03-1953 இல் நவீன நூல் நிலையத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. 15,910 சதுர அடிகளைக் கொண்ட மிகப் பிரமாண்டமான அமைப்பாக நூல் நிலையம் அமைக்கப்பட்டது. அது கொழும்பு மாநகர சபை நூல் நிலையத்தை விடப் பெரிதாக

## "பீனிக்ஸ்" பறவை போல் மீண்டும் எழுந்து நிற்பது இப்போது சிறு ஆறுதல்

அமைந்தது. 11-10-1959இல் யாழ்.மாநகர சபையின் முதல்வராக இருந்த அல்பிரட் துரையப்பா பொதுசன நூலகத்தைத் திறந்து வைத்தார். வணக்கத்திற்குரிய லோங் அடிகளார் நூலகம் உருவாவதில் பெரும் பங்காற்றினார்.

எரிக்கப்பட்ட நூல் நிலையத்தின் அங்கங்களாகப் பின்வருவன அமைந்திருந்தன.

1. நூல் இரவல் வழங்கும் பகுதி
2. புதின ஏடுகளையும் சஞ்சிகைகளையும் கொண்ட வாசிக சாலை
3. சிறுவர் நூலகம்
4. உசாத்துணை நூல்கள் கொண்ட பகுதி
5. கருத்தரங்குக் கூடம்
6. கலாபவனம்
7. காரியாலயமும் நூற்சேமிப்பு அறையும்

நூலகம் எரிக்கப்பட்டபொழுது 97,000 புத்தகங்கள் நூலகத்தில் இருந்தன. நூல்களை விட மருத்துவம், இலக்கியம், ஜோதிடம் சம்பந்தமான ஓலைச் சுவடிகள் நூற்றுக்கணக்கானவை காணப்பட்டன. இரவல் வழங்கும் பகுதியில் 57,000 நூல்கள் இருந்தன. இவற்றில் 1/5 பகுதி நூல்கள் தமிழ் நூல்களாகவே காணப்பட்டன. உசாத்துணைப் பிரிவில் மிகவும் அரிதான விலை மதிக்கவொண்ணாதபெருந் தொகையான நூல்கள் வைக்கப்பட்டிருந்தன.

உசாத்துணைப் பிரிவில் பெறுமதிமிக்க 29,500 நூல்கள் இருந்தன. 60 வாசகர்கள் இருந்து படிப்பதற்காகத் தனித்தனி மேசை, கதிரைகள் உசாத்துணைப்பிரிவில் காணப்பட்டன. சிறுவர் பகுதியில் 8,995 நூல்கள் இருந்தன. 10 ஆயிரம் அரிய கையெழுத்துப் பிரதிகளும் நூலகத்தில் வைக்கப்பட்டிருந்தன. கேட்போர் நிலையம் செவிக்குணவு வழங்கும் இடமாக அமைந்திருந்ததோடு அறிவியல் ரீதியான விவரணப் படங்களை காண்பிக்கும் இடமாகவும் திகழ்ந்தது. பல்வேறு நிகழ்ச்சிகள் கேட்போர் கூடத்திலே இடம்பெற்று வந்தன. பத்தொன்பதாயிரம் அங்கத்தவர்கள் இந்த நூலகத்திலிருந்து நூல்களைப் பெற்று வாசித்து பயனடைந்து வந்தார்கள்.

இத்தகைய சிறப்புக்கள் மிக்க யாழ். பொது நூலகத்திற்கு 01.06.1981ஆம் திகதி நள்ளிரவு யாழ்.விளையாட்டு அரங்கில் தங்கியிருந்த பொலீஸார் தீ மூட்டினர். பொலீஸ்மா அதிபரும் பிரிகேடியர் வீரதுங்காவும் யாழ்ப்பாணத்திலிருந்த இருந்தவேளையில் தீ மூட்டப்பட்டது. தீயை அணைக்கச் சென்றவர்களையும் அவர்கள் தடுத்தனர். பொதுசன நூலகத்திற்கு ஏற்பட்ட அழிவு கல்வி அடி நாதமாகக் கொண்டு உருவாகி வந்த சமூகத்தின் கலாசாரப் படுகொலையாகவே கருதப்பட்டது. சுவாமிஞானப்பிரகாசரின் மாணவராகிய ஒப்பியல் ஆய்வாளர் தாவீது அடிகள் பொதுநூல் நிலையம் எரிகிறது என்ற தகவல் கிடைத்ததும் ஏற்பட்ட அதிர்ச்சியினால் உயிரிழந்தார். பல அறிஞர்களும் கல்விமான்களும் மனவேதனை அடைந்து கண்ணீர் விட்டார்கள். பொதுசன நூலகத்தைப் பயன்படுத்தி தனது அறிவுப் பசியினைத் தீர்த்து வந்த மாணவர்களும் இளைஞர்களும் விரக்தியின் விளிம்பிற்குச் சென்றார்கள்.

### நூலகக் கிளைகள்

யாழ்.மாநகரசபை 1981இன் பின்பு கிளை நூலகங்கள் பலவற்றைத் திறந்து மக்கள் சேவைக்கு அரும்பணியாற்றி வந்தது. நல்லூர், வண்ணார்பண்ணை, குருநகர், சுண்டிக்குளி என மக்கள் அருகிலேயே சென்று தமது அறிவுப் பசியை ஆற்றிக்கொள்ள வழி வகைசெய்யப் பட்டது. இராணுவம் குடாநாட்டைக் கைப்பற்றும் வரையில் இந்த நூலகங்கள் சிறப்பான முறையில் மக்களுடைய தேவைகளை நிறைவேற்றக்கூடியதாக செயற்பட்டுவந்தன.

1995 பிற்பகுதியில் இராணுவம் குடாநாட்டைக் கைப்பற்றிய பின்னர் கிளை நூலகங்களில் இருந்த ஆயிரக்கணக்கான நூல்கள் காணாமற்போய்விட்டன. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின்போது எரித்துச் சாம்பராக்கப்பட்ட நூலகத்தை மீண்டும் நிர்மாணிக்கும் பணியை பொது சன ஐக்கிய அரசு மேற்கொண்டது.

இலங்கை அரசாங்கத்தின் தபால் தந்தி தொலைத்தொடர்பு அமைச்சரான மங்கள சமரவீரவால் 1998.01.14ஆம் திகதி யாழ்ப்பாணம் தேசிய வீடமைப்பு அதிகாரசபைக் கட்டடத்தின் யாழ் நூலகத்திற்கான இடைக்கால நூலகம் திறந்துவைக்கப்பட்டது.

தென்கிழக்காசியாவின் மிகப்பெரிய நூலகங்களில் ஒன்று எனப் புகழ்பெற்ற யாழ்ப்பாண பொதுசன நூலகம் கருகிப்போய் 18 வருடங்கள் கடந்து பழைய இடத்தில் மீண்டும் நூலகத்தைப் புனரமைக்கும் பணி ஆரம்பிக்கப் பட்டு வைக்கப்பட்டது.

இன்றையநாளில் மீண்டும் மக்கள் சேவைக்கு நவீன மயப்படுத்தப்பட்ட நூலகமாக இயங்க முடிந்துள்ளமை மிகப்பெரிய வரப்பிரசாதமாகும். எனினும் இழக்கப்பட்ட நூல்களையார் ஈடுசெய்வார்கள்.

### நூலகத்தின் பிரிவுகள்

இந் நூலகத்தில் உசாத்துனைப் பிரிவு, விசேட நூற்சேர்க்கைப் பிரிவு, கணனிப்பிரிவு,



வீடியோப்பிரிவு, செவிப்புலச்சாதனப்பிரிவு, இரவல் வழங்கும்பிரிவு, சிறுவர் பிரிவு, வலது குறைந்தோர்கள் படிக்கக் கூடிய பிரிவு, நூலீட்டல் பிரிவு,80 பேர் ஒரேநேரத்தில் இருந்து அவதானிக்கக் கூடிய கேட்போர்கூடம் என்பன அமைக்கப்பட்டுள்ளன. நூலகத்தின் சில பிரிவுகள் குளிரூட்டப்பட்டுள்ளன. இப் பிரிவுகள் யாவும் தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இற்றைக்கு 27 ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது 1981ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி ஆட்சியாளர்களின் அதிகார கர்வம் திட்டமிட்டு தீயிட்டழித்த யாழ்.மக்களது கல்விக் கருவூலம் சாம்பரிலிருந்து உயிர்த்தெழுந்த 'பீனிக்ஸ்' பறவை போன்று மீண்டும் உயிர் பெற்று புதுப்பொலிவுடன் யாழ் மக்களது அறிவுப் பசியைத் தீர்த்து வருவதை எண்ணி தமிழராகப் பிறந்த ஒவ்வொருவரும் திருப்தி கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5ஆவது பிறந்தநாள் வாழ்த்து





யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, முருகமூர்த்தி வீதியைச் சேர்ந்த தற்போது ஜேர்மனியில் வசித்துவரும் ஜெகநீஸ்வரன் - கலைவாணி தம்பதியரின் செல்வப் புதல்வி **கலையரசி** தனது 5 ஆவது பிறந்த நாளை இன்று (01.06.2008) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, பெரியம்மா, பெரியப்பா, தர்சன் அண்ணா, சுதன் அண்ணா, மாமாமார், மாமிமார், சித்திமார் ஆகியோர் விஸ்வலிங்கம் மகாகணபதி துணையால் நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
திரு.திருமதி
அருட்செல்வம்
(மாமா, மாமி).
முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

கலையரசி

(74894)

01.06.2008

## செவிப்புலன் இழந்தோருக்கு ஓய்வூதியத் திட்டம்

சமூக நலன்புரி சமூக சேவைகள் அமைச்சின் இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் சுயதொழில் முயற்சியாளர்களுக்கான ஓய்வூதியத்திட்டத் தில் செவிப்புலனற்றோர்களும் இணைத் துக் கொள்ளப்படுவார்கள் என வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் வடமராட்சி செவிப் புலனற்றோர் நிறுவன உறுப்பினர்களுக்குத் தெரிவித் துள்ளார்.

இந்த ஓய்வூதியத்திட்டத்தில் இணைந்து கொள்ள விரும்பும் செவிப்புலனற்றோர்கள், வடமராட்சிப் பிரதேசசெயலகங்களின் சமூக சேவைக் கிளைகளுடன்தொடர்புகொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (202-218)

## ஆசிரியர்களுக்கு சம்பளம்

தீவக கல்வி வலயத்தில் தற்காலிக இணைப்புப் பெற்றுப் பணியாற்றும் ஆசிரியர்களுக்கான மே மாதச் சம்பளம் தற்பொழுது வழங்கப்பட்டு வருகிறது.

இனிவரும் மாதங்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் அவர்களின் வங்கிக் கணக்கு ஊடாகவே வழங்கப்படவுள்ளது.

எனவும்- ஆசிரியர்கள் மே மாதச் சம்பளத்தை பெற்றுக் கொள்ள வரும்போது தவறாது தங்களின் வங்கிக் கணக் கிலக்கதை சமர்ப்பிக்குமாறும் தீவக கல்வி வலயக் கணக்காளர் எஸ்.பரதன் கேட்டுள்ளார்.(202-127)

# 60 ஆவது ஆண்டு விழா

திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையத்தின் 60 ஆவது ஆண்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பா.பாலகணேஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் கலந்து கொள்வார். (202)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சேனாதிராசா
ஸ்ரீஸ்கந்தராசா B.A.
(கிராம உத்தியோகத்தர் அதிசிறப்புத் தரம்)

எமது ஆருயிர் நண்பன் சேனாதிராசா ஸ்ரீஸ்கந்தராசா கிராம உத்தியோகத்தர் பதவியில் அதிசிறப்புத்தரம் பெற்று யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்திற்கான நிர்வாக கிராம உத்தியோகத்தராக நியமனம் பெற்றதையிட்டு அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(74962)

**நண்பர்கள்.**

# இதோ வெளிவந்து விட்டது!

## ந.சந்திரகுமார் எழுதிய ஏஞ்சல்

## 5ஆம் தர புலமை வழிகாட்டி

- இதுவரையில் வெளிவராத புத்தம் புதிய விடயங்களை உள்ளடக்கியதாகவும்
- பெற்றோர், மாணவர், ஆசிரியர் ஆகியோரின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாகவும்
- இந்தப் புத்தகத்துக்கு நிகரான எந்தப் புத்தகமும் வெளிவரவில்லை என்ற தனிச்சிறப்புக்களுடனும்
- ஆங்கிலம், சிங்களம், தமிழ், கணிதம், சுற்றாடல் என்பனவற்றை உள்ளடக்கியதாகவும்
- பரீட்சை எதிர்பார்க்கை வினாக்களும் மிக விரிவான விடைகளையும் கொண்ட மாதிரி வினாத்தாள்களையும் தன்னகத்தே கொண்டு வெளியாகியுள்ளது.
- இப்புத்தகத்திலுள்ள மாதிரி வினாத்தாள்களை துரித மீட்டல் செய்யும் அனைத்து மாணவர்களும் எதிர்வரும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைதல் நிச்சயம்.
- இப்புத்தகத்தை இலங்கை முழுவதிலுமுள்ள முன்னணி புத்தகசாலைகளில் இன்றே பெற்றுக்கொள்ளலாம்.




**உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!**

**ராஜாஸ் புத்தக நிலையம்,**
**111, பிரதான வீதி, மட்டக்களப்பு.**
Tel.: 065 222 2371 (சி/553045) Fax.: 065 222 5341

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

**Dr.மயில்வாகனம் சிற்றம்பலம்**

மலர்வு 27.05.1928 உதிர்வு 01.05.2008

எமது அன்புத் தெய்வம் நோயுற்றிருந்த போதும் மரணமடைந்த செய்தியறிந்து தந்தி, தபால் மூலம் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எமக்கு ஆறுதல் அளித்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (01.06.2008) ஞாயிற்றுக்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பெரிய அரசடி,
சாவகச்சேரி.
(74955)

பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## கண்ணீர் அஞ்சலி

**உயர்திரு.து.வைத்திலிங்கம்**

(முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர்) அவர்களது மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலி

**ஏழைகள் வாழ உங்கள் கரங்களை நீட்டினீர்**
**மக்கள் உயர்வு பெற உங்கள் ஆதரவு கொடுத்தீர்**
**நாம் அமைதி பெற உமது அன்பினைத் தந்தீர்.**

எமது குடும்ப உயர்விற்கு பலவழிகளிலும் உதவி புரிந்த எமது கண்கண்ட தெய்வம் அவர்களின் ஆத்மா எல்லாம் வல்ல இறைவன் அடி சேரப் பிரார்த்திக்கின்றேன்.

**ச.சிவகுமாரன்,** J.P.
இளைப்பாறிய கிராம அலுவலர், கட்டுடை, மானிப்பாய்.
(சி/553065)

## கண்ணீர் அஞ்சலி

**து.வைத்திலிங்கம்**

*(ஓய்வுபெற்ற மேலதிக அரசாங்க அதிபர்,யாழ்ப்பாணம்)*

அமரர் துரையப்பா வைத்திலிங்கம் அவர்கள் எங்கள் மாத்தனைக் கந்தசாமி கோயிலின் அன்பராக, அடியவராக, தொண்டராக விளங்கி நாட்டுச் சூழல் நெருக்கடிக்குள்ளான பல சந்தர்ப்பங்களிலும் கோயில் விழாக்கள் குறைவின்றி நிகழப் பாடுபட்ட நன்மகனது பிரிவு வேதனைக்குரியது. அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்து பார்வதி சமேத பரமேஸ்வரன் திருவடிகளில் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*சம்பியன் லேன்,*
*கொக்குவில்.*

**பரிபாலன சபை,**
**மாத்தனைக் கந்தசாமி கோயில்.**
(74963)

## மாணவர்களுக்கு உதவி

ஊர்காவற்றுறை, ஜூன்1

சிறுவர் பாதுகாப்புநிதியத்தினால் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிமாணவர்களுக்கு கற்றல் உபகரணப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளகுடும்பங்களைச் சேர்ந்த 186 மாணவர்களுக்கு இவ்வாறு கற்றல் உபகரணப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

கல்லூரி அதிபர் ஜே.ஏ.ஜேசுதாஸ் தலைமையில் நடைபெற்ற கற்றல் உபகரணப் பொதிகள் வழங்கும் நிகழ்வில் தீவக கல்விவலய அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

மாணவர்களுக்கான பாடசாலைப் பை கணித உபகரணங்கள், எழுதுகருவிகள், கலர் பென்சில்கள் கொப்பி வகைகள், குடிதண்ணீர் போத்தல் என்பன உள்ளடங்கலாக ஒவ்வொன்றும் சுமார் ஆயிரத்து 500 ரூபாய் பெறுமதியானவை என கல்லூரி ஆசிரியர் [illegible]

## கண்ணீர் அஞ்சலி

அமரர் துரையப்பா வைத்திலிங்கம்

(ஓய்வுபெற்ற மேலதிக அரசாங்க அதிபர்,யாழ்ப்பாணம்)




எமது சங்கத்தின் முன்னாள் தலைவரும் இலக்கியப் படைப்பாளருமாகிய அமரர் து.வைத்திலிங்கம் அவர்கள் (28.05.2008)இல் காலமானதையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய். (சி/553067)

**பணிப்பாளர்கள், பணியாளர்கள்,**
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் [illegible]

## கண்ணீர் அஞ்சலி



திருமதி
**நித்தியலட்சுமி இலட்சுமணன்**

அன்பிற்கோர் அம்மாவாய்
அறிவிற்கோர் ஆசானாய்
துன்புற்றிருந்த வேளையெல்லாம்
துயர் துடைக்கும் குளத்தடி அத்தையாய்
இன்புற்றிருந்த நீங்கள்
எமைவிட்டுப் பிரிந்ததுமேனோ!

*அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் திருமதி குலசிங்கம் ஆனந்ததேவி, திரு.ஓங்காரமூர்த்தி, திரு.புவனேந்திரன், திரு. விஜயேந்திரன், திருமதி அன்பானந்தன் பற்குணதேவி ஆகியோரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய* CRAWLEY *காமாட்சியம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.*

15, Broomdashers Road,
Crawley,
West Sussex,
RH 10, ipx, U.K.
(74959)

**மோகன், கலா,**
**கஜலக்ஷ்னன்,**
**கௌசிகன், பகீர்த்தனா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலப்பொருள் தட்டுப்பாடு, போர்ச்சூழ்நிலை; முடங்கிப்போன 'மில்க்வைற்' நிறுவனம்

**யாழ்.** குடாநாட்டில் கைத்தொழிற் சாலைகள் இயங்குவதற்கு வாய்ப்பிருந்த காலப் பகுதியில் பிரபலம் வாய்ந்த சவர்க் காரத் தொழிற்சாலையாக 'மில்க்வைற்' நிறு வனம் இயங்கிவந்தது. 1977ஆம் ஆண்டு 50ஆவது ஆண்டு நிறைவின்போது இந்த நிறுவனத் தில் 123 தொழிலாளர்கள் வேலை செய்தனர்.

நாள் ஒன்றிற்கு 100 தொடக்கம் 110 வரையான பெட்டி சவர்க்காரம் உற்பத்தி யாகியது. ஒரு பெட்டியில் 288 'சோப்' துண்டு கள் அடைக்கப்படுவது வழமை. நாள் ஒன்றிற்கு 30,000 (முப்பதாயிரம்) சவர்க்கா ரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு குடாநாட்டுப் பகுதிக்கும் தென் இலங்கைக்கும் கிழக்கு மாகாணத்திற்கும் அனுப்பப்பட்டன.

அந்தக்காலத்தில் தொழில் அதிபராக, சிவதர்மவள்ளல் எனப் பலராலும் கந்தையா கனகராசா ஜே.பி. நிர்வாகத்தை நடத்திவந் தார். அந்த நிறுவனத்தின் மூன்றாம் தலை முறை உரிமையாளரும் தொழில் அதிபரு மான இ.தவகோபால் தற்பொழுது நிர்வா கத்தை நடத்தி வருகின் றார்.

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி யில் தட்டாதெருவில் உள்ள 'திருவாலவாய்' தொழிற்சாலையில் ஞாயிறு உதயனுக்காக தவகோபாலைச் சந்தித்து உரையாடினோம்.

அந்தக் காலத்தில் நாடு முழுவதிலும் பரவலாக ஆதிக்கம் செலுத்தி வந்த சவர்க்

## தொழில்சார் அறிவு எமது மண்ணில் இருந்தபோதிலும் சவர்க்காரத்திற்கு தெற்கை எதிர்பார்க்கும் பரிதாபம்

கார உற்பத்தி நிறுவனங்களுடன் போட்டி போடும் நிலையில் குடாநாட்டு உள்ளூர் கைத்தொழில் நிறுவனமான 'மில்க்வைற்' நிறுவனம் வளர்ச்சியடைந்திருந்தது.

சமகால அரசியல் சூழ்நிலை காரணமாக மூலப்பொருள் கிடைக்காததால் தொழிற் சாலையை இயக்கமுடியவில்லை. மூலத னப் பற்றாக்குறை, போக்குவரத்துச் செலவு அதிகரிப்பு, எரிபொருள் விலை உயர்வு, பரந்தன் தொழிற்சாலை அழிந்துபோனமை எனப் பல காரணங்கள் தொழில் முடங் கிப் போககாரணமாயின என்கிறார் தவகோபால்.

நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளர் வேலை இழந்துள்ளனர். கருவிகள், இயந்தி ரங்கள் என்பன பாவனை இன்றிக் கிடக் கின்றன. இவற்றைத் துருப்பிடிக்காது பரா மரிக்க பெருமளவு நிதி தேவைப்படுகிறது.

தொழிற்சாலையை மீண்டும் இயக்க பாரிய முதல் தேவைப்படுகிறது. கொழும் பில் இருந்தே மூலப்பொருள்களைக் கொண்டு வரவேண்டியுள்ளது - என்றார் அவர்.

அவர் மேலும் கூறியதாவது:



"மில்க்வைற்"றை வளர்த்தெடுத்த பெரியார் கனகராசாவின் பல பொதுப்பணிகளில் ஒன்று.

### அரசு உதவினால் தொழிலைத் தொடரலாம்

நியாயமான விலையில் மூலப்பொருள் கிடைப்பதற்கான உத்தரவாதம் கிடைத் தால் தொழிலை மீண்டும் ஆரம்பிக்கமுடியும். அரசாங்கம் ஏனைய தொழில்களுக்கு வழங் கும் மானியம் வழங்கினால் இது சாத்திய மானதாகும்.

அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் நிதி அனுசரணை கிடைக்குமானால் உள் ளூர் உற்பத்தியை முன்னெடுப்பதுடன் முன் னரைப் போன்று வேலைவாய்ப்பையும் உள் ளூர் தொழிலாளருக்குக் கொடுக்கக் கூடிய தாக இருக்கும்.

இதற்கான முன்னெடுப்புகள் வர்த்தக சம்மேளனம் மற்றும் கைத்தொழில் அபிவி ருத்திச் சபை போன்றவற்றால் மேற்கொள் ளப்படவேண்டும்.

தொழில் இயங்காமல் முடங்கிப் போயுள் ளதால் தொழில் அறிவும் மங்கிவிடும். இது எமது சுயதொழில்களுக்கான - வளர்ச்சிக் கான எதிர்மறை விளைவையே ஏற்படுத்தும்.

உற்பத்திகான தொழில் அறிவு இருந் தும் தென் இலங்கையை எதிர்பார்க்கின்ற நிலை தொடர்கின்றது.

2006ஆம் ஆண்டு அவணி மாதம் 11ஆம் திகதி தரைவழிப் பாதை மூடப்பட்டதன் பின் தொழிற்சாலையையும் மூடவேண்டி ஏற் பட்டது. தொழிற்சாலை ஆரம்பித்து 75ஆவது வருடத்தில் ஏற்பட்ட இந்த நிகழ்வு துர்ப் பாக்கியமானதாகும். எனினும் தற்பொழுது நெல்லிரசம் அடைக்கும் தொழிலை மேற் கொண்டுள்ளோம். 7 தொழிலாளருக்கு மேல் வேலை வழங்க இயலாதிருப்பது மனப் பாரத்தை ஏற்படுத்தி உள்ளது - என்றார்.

### குடிசைத் தொழிலாக ஆரம்பிக்கப்பட்டது

இந்தத் தொழிற்சாலை 1977ஆம் ஆண்டு குடிசைத் தொழிலாக ஆரம்பிக்கப்பட்டது. காலஞ்சென்ற தொழில் அதிபரும் எனது சிறிய தந்தை யுமான கனக ராசாவின் தகப் பனாரான கந் தையாவால் இது ஆரம்பிக் கப்பட்டது.



தற்போதைய தொழிலதிபர் இ.தவகோபால்

சொற்ப மூலதனத்து டன் ஆரம்பித்த தொழில் படிப் படியாக உயர்ந்து தகரக் கொட்டகை தொழில் பட்டறையாக மாற்றமடைந்தது.

அமரர் கந்தையாவின் விடாமுயற்சிக்கு மூன்றாவது மகனின் (க.கனகராசா) உதவி யும் கல்வி அறிவும் உறுதுணையாக அமைந் தன. தொழிற்சாலை நவீன மயமாக்கப்பட் டது.

'திருஆலவாய்' என பெயரிட்ட இல்லத் தின் கீழ்த்தளத்தில் காரியாலயம், தொழிற் சாலை, பொதியறை, களஞ்சியஅறை என தொழிற்சாலைக்குரிய அலகுகளை கொண்டி ருந்தது. கனகராசாவின் காலத்தில் தொழிற் சாலை மேலும் சிறப்புறலாயிற்று.

நீலம் கலந்த 'சோப்' உற்பத்தி செய்யப் பட்டது. சிறிது விரைவாக கரைந்தாலும் அதிக வெண்மை கொடுத்ததால் பாடசாலை மாணவ, மாணவியரால் விரும்பப்பட்டது.

குடாநாட்டில் மட்டுமன்றி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் கேள்வி அதிகரித் தது. நாளாந்த உற்பத்தி 15,000 தாண்டியது. படிப்படியாகத் தொழில் விருத்தியடைந்து நியாயமான, நீதியான விலையில் இலா பத்தை ஈட்டியது.

இந்தக் காலத்தி லேயே 123 தொழிலா ளர்கள் வேலைத்தளத் தில் இருந்தனர். கருவி கள், பொறிகள் இணைக் கப்பட்டிருந்தன. நாளுக்கு 100இற்கு மேற்பட்ட 'கேஸ்' உற் பத்தியாகியது. சவர்க் காரம் ஒன்று 12 ரூபா விற்கு விற்பனை செய் யப்பட்டது. உள்ளூர் கைத்தொழிலை விருத்திசெய்தல் இய லுமான வகையில் வேலை வாய்ப்பைத் தருதல் என்ற குறிக் கோளின் அடிப்படையில் சிறிய தந்தை யார் இத்தொழிற்சாலையை நிர்வகித்து வந்தார்.

### ஊக்குவிப்பு


சவர்க்காரத் தொழிலோடு இணைந்த தொழில்கள் ஊக்குவிக்கப்பட்டன. கொழும் புத்துறை, மீசாலை பகுதிகளில் உள்ள தும்பு தொழில் வளர்ச்சியடைய காரணமாயிற்று.

சவர்க்கார மேலுறைகள் சேமிப்போருக்கு துவாய், பெட்சீற், மேசை விரிப்புகள் அன் பளிப்புச் செய்யப்பட்டன. இதன்மூலம் கைத்தறி நெசவுத்தொழில் ஊக்குவிக்கப் பட்டது.

வட்டுக்கோட்டை, கந்தர்மடம், நல் லூர், தெல்லிப்பழைப் பகுதிகளில் உள்ள கைத்தறி நெசவு நிலையங்களில் இருந்தே கொள்வனவு செய்யப்பட்டன. சந்தைவாய்ப்பு உறுதிப்படுத்தப்பட்டதால் இந்தத் தொழில் களின் உறுதிப்பாடு பேணப்பட்டது.

தொழிற்சாலை தற்பொழுது இயங்கா விட்டாலும் மரம் நடும் தொண்டு தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. நாற்று மேடைகள் தயாரிக்கப்பட்டு கன் றுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

பாடசாலைகள், மரம்நாட்டு நிகழ்வுகள் மற்றும் காந்திசேவா நிலையங்கள் போன்ற வற்றுக்கு தற்பொழுதும் வழங்கப்படுகின்றன. அத்துடன் பனை ஓலை கள் ஏடு தயாரித்து விஜய தசமி அன்று சிறுவர்க ளுக்கு ஏடு தொடக்கும் வைபவங்களுக்கு வழங் கும் நிகழ்வும் தொடர்கி றது.



அமரர் கனகராசா வுக்கு அவரது பொதுத் தொண்டுக்காக அரசாங் கம் சமாதான நீத வான் பட்டம் வழங்கி கௌர வித்தது. சைவப் பணியை பாராட்டி மன்றங்கள், ஆதீனங்கள் பட்டங்களை வழங்கிக் கௌரவித்தன.

மில்க்வைற் நிறுவ னம் பஸ்தரிப்பு நிலை யங்கள், அமைத்தது டன் குளங்களை ஆழமாக்கியும் கிணறு கள் அமைத்தும் சமூகசேவை புரிந்தது. இன்று நொடித்து நிற்கிறது. மில்க்வைற் செய்தி என்ற பத்திரிகை வெளியீடும் குறிப் பிடத்தக்கதாகும்.

### இடப்பெயர்வின் பொழுது

1995ஆம் ஆண்டின் இடப்பெயர்வின் பொழுதும் நிறுவனம் மீசாலையில் இயங்கி வந்தது. தொழிலாளர் தொகை குறைந்தி ருந்தபொழுதும் சோப் 15 ரூபாவிற்கு விற்கப் பட்டது. சவர்க்காரத் தட்டுப்பாடு, இடைத் தரகரின் தலையீடு காரணமாகச் சந்தை விலை அதிகரித்தே காணப்பட்டது.

தொழிற்சாலை வளமாக இருந்த நேரத்தில் கைதடி நவீல்ட் பாடசாலையை சேர்ந்த வாய்பேசமுடியாத 13 இளைஞருக்கு வேலை வாய்ப்பை வழங்கி இருந்தது.

### அமிர்தம் நெல்லிரசம்

சவர்க்கார உற்பத்தி தடைப்பட்டுள்ள தால் இங்கு நிலைத்திருக்கும் தொழிலாள ருக்கு வேலை வழங்குவதற்காகவும் பிற கார ணங்களுக்காகவும் 'மில்கோ தொழிலகம்' என்ற பெயரில் 'அமிர்தம்' நெல்லிரசம் தயா ரித்து வருகிறோம்.

சந்தைப்படுத்துவதில் போதிய ஆதா ரவில்லாததாலும் விற்பனைக் குறைவாலும் தொழிலாளருக்கு போதிய அளவில் வேலை தர இயலாதிருப்பதாக அவர் தெரிவித்தார்.

அச்சுவேலியில் இருந்த கைத்தொழில் பேட்டையில் 14 தொழிற்சாலைகள் இயங்கி வந்தன. இவை அனைத்தும் தற்பொழுது தரைமட்டமாகிவிட்டன. உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் இருந்தவை. இதை ஐ.டி.பி பொறுப்பேற்று வேறு இடத்தில் அமைப் பதற்கான வசதிகளை ஏற்படுத்து வது அவசியம் என்றும் தமது தொழில்சார் அக்கறையை வெளிப்படுத்தினார் தவ கோபால். ★

சந்திப்பு:
கை.பேரின்பநாயகம்

# அமைதியாக வாழ்ந்திருந்த இரு இன மக்களை இரு துருவங்களாக மாற்றிய சிங்களம் மட்டும் சட்டம்

**1956 ஜூன் 5**

1956 யூன் 5, இலங்கையில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே பிளவை உண்டாக்கின்றார். அன்றுதான் தனிச் சிங்களச் சட்டம் இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டது. அதுவரை ஆங்கிலமே ( இலங்கை சுதந்திரமடைந்த பின்னரும்) ஆட்சி மொழியாக இருந்தது.

தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்ட அன்று தமிழரசுக் கட்சியினர் தனிச் சிங்களச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்றத்தில் எதிரே காலி முகத் திடலில் (அப்போது நாடாளுமன்றம் காலிமுகத்திடலுக்கு எதிரேயே இயங்கியது. பழைய நாடாளுமன்றக் கட்டிடம் இப்போதும் உள்ளது) சத்தியாக்கிரகம் இருந்தனர். அர சியல், கட்சிவேறுபாடுகளை மறந்து ஜி.ஜி.பொன்னம்பலம் , சுந்தரலிங்கம் ஆகியோரும் சத்தியாக்கிரகத்தில் இணைந்து கொண்டனர்.

## இன்றும் நினைவில் கொள்ள..... அன்றைய ஞாபகம் .... இங்கே!

### நூறுக்கு மேற்பட்ட காடையர் கூடினார்கள்

சத்தியாக்கிரகத்தைக் குழப்பும் நோக்குடன் சிங்கள அமைச்சர் ஒரு வரின் தலைமையில் ஐநூறுக்கு மேற்பட்ட காடையர்கள் காலிமுகத்திடலில் கூடினர். எல்லாளன்- துட்டகைமுனு யுத்தம் என்று காடையர்கள் கோஷம் எழுப்பினர். சத்தியாக்கிரகத்தின் நோக்கத்தை விளக்கி சிங்களத்தில் அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர் தமிழரசுக் கட்சியினர். துண்டுப் பிரசுரம் விநியோகித் தவர்களைத் தாக்கத் தொடங்கினர் காடையர். சில காடையர் சிங்களக் கொடியை அசைத்தவாறே தாக்குதல்களை நடத்தினர்.அமிர்தலிங்கம் மற்றவர்களை விட மோசமாகத் தாக்கப்பட்டார். அமிர்தலிங்கத்தின் மண்டை பிளந்து இரத்தம் வடிந்தது. நாடாளுமன்றத்திற்கு வந்துகொண்டிருந்த பிரதமர் பண்டாரநாயக்கா கண்டும் காணாதது போல் புன்முறுவலுடன் சென்றார். அப்போது உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் பிரதமரிடம் என்ன செய்வது என்று கேட்க, நீங்கள் ஒன்றி லும் தலையிடவேண்டாம் என்று சொல்லிவிட்டுச் சென்று விட்டார் பிரதமர்.

## காலிமுகத்திடல் சத்தியாக்கிரகமும் தலைவர்கள் அடி வாங்கிய படலமும்

நேரம் நண்பகலானது. நாடாளுமன்றத்தில் விவாதம் ஆரம்பமாகும் நேரம். அமிர்த லிங்கமும் சுந்தரலிங்கமும் தலையிலும் கழுத்திலும் கட்டுக்களுடன் நாடாளு மன்றத்தினுள் நுழைந்தனர்.அப்போது பிரதமர் இது என்ன யுத்தத்தில் அடைந்த விழுப்புண்களா என்று கேட்டார். ஆம் என்றார் சுந்தரலிங்கம் . தனிச் சிங்கள மசோதா நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டபோது காலஞ்சென்ற இடதுசாரித் தலைவர் கொல் வின். ஆர். டி. சில்வா தனிச் சிங்களச் சட்டத்தை அமுல்படுத்தினால் நாடு பிளவு படுவதைத் தவிர்க்க முடியாது. இலங்கை ஒரே நாடாக இருக்க வேண்டுமானால் இரண்டு மொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்குங்கள் என உரையாற்றினார். '' ஒரு மொழி இரு நாடுகள் , இரண்டு மொழி ஒரு நாடு'' என்ற இவரது உரை சரித்திர முக்கி யத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டது.

ஆனால் இதே கொல்வின் 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பை உருவாக்கிய போது சிறுபான்மையினருக்கு இருந்த அற்ப சொற்ப உரிமைகளையும் இல்லாமல் செய்தார். தனிச் சிங்களச் சட்ட வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது தமிழ்ப் பிரநிதிகளும் இடது சாரிகளும் எதிர்த்து வாக்களித்தனர். ஐ.தே.க ஆதரித்து வாக்களித்தது. காலி முகத் திடலில் சத்தியாக்கிரகிகங்கள் மீது தாக்குதல் நடத்திய காடையர் கூட்டம் கண்ணில் தென்பட்ட தமிழர்கள் மீதும் தாகக்குதலைத் தொடங்கியது. ஏன் தமிழர்களைப் போன்ற உருவ அமைப்புடைய சிங்களவர்களும் தாக்கப்பட்டனர்.

தமிழர்களுக்கு எதிரான கலவரம் எங்கும் பரவியது. அம்பாறையில் கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள் உட்படப் பல தமிழர்கள் கொல்லப்பட்டனர். பெண்கள் பாலி யல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட பின் கொல்லப்பட்டனர்.

- தாண்டவன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்: 14.10.1915

ஆண்டவன் திரு அடியில் 02.05.2008

## அமரர் கந்தர் விஸ்வலிங்கம்

அப்பா!
பாசத்தின் இருப்பிடமே! பண்பின் சிகரமே;
இனிய உங்கள் முகம் எங்கள் நெஞ்சை விட்டகலாது;
பாசமுடன் இணைந்து பண்புடனே வாழ்ந்தீரே; ஊர் உலகம்
போற்றும் உத்தமரே அப்பா! மறக்கத்தான் முடியவில்லை
கலங்குகிறோம் நாம் இங்கு.
உங்கள் ஆத்மா சாந்திபெற மருதடி விநாயகனை இறைஞ்சுகிறோம்.


**உங்கள் பிரிவால் துயருறும்:**
மனைவி, மகள்மார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

இணுவில் றோட்,
மானிப்பாய்.

(74487)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மியன்மாரில் பேரழிவை ஏற்படுத்தியுள்ள "நர்கீஸ்" சூறாவளி



சூறாவளிப் பேரழிவில் பலியான இளசுகள்

**பூமியின்** வரலாற்றில் வீசிய சூறாவளிகளில் அதிகமான உயிரிழப்புக்களை ஏற்படுத்திய சூறாவளிகளில் நர்கீஸ் சூறாவளியும் ஒன்று. இது ஆசியக் கண்டத்தில் நிகழ்ந்த மிக முக்கியமான இயற்கை அனர்த்தம் ஆகும். மியன்மாரின் இயல்பு வாழ்வைச் சீர்குலைத்த இவ்வியற்கை அனர்த்தம் அந்நாட்டில் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

மியன்மார் அயன வலயத்தைச் சேர்ந்த ஒரு நாடாகும். அயன வலயத்தில் வட அகலாங்கு 35° இலிருந்து தென்னகலாங்கு 22° வரையான கடற்பிரதேசத்தில் சூறாவளிகள் தோன்றுகின்றன. ஏனைய சூறாவளிகளைவிட அய்னச்சூறாவளிகள் எப்போதும் வீரியம் மிக்கனவாகக் காணப்படுகின்றன. குறிப்பாக இந்துசமுத்திரப் பிராந்தியச்சூறாவளிகள், ஏனைய பிராந்தியச்சூறாவளிகளைவிட அதிகளவு அழிவினை ஏற்படுத்துவனவாக உள்ளன. இந்து சமுத்திரத்திலும் வங்காள விரிகுடாவிலேயே அதிகளவு சூறாவளிகள் உருவாகின்றன

வங்காள விரிகுடாவில் ஏற்படும் சூறாவளிகள் பெரிதும் தாழமுக்கத்தினாலேயே தோன்றுகின்றன. அமுக்க நிலமையானது 1013அடிக்குக் குறைவாக இருக்கும் போது அங்கு தாழமுக்கம் நிலவுகின்றது. வங்காள விரிகுடாவில் அதிகளவு தாழமுக்கம் ஏற்பட அப்பகுதியில் காணப்படும் உயர் வெப்ப நிலையே அடிப்படையாக உள்ளது. இத்தாழமுக்கம் அதிகரிக்கும்போது அது சூறாவளியாக மாற்ற மடைகின்றது.

### நர்கீஸ் சூறாவளியின் தோற்றம்


2008 ஏப்ரலின் கடைசி வாரத்திலேயே இது ஆரம்பமானது. வங்கக்கடலில் சென்னைக்கு தென்கிழக்காக 1150Km தூரத்தில் தாழமுக்கமாக மையம் கொண்டது. இந்திய வளிமண்டலவியல் திணைக்களம் (IMD) இதனைத் தாழமுக்கம் என்றாலும் ஒருங்கிணைந்த தைபூன் எச்சரிக்கை நிலையம் (JTWC) இதனை சூறாவளி என்று அறிவித்தது. இது மெல்ல மெல்ல வடமேற்குத் திசையாக நகர்ந்தது. ஏப்ரல் 29ஆம் திகதி சென்னைக்கு 550Km தூரத்தில் நிலை கொண்டது. இதனால் இந்தியாவின் தெற்குப்பகுதி, பங்களாதேஷ் போன்ற பகுதிகளே பாதிக்கப்படும் என ஆரம்பத்தில் முன்னறிவிப்புச் செய்யப்பட்டது. இக்காலப் பகுதியில் இலங்கையின் மத்திய, தென் பகுதிகளில் குழப்பமான வானிலை காணப்பட்டது. வேகமான காற்றுடன் மழைப் பொழிவும் ஏற்பட்டமையால், மண்சரிவுகள் ஏற்பட்டன. குறிப்பாக இரத்தினபுரி, கேகாலை, போன்ற மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. இதனால் 21பேர் பலியாகியதுடன் 3000 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வீடுகளை இழந்து அநாதரவாக்கப்பட்டனர்.



கட்டடங்கள் இடிந்து வீழ்ந்து தரைமட்டமாகிய நிலையில்

பின்னர் நர்கீஸின் சுழற்சி வேகம் அதிகரிக்கப்பட்டு மே மாதம் 3ஆம் திகதி மியன்மாரின் தென்மேற்குப் பகுதியில் குறிப்பாக அயேயர்வதி (Ayeyarewady) பிரதேசத்தினைத் தாக்கியது. சூறாவளிகள் மூன்று பகுதிகளாக இதில் கண், சுழிப்பு வலயம், வெளிவலயம் எனப்பிரிக்கப்படும். இதில் கண், வெளி வலயத்தைவிட சுழிப்பு வலயமே அதிகளவான பாதிப்பை ஏறபடுத்தவல்லது. மியன்மாரில் வீசிய நர்கீஸின் சுழிப்பு வலயக் காற்றின் வேகம் மணிக்கு 215Km ஆகக் காணப்பட்டது. அத்துடன் கடுமையான மழைப்பொழிவும் ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினாலேயே பலர் கொல்லப்பட்டனர். தலைநகர் யங்கூனும் இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. உறுதிப்படுத்தப்படாத தகவல்களின் அடிப்படையில் 11,2000பேர் உயிரிழந்தனர் எனக் கூறப்படுகின்றது.

மியன்மாரின் புவியியல் அம்சங்களில் வடபகுதியைவிட, தென்பகுதி தாழ்நிலமாகக் காணப்பட்டமையினால் அதிகமான வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்பாக இருந்தது. மியன்மார் அரசாங்கத்தின் அறிவிப்புப்படி அயேயர்வதி (Ayeyarewady) பாகோ (Bago) யங்கூன் (Yangon) மொன் (mon) கயின் (Kayin) என ஐந்து பகுதிகள் பாதிக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.




### நர்கீஸ் (Nargis) சூறாவளி

மியன்மாருக்குள் நர்கீஸ் நுழையும்போது அதன் அமுக்கம் 960அடி ஆகக் காணப்பட்டதுடன், காற்றின் வேகம மணிக்கு 229Km ஆகக காணப்பட்டது. இதுபோன்ற ஒரு சூறாவளி 1991 இல் பங்களாதேஷில் வீசியமையில் 13,8000 பேர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. நர்கீஸ் சூறாவளியின் தாக்கத்தினால் மியன்மாரின் ஐராவதி டெல்டாப் பகுதியின் 95சதவீதமான கட்டடங்கள் அழித்துள்ளன.

மியன்மாரின் வரலாற்றில் பேரழிவினை ஏற்படுத்திய இந்தச் சூறாவளியினால் அந்நாட்டின் வழமையான நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. ஏழு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். 40000 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். மியன்மார் இப்பேரிழப்பினால் கடுமையான பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளது.

### அழிவுகள்

இதனால் மியன்மாரில் சூறாவளியினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குரிய நிவாரணப்பணிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை மியன்மார் அரசு மேற்கொண்டு வருகின்றது. எனினும் இவை போதுமானதாக இல்லை. சர்வதேச நாடுகள் இதனைக் கருத்தில் கொண்டு தம்மாலான உதவிகளை மேற்கொள்ள முன்வந்துள்ளன. எனினும் மியன்மாரின் இராணுவ அர்சு இதனை ஏற்கவல்லை. பல நாடுகள் தம்மாலான உதவிகளை மேற்கொண்டுள்ளன. ஆனால் வேறு எந்த நாட்டினதோ, அமைப்பினதோ நிவாரணப் பணியாளர்களை உள்ளெடுக்காத மியன்மார் வெறும் பண உதவிகளை மட்டுமே பெற்றுள்ளது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன.



வெள்ளப் பெருக்கில்....

## இராணுவ அரசின் போக்கால் மக்களுக்கான நிவாரணம் தாமதமடைகிறது

### மியன்மார் அரசு

67,8500 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக்கொண்ட மியன்மாரின் ஆட்சி இராணுவ ஆட்சியாக உள்ளது. இராணுவ ஆட்சிக்குட்பட்ட மியன்மாரில் எல்லாத்துறைகளிலும் இராணுவ அதிகாரிகளே நிர்வாகிகளாக உள்ளனர். அங்கு ஜனநாயகம் மலரவேண்டும் என்பதற்காக ஜெனரல் ஆங்சான், பாடுபட்டார். அவர் இறந்ததன் பின்னர் அவரின் மகள் ஆங்சாங் சூகி அவர்கள் பாடுபட்டு வருகின்றார். அவரது மியன்மார் ஜனநாயகக்கட்சியும் ஜனநாயகம் மலரப் போராடுகின்றனர். வேறுபல நாடுகளும் மியன்மாரில் ஜனநாயகம் மலர வேண்டும் என்பதற்காக தமது அழுத்தத்தினைப் பிரயோகிக்கின்றன.



மரங்கள் வேரோடு சாய்ந்து வீதிகளைத் தடை செய்திருக்கும் காட்சி

மியன்மாரின் இராணுவ ஆட்சிக்கு எதிராக கொலை செய்யப்பட்ட ஜெனரல் ஆங்சானின் மகளும், மியன்மார் ஜனநாயகக்கட்சியின் தலைவியுமான ஆங்சான்சூகி கடுமையான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றார். எனினும் இவர் 1988இல் இருந்து வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். 1991ஆம் ஆண்டு இவருக்கு நோபல்பரிசு கிடைத்துள்ளது. மியன்மாரின் இராணுவ ஆட்சிக்கு எதிராக புத்தத்துறவிகளும், பல ஜனநாயக அமைப்புகளும் போராடி வருகின்றன. எனினும் இராணுவ அரசு இரும்புக்கரம் கொண்டே அவர்களை அடக்கி வருகின்றது.

### நிவாரணப்பணிகளுக்கான உதவிகள்

நர்கீஸ் சூறாவளியின் தாக்கத்திற்கு முன்பிருந்தே சர்வதேசத் தலையீடுகள் குறைவாகவே காணப்பட்டன. காரணம் இராணுவ ஆட்சியின் எத்தகைய தன்மைகளும் வெளியுலகிற்குத் தெரியக் கூடாது என்பதில் மியன்மார் பற்றிய தகவல்கள் ஏனையவர்களைச் சென்றடையக் கூடாது என்பதிலும் மியன்மாரின் இராணுவ அரசு மிகவும் இறுக்கமாக உள்ளது. இதனால் தான் நர்கீஸ் சூறாவளியின் நிவாரணப்பணிகளுக்கு வேறெந்த நாட்டுக்குமோ அல்லது தொண்டர் நிறுவனத் திற்குமோ அனுமதி வழங்கவில்லை.

சூறாவளியினால் மியன்மார் பாதிக்கப்பட்டதனை அறிந்த பல நாடுகள் அதற்கு உதவ முன்வந்தன. அமெரிக்க ஐரோப்பிய ஒனறியம் போன்றவற்றின், நிவாரணப் பொருளகளை ஏற்றிய கப்பலகள் மியன்மாரிற்கு வருகை தந்த போதும் மியன்மார் அதனை ஏற்கவில்லை.

மியன்மார் முதற்கட்டமாக இந்திய தாய்லாந்து போன்றவற்றின் உதவிகளை மட்டும் ஏற்றுக் கொண்டது. அவையும், மியன்மருடன் நெருக்கமான உறவைப் பேணும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று இந்தியா இரண்டு கடற்படைக் கப்பல்களையும், இரண்டு விமானங்களையும் வழங்கியதுடன் மருந்துகள், கூரைகள், உலர் உணவுப்பொருள்கள் என்பனவற்றையும் வழங்கியுள்ளது. தாய்லாந்து 10,0000 டொலரினை நிதியாக வழங்கியுள்ளதுடன் 12 தொன் உணவுப்பொருள்களையும் தாய்லாந்து செஞ்சிலுவை சங்கம் ஊடாக (Thai Red cross) அனுப்பியுள்ளது. அத்துடன் மியன்மாரில் உள்ள அமெரிக்க தூதரகம் 25,0000 டொலர் நிதியினையும், மலேசியா 1 மில்லியன் டொலரையும், பல உடுபுடவைகளையும் அனுப்பியுள்ளது. அத்துடன் அவுஸ்ரேலியா 23.5 மில்லியன் டொலரையும், பெல்ஜியம் 25,0000 யூரோவையும், கனடா Dissaster Assistant Responce Team (DART) இனை அனுப்பிவைத்துள்ளதுடன், 5.3 மில்லியன் டொலரையும் அனுப்பியுள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் 3 மில்லியன் டொலரையும், பிரான்ஸ் 77,5000 டொலரையும், ஜேர்மனி 3 மில்லியன் டொலரையும், ஜப்பான் உலக உணவுத் திட்டத்தின் மூலம் 26,7000 டொலரையும் வழங்கியுள்ளது.






எனினும் மேற்படி உதவிகளை ஏற்றுள்ள மியன்மார் தனது நிவாரணப்பணிகளுக்காக இராணுவத்தினரையே ஈடுபடுத்தியுள்ளது. இராணுவத்தினர் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு நிவரணப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எனினும் இராணுவத்தினர் அனர்த்தமீட்புப் பணியில் அவ்வளவு நிபுணத்துவம் பெற்றவர்களாக இல்லை. மேலும் இராணுவத்தினர். அதிக ஊழல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உணவுப்பொருள்களின் பெரும் பகுதிகளை இராணுவத்தினர் தமது தேவைகளுக்காகவே பயன்படுத்துகின்றனர். நிவாரணப்பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட குழுவினர்கள் மிகவும் மந்தமாகச் செயற்படுகின்றனர்.

ஒப்பீட்டு ரீதியில் மீட்புப் பணிகள் மிகவும் குறைவாகவே உள்ளது. மக்கள் இன்னமும் தற்காலிக இடங்களில் எவ்வித வசதிகளுமின்றி தங்கவைக்கப்பட்டுள்ளனர். முழுமையாக பாதிக்கப்பட்டுள்ள ஐராவதி டெல்லடாப் பகுதிகளில் அழிவுற்ற பகுதிகளில் இன்னமும் மீட்பு பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.



நா.பிரதீபராஜா
உதவி விரிவுரையாளர்,
புவியியற்றுறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

நிவாரணப்பணிகள் முழுமை யாக மேற்கொள்ளப்படாத நிலையில் வேறுநாட்டின் நிவாரணப் பணியாளர்களையும் உள்ளெடுக் காமல் மியன்மாரின் புனர்வாழ்வு, புனரமைப்புச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது. ஏனைய நாட்டு நிவாரணப் பணியாளர்களை உள்வாங்குவதற்கு மியன்மாரின் இராணுவ அரசு தன்னுடைய செயற்பாடுகளில் மாற்றங்களை கொண்டுவரல் வேண்டும். ஏனைய நாடுகளை அனுசரித்து அவற்றின் உதவிகளைப் பெறுதல் வேண்டும். ஆனால் ஏனைய நாடுகள் மியன்மாரில் ஜனநாயக ஆட்சி ஏற்பட்டால் மட்டுமே தமது உதவிகளையும், அனுசரணைகளையும் மேற்கொள்ளும். ஆனால் நிவாரணப் பணியாளர்களையே ஏற்றுக்கொள்வதற்கு தயங்கும் மியன்மாரின் இராணுவ அரசு ஜனநாயக ஆட்சியை உடனடியாகக் கொண்டுவரும் சாத்தியமில்லை. நிவாரணப் பணியாளர்களையும், ஏனைய நாடுகளின் உதவிகளையும் ஏற்றுக் கொள்ளவேண்டும் எனக்கோரி ஐ.நா.செயலாளர் மியன்மாருக்கு விஜயம் செயதுள்ளார்

எவ்வாறாயினும் மியன்மார் தனது போக்கை மாற்றிக் கொண்டு, ஏனைய நாடுகளுடன் ஒத்துழைக்க வேண்டும். மேலும் தனது அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளைத் திட்டமிடல் வேண்டும். நர்கீஸ் சூறாவளியின் பாதிப்பு மிக அதிகமாகக் இருந்தமைக்கு மியன்மாரின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் சிறப்பாக இல்லாமையே காரணமாகும். எனினும், மியன்மாரின் புனர்வாழ்வு, புனரமைப்புச் செயற்பாடுகள் சர்வதேசத்தின் உதவியின்றி முழுமையாக இடம் பெறமுடியாது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செலிங்கோ லை.்.ப் விருதுகள் '07

ஆயுட் காப்புறுதியில் எம்மை முதன்மை நிலைக்குக் கொண்டுவந்த
எமது வீரர்களை பாராட்டிக் கௌரவித்தோம்

## அதிசிறந்த பிரிவுத் தலைவர்




கே. பிரபாகரன்
திருகோணமலை கிளை

## அதிசிறந்த கிளைத் தலைவர்



ரி. நிரோஜன்
நெல்லியடி கிளை
Chairman's Club அங்கத்தவர்




## அதிசிறந்த விற்பனை ஆலோசகர்




டபிள்யூ.டி. நந்தனலால்
நீர்கொழும்பு கிளை

## 1ஆவது இலங்கை MDRT லை.்.ப் அங்கத்தவர்



டபிள்யூ.என்.சி. பெர்னாண்டோ
வென்னப்புவ கிளை
ஆகக்கூடிய கட்டுப்பண சேகரிப்பு - வெள்ளி
ஆனுசுவு மற்றும் தலைவர் கழகம்

## MDRT - கோர்ட் ஒப் த டேபிள் அங்கத்தவர்



ஏ.ஜ.பி. மஞ்சுள
அம்பலாந்தோட்டை கிளை
ஆகக்கூடிய கட்டுப்பண சேகரிப்பு - தங்கம்
MDRT - கோர்ட் ஒப் த டேபிள்

***MDRT (Million Dollar Round Table)* –**
ஆயுட் காப்புறுதி நிபுணர்களுக்கான உலகின் அதிமதிப்பார்ந்த அமைப்பு

***Chairman's Club* -**
செலிங்கோ லை.்.ப் மிகச் சிறந்த விற்பனைச் சாதனைகளுக்கு வழங்கப்படும் உயர்ந்த அங்கீகாரம்

## CEYLINCO LIFE STARS



ஆர். ரவீசரோஷன்
திருகோணமலை கிளை
மூன்றாமிடம்
அதிசிறந்த கிளைத் தலைவர்
Chairman's Club அங்கத்தவர்



பீ. நந்திக்குமார்
யாழ்ப்பாணக் கிளை
இரண்டாமிடம்
அதிசிறந்த கிளைத் தலைவர்
Chairman's Club அங்கத்தவர்



குமாரி தனபால
பண்டாரவளை கிளை
MDRT / Chairman's Club
அங்கத்தவர்



நுரிந்த புஷ்பகுமார
கண்டி கிளை
MDRT / Chairman's Club
அங்கத்தவர்



பிரபாத் ருக்மன்
நீர்கொழும்பு கிளை
MDRT / Chairman's Club
அங்கத்தவர்



கே. கோபி
திருகோணமலை கிளை
MDRT / Chairman's Club
அங்கத்தவர்



லக்மால் நிரோ
நீர்கொழும்பு கிளை
MDRT / Chairman's Club
அங்கத்தவர்



ரி. ஷோபனா
நெல்லியடி கிளை
MDRT / Chairman's Club
அங்கத்தவர்



சேபாலிகா பணாகொடை
கூட்டிணைந்த விற்பனை /
MDRT அங்கத்தவர்



டி.ஜே. மொனிக்கா
நுகேகொடை கிளை
MDRT அங்கத்தவர்



ரி. தம்பிராஜா
யாழ்ப்பாணம் கிளை
MDRT அங்கத்தவர்



நொயல் அந்தோனியோ
மருதானை கிளை
MDRT அங்கத்தவர்



துஷாரா சம்பத்
அம்பலாந்தோட்டை கிளை
MDRT அங்கத்தவர்



நீல் பிரியந்த
பிலியந்தலை கிளை
MDRT அங்கத்தவர்



பீ. ஸ்ரீதரன்
வெள்ளவத்தை கிளை
MDRT அங்கத்தவர்



கே. இரத்தினசிங்கம்
கொட்டாஞ்சேனை கிளை
MDRT அங்கத்தவர்



கே. செல்வக்குமார்
கொழும்பு வடக்கு கிளை
MDRT அங்கத்தவர்



எஸ். சிவநேசன்
சாவகச்சேரி கிளை
MDRT அங்கத்தவர்



ஜீ.ஜீ. பொத்தேஜு
பத்தரமுல்லை கிளை
Chairman's Club அங்கத்தவர்



சத்துர சப்பரமது
ஜா-எல கிளை
Chairman's Club அங்கத்தவர்



மகேஷ் ஹேமந்த
மீரிகம கிளை
Chairman's Club அங்கத்தவர்



டி.ஜ.டி.எஸ். யாப்பா
பொரளை கிளை
Chairman's Club அங்கத்தவர்



கே.பீ.ஏ. துஷார
கொட்டாஞ்சேனை கிளை
Chairman's Club அங்கத்தவர்



சமில் விக்கிரமசிங்க
நாத்தாண்டி கிளை
Chairman's Club அங்கத்தவர்



பீ. ரமணன்
நெல்லியடி கிளை
Chairman's Club அங்கத்தவர்

ZENITH MARCOM

# செலிங்கோ லை.்.ப்

செலிங்கோ இன்சுவரன்ஸ் பிஎல்சி

134, காலி வீதி, கொழும்பு 3. இணையத்தளம்: www.ceylincolife.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களில் உதயணன், பூரணன் என்ற புனை பெயர்களில் பல சிறுகதைகளையும் நாவல்களையும் கவிதைகளையும் எழுதியவர் இராமலிங்கம் சிவலிங்கம். யாழ்ப்பாணம், இணுவிலை சொந்த இடமாகக் கொண்டவர். அரசாங்க சேவையில் ஆரம்பத்தில் எழுதுவினைஞராகப் பணியாற்றியவர்.

''கல்கி'' நடத்திய சிறுகதை போட்டியில் ''தேடி வந்த கண்கள்'' என்ற அவரது சிறுகதை பரிசு பெற்றது.

வீரகேசரி, சுதந்திரன், கலைச்செல்வி ஆகியவற்றில் பல தரமான சிறுகதைகளைப் படைத்தவர். நகைச்சுவை நடை அவரது எழுத்துக்களில் பரவியிருப்பது தனிச்சிறப்பு.

''அந்தரங்க கீதம்'', ''பொன்னான மலரல்லவோ'', ''இதயவானிலே''ஆகிய அவரது நாவல்கள் பெயர் பெற்றவை. களுத்துறையில் அரசாங்க அலுவலராகப் பணியாற்றிய காலத்தில் நண்பர்களுடன் சேர்ந்து ''ஈழதேவி'' என்ற மாத சஞ்சிகையை வெளியிட்டார்.

1983 இனக்கலவரத்தை அடுத்து பின்லாந்து சென்றார். பின்லாந்து மொழியில் பாண்டித்தியம் பெற்று, அந் நாட்டின் பிரதான இதிகாசமான ''கலேவலா''வை மொழி பெயர்த்தார். அதனைக் காவியமாகவும், உரை நடையிலும் எழுதினார். அவற்றை பின்லாந்து அரசாங்கமே வெளியிட்டதுடன் அவருக்கு கௌரவமும் வழங்கியது.

70 வயதை தாண்டிய அவர் இப்போது கனடாவில் வாழ்கிறார்.

# ஒரு நாள் இன்பம்

செங்கதிர்கள் இருளின் வயிற்றைப் பிளந்தெறிந்ததால் அடிவானம் தோய்ந்து செந்நிறமாகக் காட்சி தந்தது.

மணி ஆறரை!

கந்தசாமி புரண்டு படுத்தான். அவன் கொஞ்சம் முன்னதாகவே எழுந்துவிடுவதால் அவனுடைய வீட்டில் ஏதாவது புதுமையாக நடந்துவிடப் போகிறதா? தலையைத் தூக்கி ஒரு நோட்டம் விட்டான். அடுப்புப் புகைந்து கொண்டிருந்தது; கோப்பியாக்கும்.

தங்கம் வாசற்படியில் உட்கார்ந்து தங்களது மூன்றாவது 'படைப்பை' மடியில் வைத்து தலைவாரிக் கொண்டிருந்தாள். கழுதை கெட்ட கேட்டுக்கு குஞ்சம் ஒன்றுதான் குறைச்சல்.

கந்தசாமி வலது பக்கமாகத் திரும்பிப் படுத்தான். கன்னம் 'சில்'லென்று இருந்தது; தலையணை ஈரம்! ஆமாம். இனி அவன் வடிப்பதற்குக் கண்ணீரே இல்லை; எல்லாவற்றையும் வடித்துவிட்டான்; சாட்சி, நனைந்துபோன அந்தத் தலையணை. இனி அவன் வணங்குவதற்குத் தெய்வமே இல்லை; எல்லாத் 'தெய்வங்களை'யும் வணங்கி விட்டான். சான்று, நைந்து போன அவனுடைய உள்ளம். இனி அவன் சிந்தித்துப் பார்க்க ஒரு வழியுமே இல்லை. எல்லா வழிகளிலும் சிந்தனையைச் செலுத்திப் பார்த்து விட்டான்; ஆதாரம், தனது சிந்தனா சக்தியைப் பற்றி அவனுக்கு இருந்த நல்லெண்ணம்.

அவனுடைய ஐந்தாவது சிருஷ்டி தவழ்ந்து வந்து அவனுடைய கால் கட்டை விரலைக் கடித்து, முளைத்துவரும் பல்லின் பலத்தைக் காட்டியது. கந்தசாமி குழந்தையைத் தூக்கித் தனது பக்கத்தில் படுக்க வைத்தான். பாயின் முரட்டுப் புல் குழந்தையின் முதுகுப் புண்ணை உராஞ்சியதால் அது வீறிட்டுக் கத்தியது. குழந்தையைத் தூக்கித் தன் நெஞ்சில் உட்கார வைத்துவிட்டு சிந்தித்தான். நல்லவேளை, சிந்திப்பதற்குப் பணம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இல்லாமல் இருந்ததே.

குழந்தையின் உடல் எல்லாம் கிரந்திப் புண். பிறந்த ஊராக இருந்தால் அளவெட்டிப் பரியாரியார் இருக்கவே இருக்கிறார். இங்கு கொழும்பில்? ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக அவனுக்கு நேரமில்லை. நேரமிருந்தாலும் மருந்துக்கும் பத்தியத்திற்கும் சத்துள்ள உணவிற்கும் மற்றது இல்லை - பணம்!

''வேலைக்குப் போகவில்லையா? மணி ஏழாகிவிட்டது'' என்று சொல்லிக் கொண்டு வந்த தங்கம் கோப்பியை அவனுக்கு அருகில் வைத்தாள்.

''போக வேண்டியதுதான்'' என்று எழுந்த கந்தசாமி அவளைப் பார்த்துச் சிரித்தான். அவன் சிரித்தது உள்ளம் பொங்கிய களிப்பினால் அல்ல - வெள்ளம் தலைக்குமேல் போய்விட்டதாம் இனி அழுதென்ன சிரித்தென்ன என்ற நினைவினால். அந்தச் சிரிப்பு அவனையும் அவளையும் ஏமாற்றிவிட்டுத் தன்னுயிரை மாய்த்துக் கொண்டது.

கந்தசாமி காலைக்கடன்களை முடித்துக் கொண்டு வந்து வெற்றிமுரசு கொட்டும் மூன்றாவது வாரமாக அந்தக் காற்சட்டையை அணிந்து கொண்டான்.

'விரைவில் இன்னொரு காற்சட்டை தைத்துக் கொள்ள வேண்டும்' என்று வழக்கம்போல அன்றும் எண்ணிக் கொண்டான். அந்த எண்ணத்தை அடித்துப் புரட்டி விழுத்தி விட்டுப் பாய்ந்தது ஒரு பெருமூச்சு.

வேலைக்குப் போகிறவராச்சே என்று சதம் சதமாகப் பொறுக்கித் தங்கம் வாங்கி வைத்திருந்த மூன்று தோசைகளையும் பிள்ளை பரிவாரத்திற்குப் பகிர்ந்தளித்து விட்டுப் பிதாவாகப் புறப்பட்டான் கந்தசாமி.

தாழ்வாரத்தில் ஒட்டிக்கொண்டிருந்த, யுத்தகாலத்தில் பலத்த பந்தோபஸ்துடன் ஈழத்திரு நாட்டிற்கு வந்துசேர்ந்த வாகனத்தை - சைக்கிளை, வெளியே இழுத்து அதன் முதுகை - ஆசனத்தைத் தட்டிக் கொடுத்தான். காற்சட்டைக் கால்களைக் காலோடு சேர்த்துச் சுற்றி ஒரு 'கிளிப்'பைக் கொழுவிவிட்டான்; காற்சட்டை சைக்கிளில் மாட்டிக் கொள்ளக் கூடாது என்பது ஊரறிந்த காரணம்; அவன் மட்டிலும் தெரிந்த சில பல காரணங்களும் இருக்கலாம்.

தங்கம் வாசலில் வந்து நின்றாள்.

கந்தசாமிக்கு விசயம் விளங்கிவிட்டது.

'கணவன்மார்களே! நீங்கள் வெளியே

(10 ஆம் பக்கம் பார்க்க...)

# செய்வதைத் திறம்படச் செய்யுங்கள்; தேவசக்திகளை உங்கள் பால் ஈர்க்கலாம்

சாதாரண வேலைகள் செய்வதன் மூலம் ஒருவன் சாதனை புரிய முடியுமா? முடியும் என்று மனிதனுக்கு நம்பிக்கையூட்டுகிறார் சுவாமி விவேகானந்தர்.

''பிரபஞ்சத்திலுள்ள எல்லா ஆற்றல்களையும் தன்னை நோக்கிக் கவர்ந்து , தன்னுள் ஒருங்கிணைத்து, மாபெரும் சக்தியாக வெளியே அனுப்புகின்ற ஒரு மையம்போல் இருக்கிறான் மனிதன். அந்த மையம்தான் உண்மை மனிதன், அவன் எல்லாம் வல்லவன், எல்லாம் அறிந்தவன்'' என சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார்.

இதே கருத்தை வலியுறுத்தி மகாகவி

## மனிதன் புனிதனாகாவிடில் ''கணிதன்'' ஆகிவிடுகிறான்

பாரதியார் 'தேவசக்திகளை நம்முள்ளே நிலை பெறச் செய்யும் சொல் ஒன்று வேண்டும்' என்று பிரார்த்திக்கின்றார்.

மனிதன் தொடர்ந்து முன்னேற வேண்டும். மிருக நிலையில் உள்ளவன் மனிதனாக வேண்டும். மனிதன் புனிதன் ஆக வேண்டும்.

அப்படி புனிதன் ஆகவில்லை எனில் அவன் 'கணிதன்' ஆகிவிடுவான். கணிதன் என்றால் கணக்குப் பார்க்கும் புத்தி உடையவன். நான் இவ்வளவு செய்தேன். எனக்கு இவ்வளவு வர வேண்டும் என்று எதிர்பார்ப்பவன் கணிதன். இப்படிப்பட்டவன் கடவுளிடமே கணக்கு கேட்க ஆரம்பித்துவிடுவான். எனக்கு அதைக் கொடு, நான் உனக்குப் பாலபிஷேகம் பண்ணுகிறேன் என்று பேரம் பேசத் தொடங்கிவிடுவான்.

பிறகு சக மனிதர்களிடமும், தன் மனைவி, குழந்தைகளிடமும் அவன் கணக்குப்பார்க்கத் ஆரம்பிப்பான். அவர்களும் அவனிடம் கணக் குப் பார்க்கத் தொடங்குவார்கள்.

அதனால் வாழ்வில் பரஸ்பர நம்பிக்கை போய்விடும்; சந்தோஷமும் தொலைந்து விடும்.

அப்போது மனிதன், இருக்க வேண்டிய விதத்தில் - சக்தி மையமாக - இல்லாமல் ஓரத்தில் எங்கோ ஒதுங்கிப் போகிறான்; அதனால் ஒதுக்கப்படுகிறான். சுவாமிஜி கூறும் 'மையநிலை மனிதனாக'- பாரதி பாடும் 'தேவசக்திகளைத் தன்னுள்ளே நிலைபெறச் செய்வது' எப்படி?

மனிதன் தன்கடமைகளை, பொறுப்புக்களை, ஏன், சாதாரண வேலைகளைக் கூட மேலான நெறியுடன் செய்தால் பிரபஞ்ச சக்திகளைத் தன்னுள் ஈர்க்க முடியும்.

அதற்குத் தவம், தியானம் என்று பல நெறிகள் இருந்தாலும், பல தரப்பட்ட மக்களும் உயர்நிலையை அடைய சுவாமிஜி சில அடிப்படைக் கருத்துக்களைக் கூறுகிறார்.

அந்த நிலையை அடைய ஒவ்வொருவரும் 'செயல் பண்பு'களைக் (WORK CULTURE) கொண்டிருப்பது அவசியம்.

**செயல் பண்பு என்றால் என்ன?**

நமது சாஸ்திரங்கள் 'கர்மத்தை (பணிகளை) வெறும்வேலையாகச் செய்யாதே; கர்மயோகமாகச் செய்' என்று கூறுகின்றன.

நாம் வேலை செய்யும் போது நம்மைச் சுற்றியுள்ள உயர்சக்திகள் வந்து நம்முள் கூடினால் அது கர்மயோகம் எனப்படும். கர்மயோகம் என்பது நாம் இருக்க வேண்டிய நிலையைச் சொல்கிறது.

நாமாக ஈடுபட்டாலும் அல்லது தானாக வந்தாலும், நாம் விரும்பி ஏற்றுக்கொண்ட கர்மத்தில் யோகம் கைகூட வில்லை என்றால், 'கர்மம், கர்மம்'! என்று தலையில் அடித்துக் கொள்வோம்.

அந்நிலை வராதிருக்க வேண்டும் என்றால் நீங்கள் எந்த வேலையைச் செய்தாலும்-அடுப்படியில் பால் காய்ச்சலாம்; அதிகாரியாக இருக்கலாம்; மாணவனாக இருக்கலாம்- எதைச் செய்தாலும் திறம்படச் செய்ய வேண்டும்.

அப்போது பிரபஞ்சத்தின் சக்திகள் நம்முள் வந்து நிறைந்து சிறந்த பதிவுகளை விட்டுச் செல்லும்.*(நன்றி: ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்)*

# இப்படியும் மாற்றங்கள்

*மூச்சுள்ள வரையில்*
*அதன்பெயர் சிவமாம்!*
*மூச்சற்ற கணம்முதல்*
*அதன்பெயர் சவமாம்!!*
* * *

*உயிர் உள்ள போது*
*பசுமரம் என்கிறோம்!*
*உயிர் அற்ற போது*
*விறகு என்கிறோம்!!*
* * *

*நெல்லு என்கிறோம்-*
*உமியுடன் உள்ளவரை!*
*அரிசி என்கிறோம்-*
*உமியினை இழந்தபின்!!*
* * *

*பானையில் இடும் வரை-*
*அரிசி என்கிறார்!*
*பானையில் அவிந்த பின்-*
*சோறு என்கிறோம்!!*
* * *

*தறியினுள் போகும் வரை*
*அதன் பெயர் நூல்!*
*தறிவிட்டு மீளும் போது*
*அதன் பெயர் சேலை!!*
* * *

*மலரென் பார்கள்-*
*தனியாக இருக்கையில்!*
*மாலை என்பார்கள்-*
*நாரினால் இணைக்கையில்!!*
* * *

*வெப்பம் ஏற்றும் வரை-*
*அதுவே தண்ணீர்!*
*வெப்பம் ஏற்றியபின்-*
*அதுவோ சுடுநீர்!!*
* * *

மருத

# நீதி கிடைக்காத மக்கள் சொரியும் கண்ணீர் நீதிவானாக மாறி ஆட்சியாளரை வேரோடு அறுக்கும்!

# இலக்கியப் பொழில்

கண்ணீருக்கு அஞ்சாத குடும்பமோ நாடோ நிம்மதி காணமுடியாது. வீட்டில் தலைவியின் கண்ணீருக்குத் தலைவன் அஞ்ச வேண்டும். அது குடும்பப் பண்பாடு. நாட்டில் குடிமக்களின் கண்ணீருக்கு ஆட்சியாளர் அஞ்சவேண்டும். அது அரசியல் பண்பாடு. கண் ணீருக்கு அஞ்சாத குடும்பத்தையோ ஆட்சியையோ மும்மூர்த்திகளே வந்தாலும் காப்பாற்ற முடியாது என்கிறான் அரசன் ஒருவன். அவன் அரசனாகவும் இருக்கிறான், அதே நேரத்தில் புலவனாகவும் இருக்கிறான். அவன்தான் அதிவீரராம பாண்டியன்.

ஆட்சியில் இருப்பவன் ஒருவன் குடிமக்களின் வழக்கு ஒன்றை எப்படி ஆராய வேண்டும் என்பதையும் கண்ணீருக்கு எப்படி அஞ்ச வேண்டும் என்பதையும் அதிவீரராமபாண்டியன் ஒரு பாடலில் கூறுகின்றான். அவன் கருத்து குடி ஆட்சிக்கும் பொருந்தும். முடி ஆட்சிக்கும் பொருந்தும்.

வழக்கு ஒன்று ஆட்சியாளரின் முன்னிலையில் வரும்போது ஆட்சியாளர் வழக்குத் தொடர்பான இரு தரப்பினரும் கூறும் கருத்தை ஏழு முறை கேட்க வேண்டும். நீதி தவறாது இரு கட்சியினரும் ஏற்றுக்கொள்ளுமாறு தீர்ப்பு வழங்க வேண்டும். ஆட்சியாளர் வழங்கும் தீர்ப்பிலே நீதி கிடையாமல் ஒரு பகுதியினர் கண்ணீர்விடும் நிலை ஏற்படக் கூடாது. ஏற்பட்டால் நீதி கிடைக்காதவர் விட்ட கண்ணீர் நீதிவானாக மாறி நீதி பிழைத்த ஆட்சியாளரையும் அவர் பரம்பரையையும் வேரோடும் அறுத்துவிடும் என்கிறார். நீதி பிழைத்த ஆட்சியாளரை மும்மூர்த்திகளே வந்தாலும் கண்ணீரிலிருந்து காப்பாற்ற முடியாது என்கிறார்.

அதிவீரராமபாண்டியனின் அந்தப் பாடல் வருமாறு:-

**'' இருவர்தம் சொல்லையும் எழு தரம் கேட்டே**
**இருவரும் பொருந்த உரையார் ஆயின்**
**மனுமுறை நெறியின் வழக்கு இழந்தவர் தம்**
**மனமுற மறுகி நின்று அழுத கண்ணீர்**
**முறையுறத் தேவர் மூவர் காக்கினும்**
**வழிவழி ஈர்வதோர் வாளாகும்மே.**

## பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு முதலில் தெரிந்தது கண்ணகியின் கண்ணீரே! - அதனால் அவன் அரசனே!!

**கண்ணீர் பற்றித் திருவள்ளுவர்**

அரசன் நாற்படை வலிமை உடையவனாக இருக்கலாம். வீராதி வீரனாக இருக்கலாம். ஆயினும் குடிமக்களின் கண்ணீரை அவன் மதிக்கவில்லை என்றால், குடிமக்கள் சொரியும் கண்ணீரே ஆட்சியை விழுத்திவிடும் என்கிறார்.

**''அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை''**

அரசன் நீதி வழங்காமையால் குடிமக்கள் துன்பப்பட்டு அழுத கண்ணீர் அரச செல்வத்தைத் தேய்க்கும் படை என்கிறார்.

பாண்டியன் நெடுஞ்செழியன் சிறிதும் ஆராயாது கோவலனைக் கொன்ற பெரும் தவறு புரிந்தான். ஆயினும் கண்ணீருக்கு அஞ்சும் பண்பு அவனிடம் இருந்தது. கண்ணகியைக் கண்டதும் அவன் கேட்ட கேள்வி:-

**'' நீர் வார் கண்ணை எம்முன் வந்தோய்**
**யாரையோ நீ மடக்கொடி?''** என்பதாகும்.

பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு முதலில் தெரிந்தது கண்ணகியின் கண்ணீர் தான். அவன் அரசனாயினும் மக்களின் கண்ணீருக்கு அஞ்சினான். அதனாலேயே நீர் சொரியும் கண்களை உடை யாய்! எம் முன் வந்து நிற்கின்றாய்! ''நீ யார்?'' என் கிறான்.

ஆட்சி குடியாட்சியாகவும் இருக்கலாம்; முடியாட்சியாகவும் இருக்கலாம். வலிமை உடையதாகவும் இருக்கலாம். ஆனால் குடி மக்களின் கண்ணீர் இவற்றை எல்லாம் அழித்து விடும்!



புலவர்.ம.பார்வதிநாதசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நாள் இன்பம்....

*(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

புறப்படும் சமயமாக வாசலில் குறுக்கே வந்து நின்று உங்கள் மனைவியர் ஒரு புன்னகையை வலுக்கட்டாயமாக உங்கள்பால் விட்டெறிந்தால் அடுத்து வர இருக்கும் ஒரு பேராபத்திற்கு முகம்கொடுக்கத் தயாராகுங்கள். அவர்களைத் தொட்டுத் தாலிகட்டிய அந்தப் பழைய கணக்கைக் கூட்டிப் பார்த்து ஆறுதலடையுங்கள். மிஞ்சி மிஞ்சிப் போனாலும் அவர்களுடைய கோரிக்கை ஒரு புடைவையாகவோ ஒரு புன்னகையாகவோதான் இருக்கும். 'ஆகட்டும்' என்று சொல்லிவைத்தால் போதும்; வாக்கைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் இல்லை. கண்ணீர்க் குண்டுகளுக்குப் பயந்து உங்கள் பலவீனத்தை வெளிப்படுத்தாமல் தைரியமாக நடந்து விட்டால் உங்கள் வர்க்கத்தினரின் மானத்தைக் காத்த பெருமையைப் பெறுவீர்கள்.'

''தங்கம்......!'' கந்தசாமி சிரமப்பட்டு ஒரு சிரிப்பை இழுத்துவந்து தன் முகத்தில் மேயவிட்டான். '' எங்கள் நிலைதான் உனக்குத் தெரியுமே. கடன்காரரால் பகல் நேரத்தில் வீட்டுக்கு வரவே முடியவில்லை. பொறுத்ததோடு இன்னும் ஒரு மாதம் பொறுத்துக் கொண்டால், நீ கேட்ட சேலையை வாங்கி விடலாம்.''

தங்கத்தின் முகத்தில் எந்தவிதமான உணர்ச்சியின் பிரதிபலிப்பும் தெரியவில்லை; பெண்ணல்லவா?

''அதுவும்போக'', கந்தசாமியே தொடர்ந்தான். '' மற்றவர்கள், வசதியுள்ளவர்கள் ஆடம்பரமாகத்தான் வாழ்வார்கள். அதைப் பார்த்து நாமும் ஆசைப்பட்டால் முடியுமா? பிள்ளைகளுக்கே உருப்படியான சட்டை எதுவும் இல்லை. உன்னை இந்தக் கோலத்தில் காண்பதில் எனக்கு மட்டும் திருப்தியா, என்ன? என்னவோ கெட்டகாலம். சேலையை அடுத்த மாதம் வாங்கிக்கொள்ளலாம். 'ம்' என்று சொல்லு. நான் நிம்மதியாக வேலைக்குப் போய் வரலாம்.'' கந்தசாமி நிறுத்தினான்.

''உங்களுக்கு எப்பொழுதுதான் இந்தப் பஞ்சப்பாடு தொலையப்போகிறதோ தெரியாது. வருஷம் பன்னிரண்டு மாதம் உங்களுக்குத்தான் கொள்ளையும் கோதாரியும். இனிமேல் உங்களை ஒன்றும் கேட்காமல் தெருவால் போகிறவன் வருகிறவனை சேலை வாங்கித் தரச்சொல்லிக் கேட்கட்டுமா?''

''நீயுமா தங்கம்?'' என்றான், 'சீஷர்' பாணியில். அவனுடைய முகத்தில் பரிதாபம் இடம் பிடிக்க அகத்தில் வேதனை குடி புகுந்தது.

''நீயுமா? நிலைமை தெரிந்த நீயுமா என்னை வதைக்கிறாய்?'' என்றவன் தன் கண்களில் ஜென்மம் பெறும் முத்துக்களை மனைவி கவனித்துவிடக் கூடாது என்று சைக்கிளில் ஏறி வேகமாக மிதித்தான்.

'அவளும்தான் எத்தனை காலத்துக்குப் பொறுப்பாள்? என்னுடைய தங்கம் தங்கமானவள்.'

கந்தசாமியை - கந்தசாமியையே- தாங்க முடியாமல் அந்தப் பழைய சைக்கிள் நெழிந்தது. பின் சில்லு ஒன்பதாவது கம்பியையும் முறித்து பின்னரும் சாமகீதம் பணிவுடன் பாடலுற்றது. கந்தசாமி திருவுளம் இரங்கி 'சைக்கிளை விட்டு இறங்கி அதைத் தள்ளிக் கொண்டு நடந்தான்.

கந்தசாமிக்கு முன்னால் போய்க்கொண்டிருந்த ஒருவன் தனது காற்சட்டைப் பையில் கையைவிட்டு கைக்குட்டையை வெளியே எடுத்தான். அதோடு ஒரு மடித்த காகிதமும் சேர்ந்துவந்து தெருவில் விழுந்தது.

''ஐயா......! '' என்று குரல் கொடுத்தபடி கந்தசாமி அதை எடுத்து விரித்தான். அது ஒரு நூறு ரூபா நோட்டு. அதற்கிடையில் உரியவன் தெரு மூலையில் திரும்பிவிடவே கந்தசாமி நோட்டை ஆகாய வெளியில் பிடித்துப் பார்த்தான். சந்தேகமில்லை..... அது ஒரு கள்ள நோட்டு!

நேர்மை, வேண்டாமென்றது.

வறுமை, வேண்டுமென்றது.

உள்ளத்தில் ஒரு மின்னல்!

'....வருஷம் பன்னிரண்டு மாதமும் உங்களுக்குத்தான் கொள்ளையும் கோதாரி யும்... வருஷம் பன்னிரண்டு மாதமும் உங்களுக்குத்தான் கொள்ளையும் கோதாரியும்..... வருஷம் பன்னிரண்டு'

கந்தசாமி நடந்தான். எதிரே ஒரு பொலிஸ்காரன் வந்தான். கந்தசாமியை ஏதோ ஒன்று எச்சரிக்கை செய்தது: அந்தக் கள்ளநோட்டை எட்டாக மடித்து சட்டைப்பை அடியில் போட்டுக் கொண்டு குனிந்த படி நடந்தான். பொலிஸ்காரன் போய்விட்டான்.

கந்தசாமி மேலும் நடந்தான்.எதிரே அவனுக்குக் கடன் கொடுத்த ஒருவன் வந்தான். கந்தசாமி பயந்துபோய், சைக்கிளைத் தெருவோரத்தில் நிறுத்திவிட்டு ஒரு சந்தில் நுழைந்து மறைந்து கொண்டான்.

பொலிஸ்காரனைக் கண்டு கள்ள நோட்டை மறைத்த கந்தசாமி கடன்காரனைக் கண்டு தன்னையே மறைத்துக் கொண்டான். ஏன், கந்தசாமியும் இந்தச் சமுதாயத்தில் ஒரு 'ஒரு கள்ள நோட்டு'த்தானா? அவனைப் போன்றோர் மனிதரோடு மனிதனாக வெளிப்படையாக வாழவே முடியாதா?

இங்கு கந்தசாமியைப் பற்றியும் ஒரு வார்த்தை குறிப்பிட வேண்டும். அவன் நடுத்தர வகுப்பில் வாழநேர்ந்தவன் -ஒரு குமாஸ்தா!

வழக்கம்போல அலுவலகத்தில் ஒரு கட்டுப்பணத்தையும் அதற்குரிய பத்திரங்களையும் ஒப்புக்கொண்டான் கந்தசாமி. அந்தப் பதினாயிரம் ரூபாவையும் வங்கியில் கொண்டுபோய் கட்டிவிட்டு வர வேண்டும். அவனுடைய உள்ளத்தில் ஒரு மெல்லிய கீறல் விழுந்து துடித்தது. அவனுக்குச் சிந்திக்க நேரமில்லை. மனைவியிடமும் மற்றவர்களிடமும் மதிப்பாக வாழ வேண்டுமென்றால் பொய்யும் புரட்டும் செய்யத்தான் வேண்டு மென்று எண்ணியதோடு துணியவும் செய்தான்.

அந்தக் கள்ளநோட்டை எடுத்து அதில் அடையாளமாக ஒரு சிலுவைக் குறியைப் போட்டு அதை நோட்டுக் கட்டுக்கு நடுவில் திணித்தான். ஒரு நல்ல நோட்டை எடுத்துத் தான் வைத்துக் கொண்டு நடந்தான்.

ஐயோ, அந்த அரைமணி நேரமாக அவனுடைய மனம் துடித்த துடிப்பு! ஏதாவது விபரீதமாக நடந்துவிட்டால் நாளைக்குத் தங்கத்தின் கதி.....? பிள்ளைகளின் நிலை.....? 'தங்கத்தின் மீது ஆணை! இனிமேல் இந்த வேலையை நான் செய்ய மாட்டேன்' என்று எண்ணியவனாய் வங்கிப் படிகளில் இறங்கினான் - கையில் நல்ல நோட்டுடன்!

அந்த ஒருநாளாவது அவனுடைய குடும்பத்தை இன்பமாக இருக்க வைப்போம் என்ற நினைவு போலும், கடைத்தெருவில் இறங்கினான் கந்தசாமி.

எல்லோருக்கும் வரிசையாக உடுப்பு வாங்கினான். நல்ல உணவுப் பொருள்களைத் தேடி வாங்கினான். தங்கத்திற்கு ஒரு 'கிலிட்' சங்கிலி, தனக்கொரு ஜப்பான் பேனா, மூத்ததுக்கொரு றிப்பன், இளையதிற்கு ஒரு கிலுகிலுப்பை - இன்னும் எத்தனையோ! கடைக்காரனுக்கு ஒன்றேகால் ரூபா கடன் வேறு வைத்துவிட்டுத் திரும்பினான் கந்தசாமி.

அன்றிரவு கந்தசாமி சாவதானமாக இருந்து கூப்பன் கடைக்கு இவ்வளவு காய்கறிக் கடைக்கு இவ்வளவு என்று எதிர்வரும் சம்பளப் பணத்திற்குப் பங்கீட்டுக் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தான். அன்றைக்கு குளித்து முழுகி வயிறார உண்டதால் பிள்ளைகள் எல்லோரும் உறங்கி விட்டனர்.

தங்கம் வெற்றிலையை மடித்துக் கந்தசாமியின் வாயில் வைத்துவிட்டுச் சிரித்தாள். பல நாள்களுக்குப் பிறகு அவளுடைய விழிகள் அவனை -

''ஏன் சிரிக்கிறாய்?'' என்று அவளுடைய கன்னத்தைக் கிள்ளப் போனான் கந்தசாமி.

''ஆமாம், இன்றைக்கு இவ்வளவு பணம் ஏது?'' என்று தங்கம் கேட்டாள்.

கந்தசாமி அவளிடம் பொய் சொல்லவில்லை. உண்மையையும் சொல்லி விடவில்லை. சிரித்து மழுப்பினான். பேச்சை வேறு துறைக்கு மாற்றினான்.

''இன்றைக்கு நீ மிகவும் அழகாக இருக்கிறாய் '' என்று கொஞ்சினான்.

''போங்க.....!'' என்று அவள் கடைக்கண்ணால் அவனை நோக்கினாள். அவன் அவளை இழுத்து தன் மடியில் படுக்க வைத்தான். அவள் நெளிந்தாள்.

விடிந்தது.

கந்தசாமி படுக்கையை விட்டு எழவில்லை; எழமுடியவில்லை. அவனுக்கு நல்ல காய்ச்சல். முதல் நாள் வெயிலில் அலைந்ததன் விளைவு .

தங்கம் குடிநீர் போட்டுக் கொடுத்தாள். அதைக் குடித்துவிட்டு, வீடு தேடிவந்த கடன்காரனின் வசைகளை வாங்கிக் கொண்டு கிடந்தான்.

மூன்றாம் நாள் காலை அவனுடைய வீட்டு வாசலில் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து அவன் வேலை பார்த்த கடை முதலாளியே இறங்கி வந்தார். ''எப்படியப்பா கந்தசாமி சுகம்?''

''இப்போ பரவாயில்லை சார்'' என்று பயபக்தியுடன் பதில் தந்தான் கந்தசாமி.

''அவசரப்படாமல் நன்றாகச் சுகம் வந்ததும் வேலைக்கு வா. இது இந்த மாதச் சம்பளம். உனக்கு நெருக்கடியாக இருக்குமென்று இருபத்தைந்து ரூபா மேலதிகமாக வைத்திருக்கிறேன். அதை அடுத்த மாதச் சம்பளத்தில் பிடித்துக் கொள்ளலாம்.'' என்று சொல்லி ஒரு உறையைத் தங்கத்திடம் கொடுத்தார்.

முதலாளி போய்விட்டார்.

கந்தசாமி உறையை வாங்கி ஆவலோடு பிரித்து, உள்ளே இருந்த ஒரே ஒரு நோட்டை வெளியே எடுத்தான். அதன்.... வலது பக்க மேல் மூலையில்....... ஒரு சிலுவை அடையாளம் இருந்தது.


ஒரு நூறு ரூபா நோட்டு!

*1964. (நன்றி:சுதந்திரன் சிறுகதைகள்)*

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் இராமசாமிப்பிள்ளை வைத்திலிங்கம்

(பிரபல தொழிலதிபர் - ஆர்.வி.ஜி.பீடி கம்பனி, ஆர்.வி.ஜி.மருந்தகம்)



மலர்வு:
28.08.1932

மறைவு:
01.06.2006


வருடங்கள் இரண்டு ஓடி மறைந்தபோதும்
ஐயா நீங்கள் எம்மைவிட்டு மறைந்தாலும்
எமது இதயங்களில் என்றும்
எம்முடன்தான் இருக்கிறீர்கள்.
பிறப்பும், இறப்பும் வாழ்வின்
நியதியென்றாலும் எங்கள் நினைவுகளில்
என்றும் நீங்கள் வாழ்வீர்கள்
உங்கள் ஆத்மாவிற்கு சொர்க்கம் நிச்சயமே.
உங்கள் ஆத்மா சாந்திபெற நாம் யாவரும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*
**- குடும்பத்தினர்.**

ஆர்.வி.ஜி.ஸ்தாபனம்,
இல.58, நல்லூர் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்றீரியாத் தொற்றுடைய பாலுண்ணி மனிதனைக் கடிப்பதனால் உண்ணிக் காய்ச்சல் உண்டாகிறது!

### பாலுண்ணியின் வாழ்க்கை வட்டம்




• உண்ணிக் காய்ச்சலை ஏற்படுத்தும் பாலுண்ணியானது Leptotrombiculid வகுப்பைச் சேர்ந்ததாகும்.

• வாழ்க்கை வட்டம், பல படிநிலைகளுடன் கூடிய சிக்கலானதொன்றாக அமையப்பெற்றாலும், அதனை நிறையுடலி, முட்டை, குடம்பி, கூட்டுப்புழு என்னும் நான்கு நிலைகளில் எளிதாக்கி நோக்கலாம்.

• நிறையுடலி பாலுண்ணியானது கண்ணிற்குப் புலப்படாத அளவிற்கு மிகவும் சிறியதாகும். (1-2mm)

• இது ஒட்டுண்ணியல்லாதபடியால், மண்ணில் வாழ்கின்ற சிறிய பூச்சிகளையும் அவற்றின் முட்டைகளையும் உணவாகக் கொண்டு சுயமாக வாழும்.

• இது முட்டைகளைப் பொதுவாக ஈரலிப்பான தரை மற்றும் இலை குழைகளிற்கு அடியில் இடும்.

• பத்து தொடக்கம் பதினான்கு நாள்களில் முட்டையிலிருந்து குடம்பி வெளிவரும்.

• இக்குடம்பிப் பருவமே ஒட்டுண்ணியாகும்.

• மிகவும் சுறுசுறுப்பாக இயங்கும் குடம்பி, அருகிலுள்ள தாழ்வான மரங்கள் மற்றும் செடிகளில ஏறி, அதன் விருந்து வழங்கிகளான (Host) சிறு விலங்குகள் மற்றும் மனிதர்களின் வரவுக்காகக் காத்துக்கொண்டிருக்கும்.

• மனிதன் அல்லது சிறுவிலங்குகள் இவ்வாறான பாலுண்ணிகள் நிறைந்த மரஞ்செடிகள் உள்ள இடங்களினுள் நுழையும் போது, இவற்றுடன் பாலுண்ணி ஒட்டிக்கொள்ளும்.

• அது பொதுவாக மெல்லிய, ஈரலிப்பான தோல் உள்ள இடங்களிலேயே விரும்பி ஒட்டிக் கொள்ளும் (உ+ம் - காது, இலிங்க உறுப்பு, குதப்பகுதி)

• அங்கிருந்து உடைகள் உடலுடன் இறுக்கமாக இருக்கும் இடங்களுக்கும் செல்லும் (உ+ம் - இடுப்பு, கீழ்க்கால்)

• இவ்வாறு தோலில் ஒட்டியவாறு இருந்து, அதனுடைய வாயுறுப்பால் தோலைக் கிழித்து, அதன் உமிழ்நீரைச் செலுத்தும்.

• குடம்பியானது நிணநீரையும் (Lymph) இழையப் பதார்த்தங்களையும் உணவாகக் கொள்ளும். ஆனால் பொதுவாக மனிதக் குருதியை உணவாகக் கொள்ளாது.

• இவ்வாறு விருந்து வழங்கியில் ஒட்டியவாறு குடம்பியானது 2-10 நாள்களுக்கு உணவைப் பெறும்.

• ஆரம்பத்தில் சிறிதாக இருக்கும் குடம்பி (0.15-3mm), விருந்து வழங்கியில் உணவைப் பெற்று ஆறு மடங்கு உருப்பெருக்கும்.

• ஒவ்வொரு தடவையும், உணவு உண்ணும்போது தோலினுள் உமிழ்நீரைச் செலுத்துவதால் தோலில் அழற்சி உருவாகும்.

• போதியளவு உணவைப் பெற்ற பிறகு, குடம்பியானது தானாகவே விருந்து வழங்கியிலிருந்து விடுபட்டு, நிலத்தில் விழும்.

• பின்பு நிலமட்டத்திற்குச் சற்றுக்கீழே மண்ணிற்குள் தன்னைப் புதைத்துக் கொள்ளும்.

• குடம்பி பின்பு கூட்டுப்புழுவாகி, இறுதியில நிறையுடலியாகி அதன் வாழ்க்கை வட்டத்தைத தொடரும்.

எனவே பாலுண்ணியின் வாழ்க்கை வட்டத்தை நோக்கும்போது அதன் குடம்பிப் பருவம் மாத்திரமே ஒட்டுண்ணி என்பது தெள்ளத் தெளிவாகிறது. குடம்பி விருந்து வழங்கியிலிருந்து உணவைப் பெறும்போது, உணவுடன் சேர்த்து, பக்றீரியாவையும் பெற்றுக்கொள்ளும். இவ்வாறு ஒரு தடவை தொற்றிற்குள்ளானால், பாலுண்ணியானது அதன் வாழ்நாள் முழுவதும் தொற்றுடையதாகவே இருக்கும். அதுமட்டுமின்றிப் பக்றீரியாவைத் தனது அடுத்த சந்ததிக்கும் இனப்பெருக்கம் மூலம் (Transovarian Transmission) கடத்தவல்லது. இவ்வாறு சந்ததிகளிற்கிடையான பரவல் தொடரும். இதனால் பாலுண்ணி காவியாக மட்டுமின்றி, கிருமி மூலமாகவும் தொழிற்படுகின்றது.

பாலுண்ணியின் வாழ்விடங்களையும், வாழ்க்கை வட்டத்தையும் கருதும்போது, இந்நோயினால் அதிகமாகப் பாதிக்கப்படுபவர்களாக,

•வயல் வேலை, தோட்ட வேலை செய்வோர்.

• காட்டுப் பகுதிகளில் வேலையில் ஈடுபடுவோர்.

•மற்றும் இராணுவ வீரர்களைக் குறிப்பிடலாம்.

அடுத்ததாக, தொற்றுக்குள்ளான பாலுண்ணி, எவ்வாறு கிருமியைப் பரப்பி நோயை ஏற்படுத்துகிறது என்று பார்ப்போம்.

### நோய் பரவும் முறை


உண்ணிக் காய்ச்சலானது விலங்குகளால் மனிதனுக்கு ஏற்படுத்தப்படும் ஒரு நோயாகும். (Zoonotic disease) அதாவது, விலங்குகளின் உடலில் உள்ள கிருமிகளைக் காவியானது விலங்கிலிருந்து மனிதனுக்குக் காவி நோயை விளைவிக்கிறது.

கிருமி மூலங்களாகத் தொழிற்படும் விலங்குகளாக எலி மற்றும் சிறிய கொறித்துண்ணும் விலங்குகளைக் குறிப்பிடலாம். காவிகளாவன பாலுண்ணிகளாகும். பாலுண்ணிகள் செறிந்து காணப்படும் இடங்களை 'உண்ணித் தீவுகள்'

**உண்ணிக் காய்ச்சல் குறித்து அறிந்துகொள்ளுங்கள் 02**

(Mite islands) என்றழைக்கலாம். இது சிறிய மரஞ்செடி, புதர்கள், புல் பூண்டுகளைக் கொண்ட பகுதயாகும். வயல்வெளிகளை அண்டிய பகுதிகள், இரண்டு காட்டுப் பகுதிகளைப் பிரிக்கும் இடங்கள் மற்றும் அழிக்கப்பட்ட காடுகள் மீண்

நோய் எவ்வாறு பரவுகிறது என்பதை இப்படம் காண்பிக்கிறது. எனவே உண்ணிக் காய்ச்சலானது, ஒரு மனிதனில் இருந்து இன்னொரு மனிதனுக்கு நேரடியாகப் பரவாது என்பது படத்தின் மூலம் புலனாகிறது. அடுத்ததாக, யாழ்ப்பாணத்தில் எந்தக் காலப்பகுதியில் இந்நோய் அதிகமாக ஏற்படுகிறது என்று பார்த்தால், குறிப்பாக அறுவடை காலங்களில் (தை, மாசி, பங்குனி மாதங்களில்) இந்நோயின் ஆதிக்கம் பலமாக இருப்பதைக் காணலாம். ஏனெனில் அறுவடை காலத்தில் வயல்வெளிகளை அண்டிய சிறு








டும் வளரும் இடங்களை உதாரணங்களாகக் கூறலாம். இவ்வாறான இடங்கள் பாலுண்ணிகளிற்கு மட்டுமின்றி, கிருமி மூலங்களாகத்

காட்டுப் பகுதி களிற்கூடாக மனித நடமாட்டம் அதிகமாக இருப்பதாலும் அதிக நேரத்தை இவ்விடங்களில் செலவிடுவதாலும் பாலுண்ணி கள்

## குடாநாட்டில் அறுவடைக் காலங்களில் இந்நோய் பரவும் சாத்தியம் அதிகம்


தொழிற்படும் சிறிய விலங்குகள் வாழ்வதற்கும் உகந்த சூழலாக அமைவதால், நோயானது இயற்கையில் தொடர்ச்சியாகப் பேணப்பட்டு வருகிறது. அத்துடன் மனித நடமாட்டம் இவ்விடங்களில் அதிகமாக இருப்பது, நோயானது எளிதில மனிதர்களுக்கு ஏற்பட ஏதுவாகவுள்ளது.

'உணணித் தீவுகளைத்' தவிர, பாலுண்ணிகள் விருந்து வழங்கிகளில் உணவைப் பெறும் காலங்களில், அவற்றின் உடல்களிலும் காணப்படலாம். பக்றீரியத் தொற்றுடைய பாலுண்ணி, மனிதனைக் கடிப்பதனாலேயே உண்ணிக் காய்ச்சல் ஏற்படுகிறது.

மனிதர்களைக் கடிப்பதற்கான சந்தர்ப்பம் அதிகமாகும். இதனால் இக்காலப்பகுதியில் அதிகளவில் நோய் ஏற்படுகிறது. ஆனால் ஆய்வுகளின் மூலம் இது இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை. இவ்வாறு ஒரு மனிதன் கிருமித் தொற்றிற்கு உள்ளானால், அவனில் நோயின் குணங்குறிகள் எவவாறு இருக்கும் என்பதை அடுத்து நோக்குவோம் (வளரும்).

**யாழினி கனகரத்தினம்**
**நான்காம் வருடம், யாழ்.மருத்துவபீடம்.**

## சொற்சிலம்பம் - போட்டி இல: 12



அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 12**
**நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்,**
**இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு (11.06.2008) முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். தபாலட்டையிலும் ஒட்டி அனுப்பிவைக்கலாம்.

7. சொற்சிலம்பம் போட்டி இல. 12 இல் வெற்றிபெற்றோர் விவரம் 15.06.2008 உதயனில் பிரசுரிக்கப்படும்.

**இடமிருந்து வலம்**

1. உண்மையையே பேசி வாழ்ந்தவனின் மனைவி இவள்
6. ஐவரின் மனைவி
8. தலை.
10. பத்தாயிரம் பத்து
12. சிவனின் ஒரு பெயர்
14. அம்புஜம்
15. மறிப்பது
16. உப்பரிகை
17. மறை
18. திருடு
19. யாகம்
20. யானையை அலங்கரிக்க அதன் முகத்தில் இதனை அணிவிப்பர்.

**மேலிருந்து கீழ்**

1. மகாத்மாவின் சுயசரிதை.
2. சோதிடம் பார்ப்பவர்கள் எதிர் காலம் சொல்ல இதனைப் பார்ப்பர்.
3. வீடு.
4. பாதுகாவல் செய்.
5. தீரம்மிக்க.
7. மேடு, - இறுதி எழுத்து 'டி' யை இழந்து நிற்கிறது.
8. சிங்கம்.
9. தலைவி, தனது கணவனைத் தானேதேர்ந்து வரித்துக்கொள்ளுதல்.
11. வண்டி.
13. மதகு.
16. ஆடல் அரசி.
17. குமரன்.
18. ஆடு, மாடு, எருமைகளில் ஆண்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 10 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) அநுசரணை. (6) திண்ணம். (7) ஆசான். (8) சமை. (9) மிதம். (11) லாயம். (12) ஆதி. (13) திரவம். (15)பால். (16) திண். (17) பசு. (20) யது. (21) வைரம். (22) தாம்போதி.

**மேலிருந்து கீழ்**

(1)அதிசக்தி. (2) நுண்மை. (3) சண. (4) ரம்மியம். (5)துன்மதி. (7)ஆம். (10) தம். (11)லாவண்யம். (12) ஆல். (14) ரதி. (15)பாசுரம். (18)சாரதி. (19) கோவை.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 10 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு** — **விஜிதா மகேஸ்வரன்**, கலட்டி, கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

**2 ஆம் பரிசு** — **ஞ.சேயோன்**, இல.33, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு** — **திருமதி ரா.ஞானறஞ்சிதம்**, இல.A/22, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.

**பரிசில் பெறுவோருக்கான பணம் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.**

## பாராட்டுப் பெறுவோர்

(1) **சி.மேகலாதன்**
இல.75/1, [illegible] வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

(2) **திருமதி ச.லிங்கமூர்த்தி**
அமெரிக்கமிஷன் பாடசாலை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

(3) **கே.அரசேஸ்வரன்**
கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

(4) **பொ.சுப்பிரமணியம்**
இல.1032, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

(5) **பிரம்மஸ்ரீ சக.சுதர்சனகுரு**
சிவன்கோயிலடி, ஆவரங்கால்,
புத்தூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, யாழ்.இந்து வேளாள குடும்பத்தைச் சேர்ந்த வயது 31 உயரம் 5' 5'' பலகலைக்கழகத்தில் படித்து B.Sc(Technical) பட்டம் பெற்ற மணமகனுக்கு குறைந்த பட்சம் A.L Qualified ஆன 25 வயதிற்குட்பட்ட பண்பான அழகிய மணமகளை பெற்றோர் தேடுகின்றனர். வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, தொண்டைமானாறைச் சேர்ந்தோர் விரும்பத்தக்கது.

அனுப்ப வேண்டிய விபரம்

1. சுய விபரத்துடன் முழுப்படம் 2. மகாதிசை இருப்புடன் ஜாதகக் குறிப்பு
3. பிறந்த நாளும் நேரமும் 4. முகவரியும் தொலைபேசி இலக்கமும்

முக்கிய குறிப்பு

ஜாதகம் பொருந்தாவிடின் நீங்கள் அனுப்பும் விவரக்கொத்து காத்திரமான முறையில் பத்திரமாக அனுப்பிவைக்கப்படும்.

தொடர்பு:-thirumahal25@ gmail.Com
உங்கள் விவரம் Email இலும் அனுப்பலாம்.

விளம்பர இல-3101
C/O உதயன், 361,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## இடம் மாற்ற அறிவித்தல்

### மேர்வின்ஸ் றபர்ஸ்ராம்ப்

கடந்த 48 வருடங்களாக 91/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த மேர்வின்ஸ் ஸ்தாபனம் 06.06.2008 தொடக்கம் 213/1 F, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் லலிதா கட்டடத்தின் முதலாம் மாடியில் (ராஜா தியேட்டர் அருகில்) இயங்கும் என்பதை எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

(74866) - நிர்வாகத்தினர்.

## ஆண்டவர் அழைப்பின் 25 ஆம் ஆண்டு நினைவு



மலர்வு 04.01.1977

உதிர்வு 01.06.1983

### செல்வன் அமலதாஸ் கலைக்குமரன்

எம்மோடு நீ வாழ்ந்த காலம்
ஈர் மூன்று ஆண்டுகளே
எம்மைப் பிரிந்து இன்று
இருபத்தைந்து ஆண்டாகின்றதே
நீங்காது உன் நினைவுகள் என்றுமே!

பிடாரி கோயிலடி,
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

உன் நீங்காத நினைவுகளுடன்:
குடும்பத்தினர். (74884)

## விற்பனைக்கு

6 சிறி தொடரிலக்கமுடைய டொயாட்டா கொரெல்லா கார் மற்றும் 1 1/2 வயது " பொமேரியன்" ஆண்நாய் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 174/16, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
( கைலாசபிள்ளையார் கோயில் அருகில் ) (74842)

## திருமண சேவை

திருமண நிகழ்ச்சியை கொழும்பில் மிகக் குறைந்த செலவில் நடத்த ஒழுங்குகள் செய்து தரப்படும். திருமண மண்டபம், மணவறை, மேளம், ஐயர், கோலம், நிறைகுடம், மணப்பெண் அலங்காரம், வாழை, மாலைகள், திருமணக்கார், கேக் மற்றும் வீடியோ, போட்டோ போன்றவையும் சிறந்த முறையில் குறைந்த செலவில் செய்து தரப்படும் தொடர்பு:- B.UMESH. 011 2362068, 077 9995701

## திருமண சேவை

Technician 'Engineer' எனச் சொல்லிக் கலியாணம் செய்ததைக் கேள்விப்பட்டிருப்பீர்கள்! அணாப்பல் அற்ப சொற்பமுமிலா அசல் ஒழுங்குமுறையே சுயதெரிவு முறை! சுய தெரிவு முறை பற்றி விவரமறியச் சுயதெரிவு முறை முன்னோடி, தனிமனித நிறுவனர் மூத்த புகழ் பூத்த சர்வதேசங்களுக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதனுடம் திங்கள், புதன், வெள்ளி மாலை தொடர்பு கொள்க!

கொழும்பு நேரடித் தொலை பேசி:
2360488, 2360694, 4873929. (சி/553000)

## மணமகன் தேவை

லண்டன் P.R. உடைய 1980 பிறந்த ஆயிலிய நட்சத்திர அழகான Doctor மண மகளுக்கு படித்த உயர் கல்வி முடித்த மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றார்கள்.

தொடர்பு: P.S.சர்மா
051- 4921276 (சி/553032)

## மணமக்கள் தேவை

ஆசிரியர் மணமகன் 73 ஆம் ஆண்டு உத்திரட்டாதி, ஆசிரியை மணமகள் 78 ஆம் ஆண்டு உத்திரட்டாதி நல்ல உத்தியோகம் உடைய மணமக்களைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றார்கள்.

தொடர்பு: P.S.சர்மா, 051- 222 3904 (சி/553033)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன்1

சர்வதேச இந்துமதக் குருமார் ஒன்றியத்தின் மாதாந்தக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியில் அமைந்துள்ள ஒன்றியத்தின் தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில்'கலாகர்ஷணம்' என்ற தலைப்பில் சிவஸ்ரீ மதுசூதனக் குருக்கள்கருத்துரைநிகழ்த்துவார். (202)

## மணமக்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1979 ஜனவரி, ரோகினி முதலாம் பாதம், இடப லக்கினத்தில் சந்திரன், 8 இல் செவ், சூரி, புத, பாவம் 69 1/4, உயரம் 5' 1'' B.A. பட்டதாரி, கம்பியூட்டர் டிப்ளோமா கற்று கொழும்பில் பிரபல பாடசாலையில் தொழில்புரிபவருக்குத் தகுதியான வெளிநாட்டு (P.R), மணமகன் தேவை. 1975, அச்சுவினி, 2 இல் செவ்வாய் பாவம் 27, உயரம் 5' 9'' O/L வரை கல்வி கற்று கனடாவில் தொழில் புரியும் மணமகனுக்குக் கனடாவில் P.R உள்ள மணமகள் தேவை.

தொடர்பு : ஆ.இரட்ணராஜா,
235/13, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (74392)

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் துரையப்பா வைத்திலிங்கம்

(ஓய்வுபெற்ற மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு
ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும்
அடைகின்றோம்.
எமது வாழ்வகத்தின் வளர்ச்சியில்
ஆத்மார்த்தமான அக்கறையும் ஈடுபாடும்
கொண்ட இப் பெருமகனார் நிச்சயமாக எமது
வாழ்வக சமூகத்தால் என்றும் நினைவு கூரப்படுவார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள்
மற்றும் உறவுகளுடன் நாமும் இணைந்து கொள்கின்றோம்.

சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம். வாழ்வக சமூகம். (சி/553061)

## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### பாக்கியநாதர் போசேப்

(செல்வராசா)

தோற்றம்16.08.1924

மறைவு 01.06.1993

இல்லறப் பொற் கோபுரத்தின் மணிவிளக்கே!
இதயமலர்த் தேன்சொரிந்த அன்பின் ஊற்றே!
சொல்லினுக்குள் அடங்காத குணத்தின் குன்றே!
சொல்லாமல் மறைந்து பதினைந்து ஆண்டுகள் போனதெங்கே!
நல்ல பிதா நீர் சுமந்த செல்வங்கள் நாம்
நட்டாற்றில் கதிகலங்கிப் புலம்புகின்றோம்
எல்லையிலாக் கருணை வடிவான தேவன்
எழில் மோட்ச மனையினிலே என்றும் வாழ்க!

105, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர். (74652)

## STUDY IN EASTERN EUROPE

## MEDICINE & ENGINEERING




Belarus இல் உள்ள மாநில பல்கலைக்கழகங்களில் அனுமதி உத்தரவாதம்

- இலங்கை மருத்துவசபை, உலகசுகாதார ஸ்தாபனம், ஜி.எம்.சி.பிரித்தானியா, அமெரிக்கா மற்றும் 150 நாடுகளில் அங்கீகாரம் பெற்றது.
- உலக சுகாதார ஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் இருந்தும் இடமாற்றம் பெற ஆவணம் செய்யப்படும்.
- 200 மாணவர்களுக்கு மேற்பட்டவர்களின் பட்டியலைப் பார்வையிடலாம். அவர்கள் கூறும் கருத்துக்களைப் பரிசீலிக்கலாம்.
- மருத்துவத்துறையில் PhD/ சிறப்பு கற்கை.
- ஜூன் 15ஆம் திகதி முதல் குழு புறப்படும்.

விசா - 100% உத்தரவாதம்

பதிவுகளுக்கும் தகவல்களுக்கும் 0773017883

PATHE ACADEMY

PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION

Head Office
37, School Lane (Entrance from Duplication Rd.) Colombo 03.
Tel:5377752, 2502012, 2591271

Overseas Student Placement Department
111-1/2, Maya Avenue, Colombo 06.
Tel: 0112586418

www.patheacademy.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மண்ணகம்: 14.12.1946

விண்ணகம்: 02.05.2008

### திருமதி தம்பித்துரை மகேஸ்வரி

அம்மா என்று அழைக்க இனி யாரிந்தப் பூமியிலே
ஆற்றாமல் மெய்யெல்லாம் அலறுகிறோம்
உன் ஒருமாத இழப்பு ஒரு யுகம் போல் இருக்கிறது அம்மா!
திடீரென எம்மைவிட்டு ஆண்டவனிடம் போனாயோ
பெற்ற பிள்ளைகளை முத்தென வளர்த்தாய்
கற்றிட வைத்து எம்மைக் கண்ணெனக் காத்தாய் அம்மா!
வெள்ளி அதிகாலைதனில் இடியென விழுந்தது உன் பிரிவு
நீங்கள் எம்முடன் பல்லாண்டு இருப்பீர்கள் என நினைத்திருந்தோம்
இடை நடுவில் எங்களை விட்டு எங்கு சென்றீர்கள் அம்மா!
இப் புவியில் இனி எங்கு காண்போம் உன் வதனமதை
இப் பூமியதில் நாங்கள் வாழும்வரை உங்கள் நினைவுகள்
எங்களை விட்டு அகலாது அம்மா.........
உங்கள் ஆத்மா சாந்தியடைய உயிர் உருகி அஞ்சலிக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

கடந்த 02.05.2008 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி தம்பித்துரை மகேஸ்வரி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (01.06.2008) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் மு.ப. 11 மணியளவில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனோ வீஸ்ரோஸ்,
இராசவீதி, நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

- குடும்பத்தினர்.

(74868)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நந்தி என்ற மனிதநேயனை இழந்துவிட்டோம்; ஆனால் ஈழத்தமிழ் இலக்கியத்தில் அவர் வாழ்கிறார்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியரும் மூத்த எழுத்தாளரும், சமூக மருத்துவத்துறை நிபுணருமான வைத்திய கலாநிதி எஸ்.சிவஞானசுந்தரம் என்ற நந்தி (30.03.1928 - 04.06.2005) அவர்களின் மறைவின் மூன்றாவது ஆண்டு நிறைவு இவ்வாண்டில் வருகின்றது. அமரர் நந்தியின் 80ஆவது பிறந்த தினமும் இவ்வாண்டே வந்தமையும் பொருத்தமாகின்றது.

அமரர் நந்தியின் இளமைக் காலத்தின் பெரும்பகுதி யாழ்ப்பாணக் கிராமத்திலேயே கழிந்தது. அதனால் அவரது வாழ்வும் பணியும் ஈழத்துக் கிராமிய வாழ்க்கை முறையினையும் கிராமச் சமூகத்தின் கட்டமைப்பினையும் ஆழமாக உள்வாங்கி அதனைத் தன் அறிவியல் பார்வையால் தரிசித்து வெளிப்படுத்தும் போக்கில் அமைந்தது. அவர் படைத்துச் சென்றுள்ள இலக்கியங்களும் அவ்வாறே. நந்தி அவர்கள் மருத்துவத்துறையில் தேர்ந்தெடுத்த பிரிவான சமூக, மருத்துவத் துறையும் இவருடைய பண்புக்கும், உணர்வுக்கும், கருத்துகளுக்கும் பொருத்தமான துறையாகவே அமைந்து விட்டது.

தொழில்ரீதியாக, சிங்களக் கிராமங்களிலும், மலையக மண்ணிலும் பின்னாளில் போர்க்காலச் சூழலில் விடாப்பிடியாக யாழ்ப்பாண மண்ணிலும் வாழ்ந்தமையால் இவர் தான் வாழ்ந்த சூழலில் இருந்த மக்களின் எண்ணங்களையும், ஏக்கங்களையும், ஆசாபாசங்களையும் நன்றாக நாடிபிடித்துப் பார்த்து ஆய்ந்துணர்ந்து அவற்றை படைப்பிலக்கியங்களில் பதித்து வைக்கமுடிந்தது. படைப்பிலக்கியத் துறையில் இவர் கண்ட வளர்ச்சிகள், இவர் தொட்ட உச்சங்கள் என்பவற்றின் அடிப்படை இவரது இயல்பான பார்வைக் கோணமேயென்று கருதுகின்றேன்.

நந்தியின் எழுத்துக்களில் எவ்வித சோடனைகளோ, சுற்றிவளைப்புக்களோ இருப்பதில்லை. அர்த்தமுள்ள சொற்களை தேர்ந்தெடுத்து, சிக்கனமாகக் கையாளும் போக்கு இவரது எழுத்துக்கள் அனைத்திலும் காணப்படுகின்றது. எந்தவொரு விடயத்தையும் மற்றவர்கள் பார்க்காத புதியதொரு கோணத்தில் தரிசித்து அதனை சுவைமிக்கதொரு படைப்பிலக்கியமாக்கும் சக்தி நந்திக்கு கைவந்த கலையாக இருந்துள்ளது.

1947இல் தனது 19ஆவது வயதில் பட்டப்படிப்பு முன்நிலைக் கல்வி பயின்றுகொண்டிருந்த காலத்திலேயே நந்தி அவர்கள் பத்திரிகைகளினூடாகத் தன்னை இலக்கியவாதியாக வெளிக்காட்ட ஆரம்பித்திருந்தார். அவரது முதலாவது சிறுகதை "சஞ்சலமும் சந்தோஷமும்". இது 1947இல் வீரகேசரியில் வெளிவந்தது. இதுவரை எண்பதுக்கும் அதிகமான சிறுகதைகளை படைத்துள்ள நந்தி அவர்களின் சிறுகதைகள் ஊர் நம்புமா, கண்களுக்கு அப்பால், நந்தியின் கதைகள், தரிசனம் ஆகிய நான்கு தொகுதிகளாக வெளிவந்திருக்கின்றன.

*ஊர்நம்புமா?* என்ற சிறுகதைத் தொகுதியின் சிறப்பம்சம் என்னவென்றால், யாழ்ப்பாணம்: நண்பர்கள் வெளியீடாக,ஜூலை 1966 இல் வெளியிடப்பட்டிருந்த இந்நூல் "டொக்டர்நந்தி" அவர்களுக்கு அவரது நண்பர்கள் வழங்கிய திருமணப் பரிசாக அமைந்தமையாகும். இந்நூலில்



## புதனன்று அவரது மூன்றாவது நினைவுதினம்

நந்தி அதுவரை எழுதியிருந்த 25 சிறுகதைகளில் தேர்ந்த 12 சிறுகதைகள் அடங்கியிருந்தன. திருமணப்பரிசாக ஒரு நூலை அச்சிட்டு வழங்கும் ஒரு வழக்கின் முன்னோடியாக இந்நூல் அமைந்திருந்தது. மலைக்கொழுந்து, தங்கச்சிஅம்மா, நம்பிக்கைகள் என்பன நூலுருவில் வெளிவந்த அவரது நாவல்கள் ஆகும்.

### தமிழ் மருத்துவ இலக்கியத்திலும் நந்தியின் நூல்கள்

நந்தி என்ற பாத்திரப் படைப்பினை உருவாக்கி அந்தப் பாத்திரத்தை தனது தங்கையாக உருவகப்படுத்தி பல குழந்தை மருத்துவ நூல்களை அவர் வெளியிட்டுள்ளார். இவை இலக்கிய உலகில் மாத்திரமல்ல எம்மவரின் தமிழ் மருத்துவ இலக்கிய உலகிலும் வரலாறானவை. பின்நாளில் பல மருத்துவ நூல்கள் எளிய முறையில் எம்மிடையே எழுதப்படுவதற்கு நந்தி அவர்கள் வழிகாட்டியாக இருந்துள்ளார்.

பேராசிரியர் நந்தி அவர்களின் இலக்கியப் பிரவேச மணிவிழாவை நினைவு கூரும் வகையில் 1988ஆம் ஆண்டு ஈழத்துச் சோமு என்று இலக்கிய உலகில் அறியப்பட்டவருமான அமரர் என்.சோமகாந்தன் இலக்கிய நண்பர்களின் உதவியுடன் மணிவிழாவொன்றை யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்திருந்தார். அந்த நிகழ்வினையொட்டி *நந்தி நோக்குகள் இருபத்தைந்து* என்ற நூலை என்.சோமகாந்தன் அவர்கள் பதிப்பித்திருந்தார். கொழும்பிலிருந்து எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம் வெளியிட்ட இந்நூல் யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டிருந்தது. இந்த நூலில் நந்தியைப் பற்றிய மனப்பதிவுகளையும் கலை இலக்கியப் பங்களிப்பு பற்றிய கணிப்பீடுகளையும் ஈழத்து எழுத்தாளர்கள் பகிர்ந்துகொண்டுள்ளனர். இந்நூலில் இடம்பெற்ற பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் கட்டுரையில் அவர் "ஈழத்தின் நவீன இலக்கிய வரலாற்றில் நந்தி என்னும் எழுத்தாளனுக்கு ஒரு மதிப்பார்ந்த இடம் உண்டு. நந்தியின் ஆக்கங்கள் இல்லாத ஈழத்து தமிழ் நாவலும், ஈழத்துத் தமிழ்ச் சிறுகதையும் நிச்சயமாக வளக் குறைபாடு உடையனவாக இருக்கும்" என்று குறிப்பிட் டுள்ளார்.

2004ஆம் ஆண்டு எனது நூல் தேட்டம் இரண்டா வது தொகுதியின் அறிமுக விழாவை யாழ்ப்பாணப் பொது நூல கத்தில் நிகழ்த்த நூலகர் தனபாலசிங்கம் அவர் கள் ஒழுங்கு செய்திருந்தார். சிறப்புரையாற்றவென நந்தியும், சொக்கனும் அழைக்கப்பட்டிருந்தார்கள். இன்று இருவரையுமே நாம் இழந்து நிற்கின்றோம்.

நந்தி அவர்கள் தனது சிறப்புரையில் நூல் தேட்டம் பற்றிய தனது ஆழமான கருத்துகளை சுவையாகக் குறிப்பிட்டார். அவர் தனது உரையின் போது ஓரிடத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்:-

"பட்டுப்பீதாம்பரம் போல அழகான இந்த நூலைக் கையிலெடுத்ததும், நூலைப்போலவே என் நெஞ்சமும் கனக்கின்றது. இவ்வளவு நேர்த்தியாக இதை செல்வராஜா தொகுத்திருக்கின்றார். வெளிநாட்டில் இருந்து கொண்டு எங்கள் மண்ணின் படைப்புகளைத் தேடி எடுத்துத் தொகுப்பது எவ்வளவு பெரிய காரியம். இந்த நூலை இவர் என்னிடம் கொண்டு வந்து தந்ததும் ஆவல் மிகுதியால் பின்பக்கம் புரட்டி, அதிலுள்ள ஆசிரியர் பட்டியலில் எனது பெயரைத் தேடினேன். இந்த மாதிரியான நூல்களைக் கையிலெடுத்ததும் எந்த ஓர் எழுத்தாளனும் அதைத்தான் செய்வான். நான் பார்த்தபோது என்னுடைய ஒரு புத்தகத்தையும் அதில் காணவில்லை. எனக்கு சப்பென்று ஆகிவிட்டது. எனது முகபாவத்தையும், பார்வை மேய்ந்த பக்கங்களையும் குறிப்பால் உணர்ந்த செல்வராஜா தான் கையோடு கொண்டு வந்திருந்த தனது முதலாவது தொகுப்பை பிரித்துக் காட்டினார். அதில் எனது ஐந்து புத்தகங்கள் பதிவாகி இருந்தன. எனக்குக் கொஞ்சம் திருப்தி. இதில் எனது புத்தகங்கள் இடம்பெறாதது செல்வராஜாவின் பிழையில்லை. எழுத்தாளர்களான நாங்கள், எங்கள் படைப்புக்களையே சேர்த்துப் பாதுகாத்து வைக்காமல் சோம்பேறித்தனமாக இவ்வளவு காலமும் இருந்துவிட்டோம். நாங்கள் தான் அவருக்கு உதவிசெய்ய முன்வர வேண்டும். நான் இன்றைக்கு வீட்டுக்குப் போனதும் இவருக்கு என்னுடைய புத்தகங்களைத் தேடி எடுத்துக் கொடுக்கப் போகிறேன். அப்போது தான் அடுத்த தொகுதியிலாவது அது பதிவுக்கு வரும்"- என்றார்.

*லண்டனிலிருந்து நூலகவியலாளர்*
**என். செல்வராஜா**

சுவையாக இப்படி நந்தி அவர்கள் மேடையில் கூறியதுடன் நின்று விட வில்லை. வீடு திரும்பியதும் இரவிரவாகத் தனது புத்தகங்களைத் தேடி எடுத்துவிட்டு என்னைத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு தன் வீட்டுக்கு அழைத்திருந்தார். மறு நாள் காலையில் அங்கு சென்றவேளையில் தன் கைக்கெட்டிய எல்லா நூல்களையும் மேசையில் இரவிரவாகத் தேடி எடுத்து வைத்திருந்ததைக் காண முடிந்தது.

எனது தொகுப்பு முயற்சியின் முக்கியத்துவத்தை நன்றாகப் புரிந்துகொண்டு, எனது கஷ்ரங்களை உணர்ந்து அவர் உரையாடிய அன்றைய காலைப் பொழுது எனது வாழ்வில் மிக முக்கியமானது. இன்று நூல் தேட்டத்தின் மூன்றாவது தொகுதி அவரது எஞ்சிய 10 நூல்களுடன் தயாராகியுள்ளது. அதைப் பார்ப்பதற்கு, பார்த்துத் திருப்திப்படுவதற்கு அவர் தான் இன்று எம்மிடையே இல்லை.

பேராசிரியர் செ.சிவஞானசுந்தரமாக அவர் அறியப்பட்டதை விட நந்தி என்ற மூன்றெழுத்து பெயரிலேயே அவர் இலக்கிய நெஞ்சங்களில் அழியா இடம்பெற்றுவிட்டார். இன்று நந்தி என்ற மனிதநேயனை பெயரளவில் நாம் இழந்து விட்டாலும், ஈழத்துத் தமிழ் இலக்கியம் வாழும்வரை நந்தியின் படைப்புக்களின் வழியாக அவர் என்றென்றும் எம்மிடையே பேசப்பட்டே வருவார். ★

# நுளம்புகள் முட்டையிட்டு பெருகும் இடங்களை முன்கூட்டியே இனங்கண்டு துப்புரவு செய்தால் ஆரம்பப் படிநிலையிலேயே அவை அழிக்கப்படும்

**டாக்டர் எஸ்.சிவன்சுதன் மற்றும் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட குழு IV, 26ஆம் அணி மாணவர்கள் இணைந்து வெளியிடும். 'நுளம்புடன் ஒரு குருஷேத்திரம்' இறுவட்டு வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் உதயனின் ஊடக அனுசரணையுடன் நடைபெறுகின்றது.**

பல்வேறு நோய்களை உண்டாக்கும் வெவ்வேறு இயல்புகளுடைய நுளம்பினங்கள் காணப்படினும் அவற்றின் வாழ்க்கைச் சக்கரமானது பொதுவான சில படிநிலைகளினூடாக இடம்பெறுகின்றது.

முதலில் பெண் நிறையுடலி நுளம்பானது 2-3 நாள்களின் விருத்தியின் பின்னர் கருக்கட்டும் தகவை பெறுகின்றது. பெண் நிறையுடலி நுளம்புகள் தமது இனப்பெருக்க காலத்தின்போது கருக்கட்டிய முட்டைகளின் விருத்திக்கென விலங்குகளின் அல்லது மனிதனின் குருதியைஉணவாக உட்கொள்கின்றது.



இவ்வாறு விருத்தியடைந்த கருக்கட்டப்பட்ட 80-120 வரையிலான முட்டைகள் நீரின் மேற்பரப்பில் இட்டுச் செல்லப்படும். இவற்றுள் கியுலெக்ஸ் (Culex) இன நுளம்புகள் கூட்டமாகவும் அனோபிலிஸ் (Anopheles), ஈடிஸ் (Aedes) இனநுளம்புகள் தனித்தனியாகவும் முட்டைகளை இடுகின்றன.

அண்ணளவாக 2-3 நாள்கள் விருத்தியின் பின்னர் இம்முட்டைகளில் இருந்து குடம்பிகள் உருவாகின்றன. நீரின் மேற்பரப்பில் காணப்படும் குடம்பிகள் உரிய வெப்பநிலையில் அழுகும் சேதனப் பதார்த்தங்களையும் நீர்வாழ் நுண்ணுயிர்களையும் உணவாக உட்கொண்டு வளர்கின்றது.

5-7 நாள்களின் பின்னர் இவை கூட்டுப் புழுவாக மாறுகின்றது. இக்கூட்டுப்புழுக்கள் உணவு அருந்தாது 1-2 நாள்களின் பின் நிறையுடலி நுளம்பாக நீரை விட்டு வெளியேறுகின்றது.

இவ்நிறையுடலி நுளம்புகளின் வாழ்க்கைக் காலமானது மழைவீழ்ச்சி, வளியின் ஈரப்பதன், வெப்பநிலை போன்ற சூழலிற் காரணிகளுக்கு ஏற்ப வேறுபடும் முக்கியமாக 28-32°C வெப்பநிலையுள்ள பிரதேசங்களிலேயே இவை செறிவாக வாழும் தகவுடையது. சாதாரணமாக ஆண் நுளம்புகள் 2-3 கிழமைகளும் பெண் நுளம்புகள் 5-7கிழமைகளும் உயிர்வாழும் தகவுடையது.

ஆண், பெண் நுளம்புகள் தாவரச்சாற்றையே தமது உணவுக்கென பயன்படுத்துகின்றது. இவை கடல் மட்டத்திலிருந்து 1500அடி உயரம் உள்ளபிரதேசங்கள் வரைக்கும் பறந்து செல்லக்கூடியது எனினும் 28-32°C வரையிலான வெப்பநிலை இவற்றுக்கு கிடைக்காதபட்சத்தில் இறந்து போகக்கூடியன.

ஈடிஸ் இன நுளம்புகள் இருண்ட பிரதேசங்களை பொதுவாக விரும்புவதுடன் 3-4km வரையிலான குறுந்தூரங்களுக்கே பறந்து செல்லக் கூடியன. ஏனைய நுளம்பினங்களின் பறக்கும் தூரம் காற்று வீசும் திறன், ஈரப்பதன் போன்ற சூழலியற் காரணிகளுக்கு ஏற்ப வேறுபடும்.

இவ்வாறு முதிர்ச்சியடைந்த ஆண், பெண் நிறையுடலிகள் [illegible] முட்டைகளை உருவாக்குவதன் மூலம் தமது இனத்தின் நிலைப்பை உறுதிப்படுத்துகின்றன.

நுளம்புகள் முட்டையிட்டுப் பெருகும் இடங்களில் தடை ஏற்படுத்துவதன் மூலம் அவற்றின் வாழ்க்கைச் சக்கரத்தின் ஆரம்பப் படி நிலையிலேயே அவற்றை அழிக்க முடியும்.

மலேரியா நோயைப்பரப்பும் அனோபிலிஸ் என்னும் இனத்தைச் சேர்ந்த நுளம்புகள் சுத்தமான சூரிய வெளிச்சமுள்ள நீரில் முட்டையிடும். எனவே நீர் தேங்கி நிற்கும் சிறிய பள்ளங்கள் போன்றவற்றை மண் கொண்டு நிரப்புதல், நீர்த்தாங்கிகளில் நீண்ட நாள்களுக்கு

## நுளம்பு ஒழிப்புத் திட்டம் ஒரே சமயத்தில் எல்லா இடங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டும்

நீர்தேங்க விடாது தடுத்தல், கைவிடப்பட்ட கிணறுகளை அடிக்கடி இறைத்துத் துப்பரவு செய்தல் போன்ற நடவடிக்கைகள் உச்சப் பயன் தரவல்லது. மேலும் பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் காணப்படும் நீர்த்தடாகங்கள் போன்றவற்றில் காணப்படும் நீரையும் சுத்தமாக பேணுதல் வேண்டும்.

டெங்கு நோயைப்பரப்பும் ஈடிஸ் வகை நுளம்பானது வீட்டுச் சூழலில் காணப்படும் சிறிய கொள்கலன்களிலுள்ள நீரில் முட்டையிடும். உதாரணமாக சிறிய பாத்திரங்கள், சிரட்டைகள், இளநீர் கோம்பைகள், பாவித்த மீன் ரின்கள், வெற்றுத் தகர டப்பாக்கள், உடைந்த சட்டி பானைத் துண்டுகள், ரின்கள் உடைந்த போத்தல்கள் போன்றவற்றில் மழைக்காலங்களில் நீர் தேங்குவதானால் அவை இந் நுளம்பின் முட்டைகள் பெருக வாய்ப்பாக அமையும். எனவே அவற்றை நாம் மண்ணினுள் புதைத்துவிடல் அல்லது எரித்துவிடல் போன்ற நடவடிக்கைகள் மூலம் அகற்றிவிட வேண்டும். மேலும் வீட்டுக் கூரைகளில் உள்ள பீலிகளில் தண்ணீர் தேங்காதவாறு அதற்குள்ளிருக்கும் குப்பைகளை அடிக்கடி அகற்றி விடுதல்வேண்டும். மேலும் வீட்டுக் கூரைகளிலும் சுற்றுப்புறங்களிலும் இருக்கும் பழைய [illegible] நிறைத்துவிடல், தண்ணீர் [illegible] குட்டைகளை ஏற்படுத்திவிடல் போன்றவற்றை மேற்கொள்ளவேண்டும். மரங்களில் காணப்படும் நீர் தேங்கக்கூடிய பொந்துகள் போன்றவற்றை மண்ணினால் நிரப்பிவிடல் வேண்டும்.

யானைக்கால், யப்பானிய மூளைக்காய்ச்சல் போன்றவற்றை ஏற்படுத்தும் கியூலெக்ஸ் இன நுளம்பானது அசுத்தமடைந்த நீர் தேங்கி நிற்கும் பெரிய குட்டைகளில் பெருக்கமடையும்.

தும்புக்கைத்தொழில், ஆடைக் கைத்தொழில் போன்ற கைத்தொழில் இடங்களில் உள்ள நீர்த்தாங்கிகளில் இவை அதிகம் பெருக்கமடைகின்றன. எனவே இவற்றை உரிய முறையில் பராமரிப்பதுடன் திறந்த பாதுகாப்பற்ற வடிகால்களையும் நுளம்பு பெருகாதவாறு பராமரிக்கவேண்டும்.

இந்நடைமுறைகளை நாம் பின்பற்றாத விடத்து முட்டைகளிலிருந்து குடம்பிகள் உருவாகும். இக்குடம்பிகளை இயற்கையான முறையில் கட்டுப்படுத்துவதே சிறந்ததும் ஏனைய நீர்வாழ் உயிரினங்களுக்கோ நீருக்கோ பாதிப்பினை ஏற்படுத்தாத செலவு குறைந்த முறையாகும். இவற்றுள் நீர்த்தடாகங்களில் குடம்பிகளை உண்ணக்கூடிய மீன்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் அழிப்பது மிகச்சிறந்ததொரு முறையாகும்.

மேலும் குடம்பிப் பருவத்தை மென் இரசாயன குடம்பி கொல்லிகளை பயன்படுத்தி அழிக்கமுடியும். உதாரணமாக குடம்பிகளின் வளர்ச்சியைத் தடுக்கும் அல்லது மாற்றம் ABATE வகை இரசாயனப் பதார்த்தங்களை குறிப்பிடலாம்.

எனவே நுளம்புக்கெதிரான போரானது அவற்றின் வாழ்க்கைச் சக்கரத்தின் ஒவ்வொரு படிநிலையிலும் வைத்து அழிப்பதன் மூலமே வெற்றிகரமாக மேற்கொள்ளமுடியும். இந்தத் திட்டமானது ஒருங்கிணைக்கப்பட்டு ஒரே சமயத்தில் ஒவ்வொரு படிநிலைக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்டால் மாத்திரமே அவற்றை இல்லாதொழிக்கமுடியும். எனவே தான் இப்போருக்குக்கான பெயரை "ஒருங்கிணைந்த காவி ஒழிப்புத் திட்டம்" (Intergrated vector control programme) என உலக சுகாதர ஸ்தாபனம் பெயர் சூட்டி மேற்கொண்டு வருகின்றது.

குழு IV, 26ஆம் அணி மாணவர்கள்
மருத்துவபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தனிச் சிங்களத்....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி...)

**சத்தியாக்கிரகிகள் கொழும்பு வருகை**

மேலும் 1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் காலிமுகத்திடலில் தமிழரசுக் கட்சியினர் நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டத்தைப் பற்றிய செய்திகளை தினகரன் நாளிதழுக்கு அறிக்கையிடுமாறு நான் பணிக்கப்பட்டேன். சத்தியாக்கிர கிகள் பஸ் வண்டிகள், ரயில் வண்டிகள் மூலம் முதல் நாளே பல நூற்றுக்கணக்கில் கொழும்புக்கு படையெடுக்கத் தொடங்கி விட்டனர்.

**கோட்டை ரயில் நிலையத்தில் வரவேற்பு**

யாழ்ப்பாணத்திலிருந்து இரவு தபால் வண்டி மூலம் கொழும்புக்கு வந்து சேர்ந்த பல நூற்றுக்கணக்கான சத்தியாக் கிரகிகளை கோட்டைப் புகையிரத நிலையத்தில் வைத்து அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த எம்.கே.ஈழ வேந்தன் தமிழரசுக்கட்சியின் கொடியொன்றை ஏந்திய வண்ணம் வர வேற்ற காட்சி நேற்றுப் போல இருக்கிறது.

**சத்தியாக்கிரக அமர்வு**

சத்தியாக்கிரகிகள் அனைவரும் பம்பலப்பிட்டியிலுள்ள இந்துக்கோயில் ஒன்றில் ஒன்றுகூடி அங்கிருந்து அதிகாலையிலேயே புறப்பட்டு, திட்டமிட்டவாறு காலிமுகத்திடலில் பழைய நாடாளு மன்றக் கூட்டத்திற்குச் சற்றுத் தொலைவில் வந்து அமர்ந்துகொண்டனர். தந்தை அமைதியே உருவெடுத்தவ ராக காந்தி அடிகளாரைப் போன்று காட்சி அளித்தார். முன்வரிசையில் கோப்பாய்க் கோமான் கு.வன்னியசிங்கம், வைத்தியக் கலாநிதி ஈ.எம்.வி.நாகநாதன், தளபதி அமிர்தலிங்கம் உட்பட அனைத்துத் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்று கூடினர்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியாஆகிய மாவட்டங்களிலிருந்து வந்த சத்தியாக் கிரகிகள் தலை வர்களுக்குப் பின்புறமாக தேனீக்களைப் போலக் சாட்டமாக வரிசை வரிசையாக அமர்ந்திருந் தனர். காலைப் பொழுது இதமான கடற்காற்றுடன் மிகமிக அமைதியாக இருந்தது.

**துச்சாதனன் பாணியில் துகிலுரிவு**

நேரம் செல்லச் செல்ல காலிமுகத் திடலில் மக்கள் கூடத் தொடங்கினர். வெய்யிலும் சூடானது. பொலிஸ்படை வந்தது. குதிரைப்படையும் கூடவே வந்தது. திடலில் உணர்ச்சிவசப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை வரவர அதிகரித் தது. சிறுசிறு கல் வீச்சுச் சம்பவங்கள் இடம்பெற்றன. நான் கல்லடி படாமல் தப்பியது பெரிய அதிர்ஷ்டம் என்பேன். நேரம் அதிகரிக்க அதிகரிக்க அசம்பா விதங்கள் மேலோங்கின. சத்தியாக்கிரகிகள் கல்லெறிகளுக்கு இலக்காகினர். அ. அமிர்தலிங்கத்தின்முன்மண்டை உடைந்து இரத்தம் பீறிட்டது. வைத்தியர் நாகநாதன் துச்சாதனன் பாணியில் துகிலுரி யப்பட்டார். அமைதியாக இருந்த தந்தையும் அவரது தோழர்களும் நண்பகலையடுத்துச் சத்தியக்கிரகத்தைக் கைவிட வேண்டிய நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாயினர்.

1956 ஜூன் 5ஆம் திகதி சிங்கள மக்களைப் பொறுத்தளவில் சரித்திரத்தில அவர்களுக்கொரு மகத்தான நாளாக அமைந்தது. ஆனால் தமிழ்மக்களுக்கோ நன்கு இனங்காட்டிய கரி நாளாக அது இன்று வரை தொடர்கதையாகச் செல்கிறது.

**அமிரைப் பார்த்துப் பிரதமர் சொன்னது**

அன்றையதினம் மாலையில் நாடாளுமன்றம் கூடியபொழுது, சபையில் மண்டையில் கட்டுப் போட்டுக் கொண்டிருந்த அமிர்தலிங்கம் அவர்களைப் பிரதமர் பண்டர நாயக்க பார்த்ததும் ''WOUND OF THE WAR' எனக் கூறியதும் எனது மனதில் ( ஜூன் 5இல்) நன்கு பதிந்த சம்பவங்களில் ஒன்றாகும். பிரதமர் பண்டா அமிர்தலிங்கம் அவர்களைப் பெருமைப் படுத்திக் கூறிய கூற்று என்பதே எனது ஊகம். ஏனெனில் யுத்தத்தில் விழுப்புண் அடைவதென்பது சாதாரணமான ஒரு விடயமல்ல என்பது நன்கு படித்த மேதையான பிரதமருக்கு தெரியாமலா இருக்கும். தனிச்சிங்களச் சட்டத்தின் மூலம் 60 வருடங்களுக்கு முன்னர் மூட் டப்பட்ட பேரினவாதத் தீ இன்னும் அணை யவில்லை. தமிழர்களுக்கு எதிரான அடக்கு முறைகளும் அநீதிகளும் கொடுமைகளும் மேன்மேலும் தொடர்ச்சியாக எண்ணெய் ஊற்றி வளர்க்கப்படுகின்றன.

---

## முதலாவது பிறந்ததின வாழ்த்து




காளிகோயிலடி, பத்தமேனி, அச்சுவேலியைச் சேர்ந்த
**தருமராசா - சாந்தினி** தம்பதியரின்
செல்வப் புதல்வி **யனுசியா**
தனது முதலாவது பிறந்தநாளை இன்று (01.06.2008) ஞாயிற்றுக்கிழமை பத்தமேனியில் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். யனுசியை அப்பா, அம்மா, அப்பப்பா, தாத்தா, அப்பம்மா, அம்மம்மா, அம்மப்பா, மாமா, பெரியப்பா (கொலன்ட்), பெரியம்மா(கொலன்ட்), அண்ணா (கொலன்ட்), சித்தப்பாமார்களான சுகந்தன் (கொழும்பு), பற்குணன் (டோகா), பார்த்தீபன் (தாய்லாந்து), சசிகுமார் (டோகா) மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பத்தமேனி ஸ்ரீவடபத்திரகாளி அம்பாள் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்:
ச. செல்வராசா
(அப்பப்பா).

காளிகோயிலடி,
பத்தமேனி, அச்சுவேலி.
(74969)

---

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வ.து
## 4லீற்றர் தகர வெற்றுக்கான் கூறுவிலை

மேற்படி யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 4 லீற்றர் தகர வெற்றுக்கான்கள் விற்பனைக்குண்டு. எதிர்வரும் 05.06.2008இற்கு முன்னதாக சங்கப் பணிமனையில் கூறுவிலைகளை நேரடியாக வந்து சமர்ப்பிக்கவும்.

பொது முகாமையாளர்,
01.06.2008 யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வ.து.
(சி/553069)

---

## பகிரங்க அறிவித்தல்
## கரவெட்டி - கரம்பான் வீரகத்திப் பிள்ளையார் கோயில் விசேட மகா சபைக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

இடம் : மேற்படி ஆலய மண்டபம்
காலம் : 14.06.2008 சனிக்கிழமை
பி.ப. 2 மணிக்கு
தலைவர் : திரு.வி.வேதமணவாளன் அவர்கள்

தயவு செய்து ஆலய வழிபடுபவர்களும் திருவிழா உபயகாரர்களும் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தற்காலிக நிர்வாகிகள்,
க.மாணிக்கவாசகர்
செயலாளர்.
(சி/553071)

---

## கண்ணீர் அஞ்சலி



நரசிம்ம ஞானவைரவர்
தேவஸ்தான செயலாளர்
பொன்னையா வெற்றிவேல்
அவர்களின் பாசமிகு தந்தை
**வேலுப்பிள்ளை பொன்னையா**
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாண்டியன்தாழ்வு,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

நரசிம்ம ஞானவைரவர்
தேவஸ்தானம்.
(74953)

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சுவிஸ்கிளை பழையமணவர் சங்கத் தலைவரும் எமது நண்பருமாகிய இ.புவனேந்திரன் அவர்களினதும் யாழ்.இந்துக் கல்லூரி முன்னாள் பிரதி அதிபருமான இ.ஓங்காரமூர்த்தி அவர்களினதும் அன்புத்தாய்

**திருமதி நித்தியலட்சுமி இலட்சுமணர்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஒட்டுமடம்,
யாழ்ப்பாணம். (74960)

ச.நிமலன், பொ.ஜனகன்
(நண்பர்கள்).

---

## மரண அறிவித்தல்

### திருமதி நித்தியலட்சுமி இலட்சுமணர்



ஒட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும், வண்ணார் பண்ணை ஐயனார் கோயிலடியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி நித்திய லட்சுமி இலட்சுமணர் அவர்கள் (29.05.2008) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இலட்சுமணர் (முன்னாள் பிரபல வர்த்தகர், வெலிமடை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - தங்கச்சியம்மா தம்பதியரின் ஏக புத்திரியும் காலஞ்சென்றவர்களான சண்டிலிப்பாயைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் தெய்வேந்திரன் (ஜேர்மனி) அவர்களின் அன்புச் சகோதரியும் ஆனந்ததேவி (சந்திரா), ஓங்காரமூர்த்தி (பிரதி அதிபர், கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி), புவனேந்திரன் (சுவிஸ்), விஜயேந்திரன் (கட்டார்), பற்குணதேவி (உருத்திரா) ஆகியோரின் அன்புத்தாயும் குலசிங்கம் (USA) , சரஸ்வதி (கொழும்பு), சத்தியபாமா (சுவிஸ்), மாலினி, அன்பானந்தன் (பதில் பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் மாமியும் கிருஷாந்தி (L.L.B. - சட்டத்தரணி, கொழும்பு), அனுசாந்தி (வர்த்தக முகாமைத்துவம், ABE Lon.), சிவலக்ஸ்மன் (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), தக்ஷாயினி (மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்ப மாணவி, சுவிஸ்), லக்ஷாயினி (சுவிஸ்), துளசிதா (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), சம்யுதா - சுரேஷ் (லண்டன்), சாம்பவி (நீர்வேலைப் பகுதி, யா/மாநகரசபை), சுவேநிதன் (யா/சென்ஜோன்ஸ் கல்லூரி), பவித்ரா (யா/இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புப் போத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.06.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

16/1, ஐயனார் கோயில் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 7133 (74965)

தகவல்:
இ.ஓங்காரமூர்த்தி (மகன்),
இ.விஜயேந்திரன் (மகன்),
த.அன்பானந்தன் (மருமகன்).

---

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம்செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
(74886) 19, முருகேசர் லேன், நல்லூர்.

---

## விற்பனைக்கு

500 XXX தொடரிலக்கமுடைய இத்தாலியன் வெஸ்பா ஸ்கூட்டர் (செல்ஸ் ஸ்ராட் மொடல்) மற்றும் ஒரு லோட் எரு என்பன விற்பனைக் குண்டு.

தொடர்பு: செல்வரட்ணம்,
96,அம்பலவாணர் வீதி,
(74887) அத்தியடி, யாழ்ப்பாணம்.

---

## கைதவறிவிட்டது

NOKIA 3120 (SILVER) கையடக்கத் தொலைபேசி வியாழன் (29.05.2008) மாலை கல்லுண்டாய் வெளி, மாட்டு ஒழுங்கைப் பகுதியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளவும்.

021 222 6206, 060 221 8534
(74972)

---

## தவறிவிட்டது

தாரணி நடேசலிங்கம் என்பவருடைய தே.அ. அட்டை (846681477 V) ஸ்ரான்லி றோட்டில் அமைந்துள்ள HNB யில் 29.05.2008 அன்று கைமாறி விட்டது. அதனை மாற்றி எடுத்தவர்கள் தயவு செய்து கீழ்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

தொடர்பு: பொ.நடேசலிங்கம்,
49/1,வில்வந்தெரு, கொழும்புத்துறை.
(74971) தொ.பே.:021 222 7448

---

## தவறிவிட்டது

அற்புதமலர் தனராஜசிங்கம் என்பவரது தேசிய அடையாள அட்டை (406882586 V) பண்டத்தரிப்புக்கும் மானிப்பாய்க்கும் இடையில் 22.05.2008 அன்று காலைப் பயணத்தின்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

தொடர்பு: அ.தனராஜசிங்கம்,
(74958) கராச் ஒழுங்கை, பண்டத்தரிப்பு.

---

## மணமகள்கள் தேவை

1975 ஆயிலியம், செவ்வாய்க்குற்றமற்ற மணமகனுக்கும், 1977 மகம் செவ்வாய்க் குற்றமற்ற ஜேர்மனியில் பணிபுரியும் மணமகனுக்கும், 1976 அரச தொழில்புரியும் RC மத மணமகனுக்கும் மணமகள்கள் தேவை. இந்து/ கிறிஸ்தவ மணமக்கள் தேவை. புகைப்படம், ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தூர்க்கா திருமண சேவை
இல.09, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(74959) [illegible]

---

## Tender Notice

The Chairman Tender Board Jaffna teaching Hospital is hereby invites tenders from suitable contractors for private security service to teaching hospital Jaffna for a period from 01.07.2008 to 31.06.2009. The tenders will be accepted till 10.00 a.m.on 14.06.2008. Tender forms may be collected at Director office on payment of non refundable deposit of Rs.3000/=. Tender forms received after this date will be rejected. The conditions and other details will be supplied with the tender forms.

**The Chairman,**
**Tender board,**
**Teaching Hospital, Jaffna**

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
03 ★ 10 ★ 1925



ஆண்டவன் மடியில்
02 ★ 05 ★ 2008

### அமரர் பொன்னையா தியாகராஜா

மாதம் ஒன்று ஆனதே ஐயா!
எம்மைப் பிரிந்து எங்குசென்றீர்கள்?
பதிகங்கள் பல பாடி அன்புருகினீரே ஐயா
மனமுருகி அழைத்தானோ முருகனும் உனை
ஐயா என நாம் கதறி அழைப்பது கேட்கலையோ,
துயரத்தை தந்தானோ ஐயா,
உன் உயிரோட்டமான பேச்சுக்கள் காதினிலே ரீங்கரிக்க
உன் நினைவுகளுடன் நாம் வாழ்கின்றோம்

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மானிப்பாய் வீதி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.

துயருடன்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
(74964)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# விஸ்வரூபம் எடுக்கும் சீனா

ஸியோனிச சக்திகளுடன் கைகோர்த்த வரலாற்றுத் தவறை இழைத்ததன் காரணமாக உலகளாவிய ரீதியில் இஸ்லாமிய அடிப்படை வாதிகளின் கடும் எதிர்ப்பைச் சம்பாதித்து நிற்கின்றது அமெரிக்க வல்லாதிக்கம்.

இந்தப் பகையுறவை எதிர்கொள்வதற்காக 'பயங்கரவாதத்துக்கு எதிரான சர்வதேசப் போர்' என்ற விநோத - விபரீத - கொள்கைக் கோட்பாட்டைக் கையிலெடுத்திருக்கும் அதிபர் புஷ்ஷின் நிர்வாகத்துக்கு, அது அணிந்திருக்கும் அந்தப் பயங்கரவாத எதிர்ப்புக் கண்ணாடி உலகின் உண்மை நிலைவரத்தை - யதார்த்தப் புறச்சூழலை - மறைத்து நிற்கின்றது.

'பயங்கரவாதத்துக்கு எதிரான சர்வதேசப் போர்' என்ற கொள்கைக் கோட்பாடே முழுக்குழப்பகரமானது என்பதால், தனது நேசசக்தி எது, எதிரி சக்தியாகக் கருதப்பட வேண்டியது எது என்பதை சரியாக - துல்லியமாக - அளவிடவோ, கணிப்பிடவோ தெரியாமல் புஷ் நிர்வாகம் குழம்பிப்போய் இருக்கின்றது என்பதே உண்மை.

இஸ்லாமிய அடிப்படை வாதம் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராக கிளர்ந்து நிற்கின்றது என்பது உண்மைதான். ஆனால் மறுபுறத்தில் சர்வதேச ரீதியில் உலகின் பெரும் வல்லரசு என்ற அமெரிக்காவின் தனிப்பெருமையை - கீர்த்தியை - தகர்த்தெறியக்கூடிய ஒரு தேசம் அநாயசமாக விஸ்வரூபம் எடுத்து வருகின்றது. இஸ்லாமிய அடிப்படை வாதத்துக்கு எதிராகப் பயனற்ற ஒரு நிழல் யுத்தத்தை உலகின் பல்வேறு முனைகளில் தானே தேடிப் போய் வலிந்து திறந்து தன்னை பலவீனப் படுத்து வதை விடுத்து, உலகளாவிய ரீதியில் தனக்குச் சமதையாக உருக் கொண்டு வரும் ஓர் எதிர் நாடு குறித்து, அமெரிக்கா அதிகம் சிந்திப்பது நல்லது. 'சர்வதேசப் பொலிஸ்காரன்' என்ற தனது அந்தஸ்தை அமெரிக்க வல்லாதிக்கம் பேண வேண்டும் என்றால் சர்வதேசமட்டத்தில் தனது மேலாதிக்கத்தை பிறநாடு எதுவும் விஞ்சாமல் பார்த்துக் கொள்வது அமெரிக்காவின் பொறுப்பாகும்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் உருவான பனிப் போர் முடிந்துவிட்டது - சோவியத் யூனியனின் சிதறலோடு.

பொருளாதார நெருக்கடிகளிலும் உள்நாட்டுச் சிக்கல்களிலும் சிக்குண்டு தவிக்கும் ரஷ்யா, அமெரிக்காவின் இராணுவ வியூகக் கட்டமைப்பில் நோக்கும் போது அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலாக - சவாலாக இருக்கப் போவதில்லை.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் இந்திய உபகண்டத்தின் போக்கும் அடியோடு மாறிவிட்டது. முன்னர் சோசலிஸ முகாமின் நேச அணியில் இருந்த இந்திய தேசம் இப்போது பொருளாதாரப் பின்புலத்தில் அமெரிக்கச் செல்வாக்குக்கு உட்பட்ட - ஏன் அடி பணிகின்ற - நாடாகிவிட்டது.

அமெரிக்காவின் திட்டமிடப் பட்ட மூலதனச் சுரண்டலுக்கு இந்தியா தனது கதவுகளை அகலத் திறந்து விட்டிருப்பதால் இந்தியா குறித்தும், தனது சர்வதேச வல்லாதிக்க உரிமையில் பங்கம் ஏற்படுத்தக் கூடிய சக்தியாக இந்தியாவைக் கருதியும் அலட்டிக்கொள்ள வேண்டிய தேவை அமெரிக்காவுக்கு இல்லை.

எனவே, சோவியத் யூனியன் சிதைவுக்குப் பின்னர் அமெரிக்காவுக்கும் அதன் சர்வதேச வல்லாதிக்கத்துக்கும் இன்று சவாலாகவும் அச்சுறுத்தலாகவும் இருப்பது சீனாவும் அதற்கு அருகில் உள்ள வடகொரியாவுமே.

தைவான் மற்றும் தென்கொரியாவில் தனக்கு உள்ள ஏகோபித்த செல்வாக்கைப் பயன்படுத்தி சீனாவையும் வடகொரியாவையும் மண்டியிட வைப்பதற்கு அமெரிக்கா எடுத்த கபடத் திட்டங்கள் இதுவரையும் பலனளிக்கவில்லை. அவை எல்லாம் தோற்றுப் போய்விட்டன.

சீனத் தேசம் என்பது உலகுக்குள் ஓர் உலகாகக் கருதப்படக் கூடியது! உலக மக்கள் தொகையில் கால் பாங்கினர் அந்தத் தேசத்தில்தான் வாழ்கின்றனர். அதாவது உலகச் சந்தையின் நாலில் ஒரு பங்கு சீன நிர்வாகத்தின் கைகளில் தான் தங்கியுள்ளது. அங்கு வாழும் மக்களில் தொண்ணூற்று ஐந்து சத வீதத்தினர் ஒரே மொழியைப் பேசும் ஒரே தேசியத்தைக் கொண்டவர்கள். அவர்களது மொழியும் கலாசாரமும் பண்பியல்புகளும் வாழ்க்கை முறைகளும் ஐரோப்பிய கலாசாரத்துக்கும் வழங்கு மொழிகளுக்கும், வழக்காறுகளுக்கும் முற்றிலும் வேறுபட்டவை.

ஆகவே, கலாசாரம், மொழி, பண்பியல்புகள் ஊடாக மேற்கத்திய ஏகாதிபத்தியங்களினால் சீனாவுக்குள் சுலபமாக ஊடுருவி விட முடியாது. எனவே, அதன் அரசுக் கட்டமைப்புக்குள் மேற்குலகு ஊடுருவி. அதனை தனக்கேற்றால் போல வளைப்பது என்பது சாத்தியப்படக் கூடியதல்ல.

அது மட்டுமின்றி உலகளாவிய ரீதியில் தனக்கெதிராகக்க கிளப்பப்படக் கூடிய எந்த அச்சுறுத்தலையும் எதிர்கொண்டு சமாளிக்கும் தனி வல்லமையுடன் கடல் வளம், எண்ணெய் வளம், அணு ஆயுத வளம், பொருளாதார வளம் ஆகியவற்றுடன் உலகின் தனிப்பெரும் வல்லரசாக அது விஸ்வரூபம் எடுத்து வருகிறது.

அடுத்த தசாப்தத்தில் அமெரிக்காவின் ஏக - நிகரான - உலக வல்லாதிக்கமாக சீனா வியாபித்து நிற்கும் என்பது அசைக்க முடியாத உண்மை.

அமெரிக்கா, அடுத்து வரும் தசாப்தத்தில் தனக்கு சவால் விடப் போகும், சீனா குறித்து அதிகம் அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை.

அமெரிக்காவால் அசைக்க முடியாத சக்தியாகத் தன்னை ஸ்திரப்படுத்தும் சீனா, அதை உறுதிப்படுத்தி நிலை நிறுத்துவதற்காக அகலக் காலும் வைக்கத் தொடங்கிவிட்டது.

இலங்கை போன்ற தேசங்கள் அதற்கு வெற்றிலை வைத்து, கதவைத் திறந்து விட்டு இடமளித்து வருகின்றன.

இந்தப் பின்புலத்தைக் கவனத்தில் எடுக்காமல் - தனதுநேச சக்தி எது, எதிரி தரப்பு எது என்பதை அடையாளம் காணத் தெரியாமல் - குழப்பியடிக்கின்றது புஷ் நிர்வாகம்.

# அரசமைப்பைத் திருத்துமுன் மாகாண சபைகளுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் அதிகாரங்கள்

## மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 1

அரசியல் யாப்பு சீர்த்திருத்தம் செய்யப்படும் வரை புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றின் மூலம் மாகாண சபைகளுக்கு உறுதியாக அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளல். இதனை மத்திய மாகாண அரசாங்கங்கள் செய்ய வேண்டும் என்று மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் வலியுறுத்தியுள்ளது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின்கீழ்வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை மாகாணங்களுக்கு பெற்றுக்கொடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் மேற்படி நிலையம் தெரிவித் துள்ளது.

கடந்த 20 வருட மாகாண சபை அனுபவங்களுடனான தேசிய பரிந்துரைகளிலேயே இவ்விடயங்கள் வலியுறுத்தப் பட் டுள்ளன.

யாப்பு ரீதியான பிரச்சினைகள், நிர்வாகம், நிதிப் பிரச்சினைகள் என 3 வகையாக இவை வகுக்கப்பட்டுள்ளன.

பரிந்துரைகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இரட்டை முறைச் செயற்பாடு - மாகாண சபை விடயங்களுக்கு மத்திய அரசினால் ஏற்படுத்தியுள்ள அமைச்சுகளை இரத்துச்செய்ய வேண்டும். சட்ட ரீதியாக முதலமைச்சர்களை அமைச்சரவையில் உறுப்பினர்களாக நியமித்தல். பிரதேச நிர்வாகம், பிரதேச செயலாளர் காரியாலயங்களை மீண்டும் மாகாண சபைகளுக்கு ஒப்படைத் தல், மாகாண சபைகளுக்குரிய விட யங்கள் பற்றி மத்திய அரசாங்கம் நேர டியாக தலையிடாமல்இருப்பதுடன்அதேபோன்று வேறுபட்ட நிறுவனங்களுக்கு அதிகாரம் வழங்கவும் கூடாது.

மேலும் மாகாணங்களுக்கு மத்திய அரசாங்கமும் திறைசேரியும் வரி அறவிடுதல் மற்றும் வருமானம் ஈட்டும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துதல் மற்றும் வேறு விதத்தில் பணம் ஈட்டிக்கொள்ளும் சந்தர்ப்பத்தை வழங்குதல்.

பிரதான 14 பரிந்துரைகளை உள்ளடக்கியுள்ள மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் இந்த அறிக்கைகள் அரசியல் கட்சித் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. (அ-02)

# சமூக சேவைகள் அமைச்சு வழங்கும் படிவங்களை விலைக்கு வாங்க வேண்டாம் என அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 1

குடாநாட்டு மக்களின் நிவாரணத்துக்காக சமூகசேவைகள் அமைச்சால் வழங்கப்படும் படிவங்களை விற்பனை செய்யவோ, விலைக்கு வாங்கவோ வேண்டாம் என சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு பொது மக்களைக் கேட்டுள்ளது.

இது தொடர்பாக அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ள தாவது:-

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் கீழ் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்களுக்கான மருத்துவ உதவிகள், கணவனை இழந்த அல்லது கணவனால் கைவிடப்பட்ட குடும்பப் பெண்களுக்கான சுய தொழில் உதவிகள், வலது குறைந்தவர்களுக்கான மருத்துவ உதவிகள், வீடமைப்பு உதவிகள் மற்றும் 3,000 ரூபா மாதாந்தக் கொடுப்பனவு உட்பட அனைத்து உதவிகள் மற்றும் கொடுப்பனவுகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் குடாநாட்டு மக்களுக்கென யாழ். அமைச்சு அலுவலகத்தில் தற்போது அமைச்சரின் கையொப்பத்துடன் வழங்கப்படுகின்றன.

இந்த விண்ணப்பப்பத்திரங்கள் அமைச்சின் மூலமும் பிரதேச செயலகங்களின் மூலமும் பொதுவாக பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன என்ற போதிலும் ஒரு சிலர் இவ் விண்ணப்பப் படிவங்களை விற்பனை செய்து வருவதாக அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டுள்ளது.

எனவே, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சுடனும் அதன் கீழுள்ள திணைக்களங்களுடனும் தொடர்புள்ள எந்தவொரு விண்ணப்ப படிவத்தையும் பொது மக்கள் பணம் கொடுத்து வாங்க வேண்டாம் எனக் கேட்டுக்கொள்ளப்படுவதுடன் அவ்வாறு விலை கொடுத்து வாங்கப்படும் விண்ணப்பங்கள் செல்லுபடியாகா என்பதையும் அறியத்தர விரும்புகிறோம். அதே நேரம் முறைகேடான வகையில் மேற்படி விண்ணப்பங்களை விற்பனை செய்வோர் மீது சட்ட ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (அ-1)

# யாழ்.நகரில் வைத்திலிங்கத்தின் அஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ்.மாவட்டத்தின்முன்னாள்மேலதிக அரச அதிபரும்எழுத்தாளருமானது.வைத்திலிங்கத்தின் நினைவஞ்சலி நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது பிறப்பிடமான யாழ். நகர் கலட்டியில் உள்ள அவரது சகோதரனின் வீட்டில் சீனியர் லேனில் நடைபெறவுள்ளது.

கொழும்பில் அமரர் வைத்திலிங்கத்தின் இறுதி நிகழ்வுகள்நடைபெறும் அதே வேளையில் இங்கும் இரங்கல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப் பட்டது. (அ-202)

# நடுவீதியில் வாகனங்களை நிறுத்தி 'ஹோர்ன்' ஒலி எழுப்பிப் போராட்டம்

## விநோத முறையில் எதிர்ப்புக் காட்டத் தயாராகிறது ஐ.தே.க.

கொழும்பு, ஜூன் 1

எரிபொருள் விலையேற்றத்தை எதிர்த்து ஐக்கிய தேசியக் கட்சி நாடளாவிய ரீதியில் புதுமையான போராட்டம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு வீதியில் ஓடுகின்ற வாகனங்களை 5 நிமிடங்களுக்கு நிறுத்தி வாகனங்களின் முன் விளக்குகளை எரியச்செய்து, தொடர்ச்சியாக 5 நிமிடங்களுக்கு ஹோர்ன்கள் மூலம் ஒலி எழுப்பி அரசுக்கு எதிர்ப்பைத் தெரிவிப்பதே அந்தப் போராட்டமாகும்.

அன்றைய தினம் நண்பகல் 12 மணிக்கு வாகனச் சாரதிகள் வாகனங்களை நிறுத்தி இந்தப் போராட்டத்தை மேற்கொள்ளவேண்டும் என்றும் ஐ.தே.கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்கவே இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

எரிபொருள்களின் விலை அதிகரிப்பால் மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு எதிராக என்னசெய்வதென்று தெரியாமல் மக்கள் அவதிப்படுகின்றனர். அரசுக்கு எதிராக எந்தவிதமான போராட்டங்களை எடுப்பதற்கும் அவர்கள் தயாராகவுள்ளனர்.

வேதனைப்பட்டுக்கொண்டு வீட்டுக்குள் இருப்பதில் அர்த்தமில்லை. நாம் வீதிக்கு இறங்கி எமது எதிர்ப்பை - வேதனையை - அரசுக்குத் தெரிவிக்க வேண்டும்.

அதற்காக நாம் பல்வேறுபட்ட எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம்.

ஜூன் மாதம் மூன்றாம் திகதி நண்பகல் 12 மணிக்கு நாடுமுழுவதிலும் ஓடுகின்ற வானங்களை நிறுத்தி, தொடர்ச்சியாக 5 நிமிடங்களுக்கு வாகன முன்விளக்குளை எரியவிட்டு, 'ஹோர்ன்' சத்தத்தை எழுப்பி புதுமையான வகையில் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க நாம் திட்டமிட்டிருக்கிறோம்.

எரிபொருள் விலையேற்றத்தால் பாதிக்கப்பட்ட அனைவரும் இந்தப் போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

வாகன சாரதிகள் அன்றைய தினம் 12 மணிக்கு வாகனங்களை நடு வீதியில் நிறுத்தி இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் - என்றார். (சி)

# தென்மராட்சிப் பகுதியில் ஆங்கில தினப்போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 1

தென்மராட்சிகல்விவலயப்பாடசாலைகளின் மாணவர்களுக்கு ஆங்கில மொழித் தினப் போட்டிகள் இன்றும் நாளையும் நடைபெறும்.

கொடிகாமம் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இன்று மீசாலை வீரசிங்க ம.வியிலும், சாவகச்சேரி பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளுக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும்-

நாளை அனைத்துக் குழுக்களுக்குமான நாடகப் போட்டிகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும்- நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (1-207)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 20 | 02.06.2008 திங்கட்கிழமை |
| திதி: | திரயோதசி காலை 06.43 |
| நட்சத்திரம் : | பரணி மு.ப. 11.29 வரை |
| சுபநேரம் : | 11.52 - 01.22 |
| ராகுகாலம் : | 07.22 - 08.52 |

'உதயன்' ஊடக அனுசரணையுடன் இடம்பெறும்

# 'நுளம்புடன் ஒரு குருஷேத்திரம்' இறுவட்டு வெளியீடு இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 1

உதயனின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக மருத்தவ பீட 26ஆம் அணி குழு IV இன் தயாரிப்பான 'நுளம்புடன் ஒரு குருஷேத்திரம்' எனும் இறுவட்டு இன்று வெளியீட்டு வைக்கப்படவுள்ளது.

வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேஸ் கலந்துகொள்வார்.

இறுவட்டை யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர் எஸ். சிவன்சுதன் வெளியிட்டு வைப்பார். (202)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# லண்டனில் தமிழர் வீட்டில் இரு சிறுவர்கள் குத்திக் கொலை!

## கணவனும், மனைவியும் பொலிஸாரால் கைது!!



லண்டன் ,ஜூன் 1-

பிரித்தானியாவின் தெற்கு லண்டன் பகுதியில் உள்ள சுறே (Surrey) யில் இலங்கைத் தமிழர் ஒருவரது வீட்டில் சிறுவர்கள் இருவர் கத்தியால் குத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த மோதப் பெண் குழந்தை படுகாயம் அடைந்த நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தை அடுத்து குறித்த சிறு வர்களின் தந்தை மற்றும் தாய் இருவரும் பொலி ஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நள்ளிரவு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்ட 4 வயது மற்றும் 5 வயதான சிறுவர்கள் 5 நிமிட இடைவெளியில் அங்கு மரணமானார்கள்.

அயலவரின் தகவல்படி குறித்த தமிழ் குடும்பத்தினர் சுமார் ஒருவருடத்துக்கு முன்னரே அந்த வீட்டில் குடியேறினர் எனத் தெரிவிக்கப்பட்டது. சட்ட மருத்துவ சேவை மற்றும் பொலிஸ் விசாரணைகளின் பொருட்டு அந்த வீடு தற்போது பொலிஸாரின் காவலுக்குட்படுத்தப்பட்டுள்ளது.

சம்பவம் நடந்த வீட்டிலிருந்து மூன்றாவது வீட்டில் நின்றிருந்த வியாபாரியான ஜோன் பாலி கூறுகையில்-

அங்கு நான்கு அல்லது ஐந்து அம்புலன்ஸ் வண்டிகள் கவனத்தைக் கவரும் சமிக்ஞை ஒலியை எழுப்பியபடி வந்து நின்றன. சுமார் ஆறு பொலிஸார் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு தங்களை அழைத்தவர் யார் என்பது தெரியவில்லை போலும்.

"அப்போது ஒரு வீட்டிலிருந்து கதவைத் திறந்து கொண்டு ஒருவர்வெளியே வந்தார். தாங்கள் தேடுகின்ற வீட்டை அடையாளம் கண்டு கொண்ட பொலிஸார் உள்ளே ஓடிச் சென்றனர்.

"இரண்டு நிமிடங்கள் சென்றிருக்கும். அவர்கள் ஒரு குழந்தையை போர்வை ஒன்றினால் சுற்றியபடி தூக்கிக் கொண்டு வெளியே ஓடிவந்தனர். விரிப்பு முழுவதும் குழந்தையின் இரத்தத்தில் தோய்ந்திருந்தது.

"மருத்துவ உதவியாளர்கள் குழந்தையை அம்புலன்ஸில் ஏற்றிக் கொண்டு பறந்தனர்.-

"ஐந்து நிமிடங்கள் கழிந்திருக்கும் மருத்துவ உதவியாளர்கள் இருவர் மேலும் ஒரு சிறுவனை வெளியே தூக்கிக் கொண்டுவந்தனர். அந்தச் சிறுவன் பேச்சுமூச்சற்றிருந்தான். அவனது போர்வையிலிருந்தும் இரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது."

"சிலர் வீட்டுக்கு வெளியே வந்து என்ன நடக்கிறது என்பதனை அறிய முயன்றனர். ஆனால் அவர்களை விலகி நிற்குமாறு பொலிஸார் எச்சரிக்கை செய்தனர். அத்துடன் அந்த வீட்டிலிருந்த ஆணையும் பெண்ணையும் கைது செய்து கொண்டு சென்றனர்"- என் றார் அவர். (அ-02)

## முல்லை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவதில் சிக்கல்கள் தோன்றியிருப்பதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்திருக்கிறார்.

ஷெல் தாக்குதல்கள் காரணமாக மன்னாரிலிருந்து 250 குடும்பங்களும் முல்லைத் தீவிலிருந்து 25 குடும்பங்களும் இதுவரை கிளிநொச்சிக்கு வந்துசேர்ந்துள்ளன -

இவ்வாறு இடம்பெயர்ந்து வந்துள்ளவர்கள் கரியாலை, நாகபடுவான், ஜெயபுரம் மற்றும் முழங்காவில் போன்ற பிரதேசங்களில் பொதுமண்டபங்களிலும் மரங்களின் கீழும் தங்கியுள்ளனர்-

இடம்பெயர்ந்து வந்துள்ள மக்களுக்கான தங்குமிட வசதிகள் மற்றும் நிவாரண உதவிகளை வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம் -

ஓமந்தைச் சோதனைச் சாவடியில் ஏற்படுத்தப்பட்டுள்ள படையினரின் கடும் பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான நிவாரண விநியோகச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன - என்றும் கிளிநொச்சி அரச அதிபர் மேலும்கூறினார். (அ-02)

## கூடுதல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்களைச் சந்திப்பதை அரசாங்கம் தடுத்து வருகிறது. நிவாரணப் பணியாளர்கள், ராஜதந்திரிகள், ஊடகவியலாளர்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்லக்கூடாது என்று பாதுகாப்பு அமைச்சு தடைசெய்து வருகிறது. பாதுகாப்பு உத்தரவாதமில்லை என்ற சாட்டைச் சொல்லி வருகிறது - என்றும் அரசியல்துறைப் பொறுப்பாளர் கண்டித்தார்.

இலங்கைக்கு நிதி உதவி வழங்கும் பிரதான நாடுகளான அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே ஆகிய நாடுகள் தமது சமாதானப் பணிகளை முன்னெடுக்க வழி செய்ய வேண்டும். அந்த நாடுகளின் பிரதிநிதிகள், ராஜதந்திரிகள் விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்திக்க வகை செய்யவேண்டும் என்றும் நடேசன் சுட்டிக்காட்டினார்.

சிங்கப்பூரில் நடைபெற்ற வெளிவிவகார அமைச்சுச் செயலாளர்கள் மாநாட்டில் பங்குபற்றிய, இலங்கை வெளிவிவகா அமைச்சின் செயலாளர் பாலித கோஹன்ன -

எமது நாட்டின் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமான தீர்வையே நாம் முழுக்க முழுக்க விரும்புகிறோம். ஆனால் அவர்கள் (விடுதலைப் புலிகள்) ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கான எவ்வித அக்கறையையும், சமிஞ்ஞையும் காட்டவில்லை - என்று கூறியிருந் தார்.

அது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் முன்னர் குறிப்பிட்ட கருத்துக்களை வெளியிட்டார். (அ)

## மாகாண சபை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது. மாகாண சபை முறை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. அது அர்த்தபூர்வமான அதிகாரப் பரவல் முறைக்கு மாற்றப்பட வேண்டும். மத்திய அரசின் அதிகாரங்கள் உரிய அளவில் மாகாண சபைகளுக்குப் பரவல் செய்யப்பட வேண்டும் - என்று கூறினார்.

கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.சந்திரகாந்தன் (பிள்ளையான்) தொடர்ந்து 4 மாதங்களுக்கு மாகாண சபைகள் மாநாட்டின் தலைவராகப் பதவி வகிப்பார். (அ)

## அரிசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடாநாட்டில் அரிசி, சீனி ஆகிய வற்றுக்கு சில தினங்களாக தட்டுப்பாடு நிலவி வருகிறது தெரிந்ததே. (அ-1)

## கர்ப்பக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டது. அப்போது குறித்த பெண்ணுடைய வயிற்றில் குழந்தை கருப்பையில் இருப்பதற்குப் பதிலாக அதற்கு வெளியே உள்ள சூலகத்தில் இருந்தது தெரியவந்தது.

கருப்பைக்கு வெளியே கரு வளர்ந்து பெரிதானால் அது தாய்க்கும் சேய்க்கும் ஆபத்தாக அமைந்து விடும் என்று மருத்துவத் துறையில் கருதப்படுவது உண்டு.

ஆனால், குறித்த பெண்ணுக்கோ முழுக் கர்ப்ப காலத்திலும் கருப்பைக்கு வெளியே கரு வளர்ந்து குழந்தையாக உரு வெடுத்துள்ளது. அந்தக் குழந்தை உயிருடன் பிறந்து மருத் தவர்களை ஆச்சரியப்படவைத்துள்ளது. குழந்தை துர்க்காவின் பிறப்பு நிறை 2.8 கிலோ கிராம் ஆகும்.

இப்படி நடப்பது உலகிலேயே இது தான் முதல் தடவை என்று கருதப்படும் நிலையில் மருத்துவர்கள் அந்தக் குழந் தையை 'அதிசயக் குழந்தை' என்று வர்ணிக்கிறார்கள். (அ-02)

## வெள்ளவத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலை நடத்தியதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டுக்கு செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காகக் கொழும்பு வந்திருந்த இளைஞன் ஒருவர், கொழும்பில் நிறுவப்பட்டுள்ள இந்திய தொலைத்தொடர்பு நிறுவனத்தில் வேலை பெறுவதற்காக நேர்முகப் பரீட்சைக்காகக் கொழும்பு வந்திருந்த இளைஞருமே கொல்லப்பட்டவர்களாவர்.

பஸ் தரிப்பு இடத்தில் பஸ்சுக்காகக் காத்திருந்தவர்களே இதில் சிக்கினர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (அ-1-2)


**சுகாதார முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை வழிகாட்டல் வகுப்பு**

இன்று ஞாயிறு தொடக்கம் திங்கள், செவ்வாய், புதன்
1.00 மணி - 4.30 மணி வரை
வியாழன் - 9.00 - 3.00 மணி வரை
பரீட்சைக்கான ஐந்து வகை மாதிரி வினாத்தாள்களும் விளக்கப்படும்.

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக).


## கண்ணீர் அஞ்சலி



அமரர்
### துரையப்பா வைத்திலிங்கம்
(ஓய்வுபெற்ற மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

முன்னாள் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் துரையப்பா வைத்திலிங்கம் அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

சாரதிகள் சங்கம், மாவட்டசெயலகம்,யாழ்ப்பாணம்.
(74970)

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தசாமி செல்லம்மா

மாசேரி, வரணியைப் பிறப்பிடமாகவும் மடத்தடி கிழக்கு, சாவகச்சேரியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி செல்லம்மா நேற்று (31.05.2008) சனிக்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கர் -கற்பாத்தை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு. திருமதி சேதுநாதபிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சே.கந்தசாமியின் அன்பு மனைவியும் நாகேஸ்வரி, மனோகரன் (சுவிஸ்), யோகேஸ்வரி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயும், சிவஞானசோதி, சுகிர்தராணி (சுவிஸ்), அருணகிரிநாதன் (நோர்வே) ஆகியோரின் மாமியும், மதன்ராஜ் (லண்டன்), சுதர்சினி, சுகன்யா, விஜிதா, மதுஷிகா (நோர்வே), தஷாந் (நோர்வே), பாமிலன் (சுவிஸ்), ஸ்ரனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சலோமி, சிபியா ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்றவர்களான கந்தையா, இராசையா மற்றும் பொன்னம்மா ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நேற்று (31.05.2008) சனிக்கிழமை நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி கிழக்கு,
சாவகச்சேரி.

தகவல்:
செ.சிவஞானசோதி
(மருமகன்).

(74976)


**LAPTOPs**
மலிவு விலையில்
HP COMPAQ
IBM LENOVA கணனிகள்
INTEL, CELERON, DUAL CORE, CORE 2 DUO, 512MB RAM, 80GB HARD DISK, WEBCAM, WIRELESS.
ஆசிரியர், வைத்தியர், விரிவுரையாளர், நிர்வாகி, NGO Workersக்கு மிகவும் பொருத்தமானது.
மூன்று வருட உத்தரவாதத்துடன்
POWER MAN SYSTEM
149, KASTHURIAR ROAD, JAFFNA. T.P: 2228147

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க
மீண்டும் ஒரு விலைக்கழிவு.....

2.0 GHz Intel Pentium Dual Core
ASUS Board (P5GC-MX-1333)
1GB DDR-II Kingston Ram
160 GB SATA HDD
15" View Sonic Monitor
ATX Cabinet
SONY DVD Writer
UPS (EAST)
PS/2 Key Board
Optical Mouse & Pad
Dust cover
3 வருட முழு உத்தரவாதத்துடன்...
54,000

3.0 GHz Intel Pentium
ASUS Board (P5GC-MX-1333)
1GB DDR-II Kingston Ram
80 GB SATA HDD
17" View Sonic Monitor
ATX Cabinet
SONY DVD Writer
UPS (EAST)
PS/2 Key Board
Optical Mouse & Pad
Dust cover
3 வருட முழு உத்தரவாதத்துடன்...
53,500

கணினியில் வைரஸ் தொல்லையா? மொனிற்றர் மற்றும் யு.பி.எஸ் பழுதடைந்துவிட்டதா? எதுவாயினும் எடுத்துவாருங்கள் நிவர்த்தி செய்து தருகின்றோம்.

JAFFNA
MARSHA SYSTEMS (PVT) LTD
# 74, Kannathiddy Junction, Jaffna.
T.P:- 0212229418
0777667108

NELLIADY
TEKNEL COMPUTERS & TECHNOLOGY
384/384, Kodikamam Road, Nelliady.
T.P:- 0777069934

CHAVAKACHCHERI
SCOT COMPUTER CENTRE
Katkuly 1st Lane, Post Office Road, Chavakachcheri.
T.P:- 0776701394

**UNIT**
Jaffna Nelliady
Intel Dual Core 2.0Ghz, Asus P5GC-Mx, 512mb DDR2 Kingston, 80Gb Sata HDD, 17" Samsung / Intex Color CRT, ATX Case with SMPS, DVD-Writter, UPS, Ps2 Keyboard, Mouse & Speaker 53,000/-

Mother Boards
Asus P5GC-MX1333Mhz 6950/-
Foxconn intel 945 6300/-
AsRock LGA 5500/-
Ecs Intel 945 1333Mhz 6300/-

Rams
Kingston DDR1 256-2500/- 512- 3750/-
Kingston DDR2 1Gb-2750/- 512- 1550/-

Hard Disks & Optical Drives
40Gb IDE 4800/-
80Gb IDE 5800/-
250Gb Sata 8600/-
DVD-RW 3750/-
External Enclosure USB 4750/-

Monitors
17" Samsung / Intex Flat CRT 14500/-
17" Samsung LCD Wide 25500/-
19" Samsung LCD Wide 31000/-
128Mb AGPVGA 4750/-
256Mb PCI EXPRESS VGA 7500/-

Power & Casings
ATX LGA Casings with SMPS 4050/-
SMPS - ATX LGA 500W 2500/-

Toners:
HP 12A, 13A, 15A, 35A, 49A, 53A&92A
Canon EP22, 25 & 26, 303, 308

Others
Keyboard Normal 500 MultiMedia 900
Mouse Optical 500/-, 600/-, 900/-, 1500/-
Speaker 650/-, 1250/- & 2500/-
Woofers Creative / MicroLab 4000/-
Printer & Scanners
Hp D1460-6250/-, HP P1005-16900/-
Canon Lide 25 6900/-, HP G2410 - 11900/-

Special Reduction for Dealers, Assemblers, Schools, Go's & NGO's
Brand New Laptops From 59000/-
New Intel Pentium From 39000/-
We Are Not Big But The Best
மனோகரா சந்தி, 347, K.K.S Road, Jaffna, 4590720,2228844
MMV Road, Bus Stand, Nelliady, Karaveddy

உதயன் ஊடக அனுசரணையுடன்
Dr.S.சிவன்சுதன் மற்றும் மருத்துவபீட மாணவர்கள் (குழு IV 26 ஆம் அணி) வெளியிடும்
'நலம்புடன் ஒரு குருஷேத்திரம்' இருவெட்டு வெளியீடு
இடம்: கைலாசபதி கலையரங்கம், யாழ்.பல்கலைக்கழகம்
காலம்: 01.06.2008 ஞாயிறு 9.30 மணி


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.06.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org